
www.padippakam.com

நவம்பர்
2005
ரூ.15

# புதிய கோடாங்கி





– நேர் காணல்
ரூத் மனோரமா

படிப்பகம்

www.padippakam.com

**புதிய கோடாங்கி** மற்றும் **பாலம்** இணைந்து வழங்கும்

# சமூக நீதி விருது

| நாள் : 6.11.2005 | நேரம் : மாலை 4 மணி | இடம் : மெரினா டவர்ஸ், எழும்பூர், சென்னை-8 |
|---|---|---|

வரவேற்புரை

**கிருத்துதாசு காந்தி** இ.ஆ.ப.

*(பாலம்)*

அறிமுக உரை

**ப்ரதிபா ஜெயச்சந்திரன்**

*(புதிய கோடாங்கி)*

தலைமை : பேராயர் டாக்டர் **மாசிலாமணி அசாரியா**

சிறப்பு விருந்தினர் : டாக்டர் **ஜேப்பியார்**

*(வேந்தர், சத்தியபாமா நிகர்நிலை பல்கலைக்கழகம்)*

வாழ்த்துரை :

**சுபாஷ் பரணி** ஐ.பி.எஸ். ,
கூடுதல் காவல்துறை தலைவர் *(சட்டம் மற்றும் ஒழுங்கு)*, கர்நாடகா

**தங்கராஜ்** ஐ.ஏ.எஸ்.
செயலர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, கர்நாடக அரசு.

**பசவராஜ்** ஐ.ஏ.எஸ்.
ஆணையர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, கர்நாடக அரசு.

**சிவராமு** ஐ.ஏ.எஸ்.
ஆணையர், சமூகநலத் துறை, கர்நாடக அரசு

**லட்சுமி நாராயணன்** ஐ.ஏ.எஸ்.
ஆணையர், வீட்டுவசதி வாரியம், கர்நாடக அரசு.

**மணிவாசகம்** ஐ.ஆர்.எஸ்.
கூடுதல் துறைத் தலைவர், சுங்கம் மற்றும் கலால், கர்நாடகம்

## சமூக நீதி விருது வழங்குதல்

| அளிப்பவர் | பெறுபவர் |
|---|---|
| **தி. தீத்தன்** ஐ.ஏ. ஏ.எஸ். | **ரூத் மனோரமா** அமைப்பாளர், தே.பெ. கூட்டமைப்பு |
| **பாத்திமா பெர்னார்டு** | **வி.டி. ராஜசேகர்** ஆசிரியர், 'தலித் வாய்ஸ்' |
| **சந்ரு** மூத்த வழக்குரைஞர் | **ஜோதி ராஜ்** இயக்குநர், 'ரெட்ஸ்' |
| டாக்டர் **வசந்தா கந்தசாமி** | **எம்.சி. ராஜ்** ஆசிரியர், 'தலித்தாலஜி' |

சிறப்பு அழைப்பாளர்கள்

**மோஹனா பரணி ● பூர்ணா தங்கராஜ் ● தனலட்சுமி பசவராஜ் ● வாணி சிவராமு**
**● அருணா லட்சுமிநாராயணன் ● ஜெயலட்சுமி மணிவாசகம்**

தொகுப்புரை
**சிவகாமி** ஐ.ஏ.எஸ்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு
**மீனா கந்தசாமி**

நன்றியுரை
**கௌதம சன்னா**

www.padippakam.com



புதிய

கோடாங்கி

மலர் 5 - இதழ் 5
நவம்பர் 2005

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம் - ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ்: US $ 2

ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 10,000/-
முழுப்பக்கம் ரூ. 20,000/-
பின்/உள் அட்டை ரூ. 50,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டார்
கே.கே. நகர்
சென்னை 600078
Mobile : 98404 - 49204
puthiakodangi@yahoo.co.in

தலித் நில உரிமை குறித்த தீவிரமான பிரச்சாரம் தமிழகம் முழுவதிலும் பரவலாக நடந்து கொண்டிருக்கிறது. செய்தித்தாள்கள், பிற பத்திரிக்கைகள் இவற்றைப் பற்றி ஏதும் எழுதுவதில்லை. இது புரிந்துகொள்ளக் கூடியதுதான். ஆனால் தலித் மக்கள் பிரச்சாரத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்கிறார்கள். பல தரப்பிலிருந்தும் தலித் ஆர்வலர்கள் இப்பிரச்சாரத்தில் கலந்துகொள்ள முன்வருகிறார்கள். இப்பிரச்சாரங்களினால் ஏதேனும் சாதிக்க முடியுமா என்ற கேள்விக்கு அது நமது ஆர்வத்தையும் அக்கறையையும் பொறுத்தது என்பதே பதிலாயிருக்கிறது.

●

சாகித்ய அகாதமிக்காக அயோத்திதாசர் பற்றி கௌதம சன்னா எழுதிய நூலும், இரட்டைமலை சீனிவாசன் குறித்து ப்ரதிபா ஜெயச்சந்திரன் எழுதிய நூலும், சிவகாமி தொகுத்த தலித் சிறுகதைத் தொகுப்பும் விரைவில் சாகித்ய அகாதமி வெளியீடுகளாக வரும்.

●

இவ்விதழில் மீனா கந்தசாமி, ரூத் மனோரமாவை நேர்முகம் கண்டு எழுதியவை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. இப்பதிவுகள் ஆங்கிலத்தில் மேற்கொள்ளப்பட்டதற்குக் காரணம் அவை ஆங்கிலத்திலும் நூலாக வெளிவர வேண்டும் என்பதே.

●

பொதுவாக, தமிழகத்தைச் சேர்ந்த IAS மற்றும் IPS அதிகாரிகள் சாதி ஒடுக்குமுறையை எதிர்த்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதில்லை. தனியர்கள் முன்னேறினால் போதுமானது என்ற கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள், அல்லது தன்னால் இயன்றவற்றை தனிப்பட்ட முறையில் செய்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். ஒரு சிலர் இது சமுதாயப்பணி என்றுணர்ந்து செயல்படுகின்றார்கள். ஆனால் கர்நாடக மாநிலத்தில் தலித் அதிகாரிகளில் பலர் சமுதாயப் பணியைச் செய்வதைத் தங்கள் கடமையாகவே கருதுகிறார்கள். நவம்பர் 6-ஆம் தேதி சென்னையில் நடக்கும் 'சமூக நீதி விருது' வழங்கும் விழாவில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளில் ஆறு பேர் பாராட்டுப் பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொள்கின்றனர். இது தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு

●

புதிய கோடாங்கியை உறவினர் வட்டத்துக்கும், நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

●

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


| | | |
|---|---|---|
| தலித் நிலவுரிமை கருத்தரங்கம் | லலிதா | 3 |
| வரலாற்றில் யூகங்கள் - தொடர் | சிவகாமி | 7 |
| கண் மூடும் வேளையிலே - சிறுகதை | மு. அம்சா | 11 |
| ரூத் மனோரமாவுடன் ஓர் நேர்காணல் | மீனா கந்தசாமி | 16 |
| வரலாற்றை மொழிதல் - தொடர் | ஸ்டாலின் ராஜாங்கம் | 22 |
| மேன்சன் மனுஷன் - நூல் விமர்சனம் | பால்ராஜ் செல்வம் | 24 |
| தமிழக பழங்குடியினரின் நிலவுரிமை மாநாடு | விழி.பா. இதயவேந்தன் | 26 |
| வரலாறு யாரை விடுதலை செய்யும் - தொடர் | அ. ராமசாமி | 30 |
| பரிதாபம் - கவிதை | பொன். குமார் | 31 |
| இந்திய அரசமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் இசைந்தது ஏன் | கௌதம சன்னா | 32 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | சந்திரன் | 36 |
| ஜான் தாமஸ் - ஏழுமலைக்கு வீரவணக்கம் | தலித் ராமதாஸ் | 37 |
| மாறுவேசம் - தொடர்கதை | சந்திரன் | 43 |
| தாழ்த்தப்பட்டோரின் துணி வெளுக்கும் வண்ணார்கள் | இ. ரகுபதி | 46 |
| ஹைகூ கவிதைகளில் மனிதம் | விழி.பா. இதயவேந்தன் | 48 |
| கேள்வி பதில் | முனிமா | 51 |
| தமிழக பழங்குடியினர் நிலவுரிமை | சிவகாமி | 53 |


படிப்பகம்

www.padippakam.com

# தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

லலிதா




கருத்தரங்கத்தில் சிவகாமி, லலிதா, சண்முகசுந்தரம், பேரா. கல்யாணி




கருத்தரங்கத்தில் உரையாற்றும் கருப்பன் இ.ஆ.ப.( ஓய்வு)



கருத்தரங்கத்தில் பங்கேற்றவர்கள்

தலித் நிலவுரிமை குறித்த கருத்தரங்கம் 21.9.2005 அன்று பாண்டிச்சேரி உழவர்கரையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் எழுத்தாளர்கள் சிவகாமி, சன்னா, லால்குடி சண்முகசுந்தரம், தங்கவயல் வாணிதாசன், கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தீபர் டிரஸ்ட் (தஞ்சாவூர் மாவட்டம்), RHADA, கன்னியமங்கலம் (காஞ்சிபுரம் மாவட்டம்), PWC, மரக்காணம் பகுதி (விழுப்புரம் மாவட்டம்), SSS, காவேரிப்பாக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்), ARPED, சந்தவாசல் (திருவண்ணாமலை மாவட்டம்), லீட் (கரூர் மாவட்டம்), CFR (திருவண்ணாமலை மாவட்டம்), ம.வி.மே.ச. (வேலூர் மாவட்டம்), மகிழ்ந்த பெண்கள் அறக்கட்டளை (வேலூர் மாவட்டம்), PWC, தாழங்காடு பகுதி (விழுப்புரம் மாவட்டம்), RWS (திருவண்ணா மலை மாவட்டம்), லீட் (கடலூர் மாவட்டம்), பெண்கள் பகுத்தறிவு இயக்கம் (பாண்டிச்சேரி) ஆகிய அமைப்பு களின் பிரதிநிதிகளும், ஈரோடு மாவட்ட வடகுறிச்சிப் பகுதி, திருச்சி மாவட்ட நெய்குளம் பகுதி, புதுக்கோட்டை முதலிய இடங்களிலிருந்து வந்திருந்தவர் களும் கருத்தரங்கில் பங்கேற்றனர். அவர்களின் உரை யிலிருந்து ஒரு சில பகுதிகள்:

***சிவகாமி.***

பஞ்சமி நிலங்கள் பல இடங்களில் குவிந்து கிடக்கின்றன. இந்த நிலங்களை நாம் மீட்டெடுக்க வேண்டும். நிலங்கள் நமக்கு சொந்தமானவை. அவற்றை நாம் போராட்டம், பேரணி, ஆர்ப்பாட்டம், அதிகாரிகளிடம் மனு கொடுத்தல் என்று பல வழிகளில் போராடி மீட்டாக வேண்டும். கண்டிப்பாக ஒரு தலித் குடும்பத்திற்கு 5 ஏக்கர் நிலம் அரசு வழங்க வேண்டும். இதுவரை எந்த ஆட்சியிலும் தலித் நிலங்கள் குறித்து பேசப்படவில்லை. பஞ்சமி நிலங்களை மீட்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் வருகின்ற தேர்தல் நேரத்தில் அரசாங்கத்திடம் தலித் வாழ்வுரிமை, நிலவுரிமை குறித்து கோரிக்கையாக வைக்க வேண்டும். இதற்காக டிசம்பர் மாதம் மாநாடு நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் நமது கோரிக்கையை முன் வைக்க வேண்டும். அதற்கு முன்பாக பஞ்சமி நிலம் மற்றும் நில மீட்பு சம்பந்தமாக முழு விவரங்களையும் நாம் தெரிந்து, புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் நம் போராட்டம் வலுவானதாக அமையும்.

1981-இல் செங்கல்பட்டு ஆட்சியராக இருந்த டிரமென்ஹெரே அறிக்கையின் அடிப்படையில் காடு, தரிசு போன்ற நிலங்கள் தலித்துகளுக்கு பஞ்சமி நிலங்களாக வழங்கப்பட்டன. இப்பஞ்சமி நிலங்களை வழங்கப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு விற்கவோ, அடமானம் வைக்கவோ, தானம் செய்யவோ, குத்தகைக்கு விடவோ முடியாது. ஆனால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு தலித்துகளுக்கு மட்டும் விற்கலாம். இதை மீறினால் அது சட்டப்படி செல்லுபடியாகாது. ஆனால் சாதி இந்துக்கள் நாளடைவில் இந்நிலங்களை கையகப்படுத்தி தலித்துகளை நிலமற்றவர்களாக்கி விட்டனர். தங்களுக்குச் சொந்தமான நிலங்களை மீட்கும் முதல் போராட்டமாக காரணை போராட்டம் அமைந்தது. அதன்


படிப்பகம்

www.padippakam.com

தொடர்ச்சியாக திரு. கருப்பன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் தலைமையில் நில மீட்புக் குழு உருவாக்கப்பட்டு பல நிலங்கள் மீட்கப்பட்டன.

நம் நிலத்தை மீட்க வேண்டும், அடிப்படை உரிமைகள் பெறப்பட வேண்டும், ஆதிக்க சக்திகளிடம் குவிந்துள்ள நிலங்களை மீட்க வேண்டும், தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி முறையாக செலவிடப்பட வேண்டும் என்ற நான்கு கோரிக்கைகளை முன்வைத்து மாநாடு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாநாட்டில் நம் மக்கள் அனைவரும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் குறைந்த பட்சம் 13,000 நபர்கள் மாநாட்டிற்கு வர வேண்டும்.

"இதுவரை எந்த ஆட்சியிலும் தலித் நிலங்கள் குறித்து பேசப்படவில்லை. பஞ்சமி நிலங்களை மீட்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் வருகின்ற தேர்தல் நேரத்தில் அரசாங்கத்திடம் தலித் வாழ்வுரிமை, நிலவுரிமை குறித்து கோரிக்கையாக வைக்க வேண்டும்."

***கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு)***

தமிழகத்தில் பல மாவட்டங்களில் பஞ்சமி நிலங்கள் இருக்கின்றன. இந்த பஞ்சமி நிலங்களை நாம் மீட்டாக வேண்டும். நிலமற்ற கூலிகளாக இருக்கும் தலித் மக்களுக்கு அவர்களின் வாழ்வுரிமையை வென்றெடுக்க நிலங்களை மீட்டாக வேண்டும்.

தலித் மக்கள் வீட்டு மனை இல்லாமலும், சுடுகாடு இல்லாமலும் வாழ்கின்றனர். ஆதிக்க சாதியிடம் இருக்கின்ற நிலங்களை மீட்டு தலித் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள நில அளவையை அரசு வெளியிட வேண்டும். நிலமற்ற தலித் மக்களுக்கு நிலத்தை பகிர்ந்தளிக்க வேண்டும். தலித் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. தலித் தெருக்களில் மின்வசதி இல்லை, குடிதண்ணீர் இல்லை. இது போன்ற அடிப்படை வசதிகளை நாம் மீட்டாக வேண்டும்.

தமிழகத்தில் 1,56,000 சுயஉதவி குழுக்கள் உள்ளன. வருடத்திற்கு 5 லட்சம் நபர்களுக்கு கடன் வழங்க வேண்டும். ஆனால் அரசு இதை செய்வது கிடையாது. நாம் எதையும் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறப்புக் கூறு திட்டத்தின் பயன்களை அனைத்து தலித் மக்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். இந்த திட்டத்தை நாம் முறையாக அணுகி பயன்பெற வேண்டும். இந்த சிறப்புக்கூறு திட்டத்தில் 1700 கோடி ரூபாய் தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தொகை அப்படியே உள்ளது. அரசும் இதை தலித் மக்களுக்கு வழங்குவது இல்லை. மக்களும் இதை பயன்படுத்துவது இல்லை.

1700 ரூபாயை தமிழக தலித் மக்களுக்கு பகிர்ந்து கொடுத்தால் நிச்சயம் அனைவரும் பயன்பெறுவார்கள். இந்த பணம் நமக்கு வரவேண்டியது.

தலித் நிலவுரிமைகள், அடிப்படைப் பிரச்சினைகள், தலித் சிந்தனைகள் குறித்து புதிய கோடாங்கி, தலித் முரசு போன்ற பத்திரிக்கைகளில் வெளிவருகின்றன. இதனை படித்து தலித் பிரச்சினைகள் குறித்து நாம் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

பஞ்சமி நிலம் குறித்த நில உச்சவரம்பு சட்டம், நில சீர்திருத்த சட்டங்களை ஒழுங்காக அமல்படுத்த வேண்டும். இதை அரசாங்கம் ஒழுங்காக பின்பற்றினால் நிச்சயம் அனைத்து தலித்துகளும் நிலம் பெற முடியும்.

மனிதனின் அவசிய தேவைகளில் நிலம் என்பது மிக, மிக முக்கியமானதாகும். ஆகவே நம் நிலத்தை மீட்க நாம் போராட தயாராக இருக்க வேண்டும்.

வருகின்ற டிசம்பர் மாநாட்டிற்கு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 10,000 முதல் 20,000 வரை மக்களை திரட்டி நம் சக்தியை வெளிப்படுத்த வேண்டும்.

***சன்னா***

நூறு ஆண்டுகளுக்கு முன்பு தலித்துகளுக்கு ஓட்டு உரிமை கிடையாது. 5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு மட்டும் ஓட்டு போடும் உரிமை இருந்தது. ஆனால் அப்போது தலித்துகளுக்கு நிலம் கிடையாது. இதனால் தலித்துகள் ஓட்டு உரிமையை இழந்தனர்.

ஆரம்ப காலத்தில் ஜமீந்தாரிகள், பட்டதாரிகள், ஆதிக்க சாதி அரசு பணியாளர்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்தனர். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இதனை எதிர்த்து 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டும் என போராடினார். காந்தி "தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்றும் தெரியாதவர்கள். அவர்களுக்கு ஓட்டுரிமை வழங்கினால் ஓட்டுகளை வீணடித்து விடுவார்கள்" என்று கூறி இதை எதிர்த்தார். ஆனால் அம்பேத்கரோ இக்கருத்தை எதிர்த்துப் போராடி அனைவருக்கும் வாக்குரிமை பெற்றுத் தந்தார்.

ரெட்டமலை சீனிவாசன் அவர்கள் பஞ்சமி நிலத்திற்காக போராடியவர். அவர் பல கோரிக்கைகளை அரசுக்கு முன்வைத்து போராடிய பிறகுதான் தமிழகத்தில் 12 லட்சம் ஏக்கர் நிலங்கள் பெறப்பட்டன. இதுதான் பஞ்சமி நிலங்கள். ஆனால் தற்போது இந்த 12 லட்சம் ஏக்கர் நிலங்கள் தலித்துகளிடம் இல்லை. இதற்கெல்லாம் காரணம் நம்மிடையேயுள்ள ஒற்றுமையின்மை தான் என்று கூறி வருகிறோம். இக்கூற்றை நாமே கூறுவது பெருந்தவறு. ஒற்றுமையின்மை, உட்சாதிப்பூசல் என்பவையெல்லாம் எந்த சாதியில் இல்லை? பார்ப்பனர்களிடம் இருக்கிறது; வன்னியர்களிடம் இருக்கிறது. எனவே இப்படிப் பேசுவதை நாம் முதலில் நிறுத்த வேண்டும். நம்மிடையே உட்சாதிப்பிரிவு என்ற மனப்பான்மையை தகர்க்க வேண்டும்.

ஆதிக்க சாதியினரும், அரசியல்வாதிகளும் தலித் மக்களிடம் ஒற்றுமை இல்லை என்று சொல்லிச் சொல்லி ஒரு மாயையை ஏற்படுத்தி உள்ளார்கள். இது தவறு என்பதை நாம் ஒற்றுமையாக இருந்து நிரூபிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இன்று ஆதிக்க சாதியினர் நிலவுடைமையாளர்களாக உள்ளனர் என்றால் நம் நிலங்களையும் அவர்கள் நிலங்களுக்கு அருகில் இருந்த நிலங்களையும் திருடிச் சேர்த்தது ஆகும்.

ஆனால் நாம் யார் சொத்தையும் அபகரிக்க வில்லை. நமக்கு வழங்கப்பட்ட, நமக்கே சொந்தமான நிலங்களை மீட்க வேண்டும். அதை மீட்டு நம்முடைய வாழ்வுரிமையைப் பெற வேண்டும். இதற்காக நாம் போராடத் தயாராக இருக்க வேண்டும்.

***சண்முகசுந்தரம்***

ரெட்டமலை சீனிவாசன், அயோத்திதாசப் பண்டிதர், அம்பேத்கர் போன்றவர்கள் போராடி நமக்கு 12 லட்சம் ஏக்கர் நிலம் பெற்றுத் தந்தார்கள். ஆனால் அந்த நிலம் இப்போது நம்மிடையே இல்லை. அனைத்து DC நிலங்களும் ஆதிக்க சாதியினர் கைவசம் போய்விட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களின் பஞ்சமி நிலங்களை மீட்கக்கோரி போராட்டம் நடத்தினோம். போராட்டத்தை கையில் எடுக்கும்போது போலீஸ் அடக்குமுறை இருந்தது. இதையெல்லாம் எதிர்த்து போராட்டம் நடத்தினோம்.

இப்படியானதொரு போராட்டத்தின் மூலம் லால்குடி பகுதியில் 8 ஏக்கர் நிலத்தை சட்ட ரீதியாக மீட்டுள்ளோம். இதைப்போல நமக்குச் சொந்தமான அனைத்து பஞ்சமி நிலங்களையும் மீட்டெடுக்க வேண்டும்.

வருகின்ற டிசம்பர் 12-ஆம் தேதி நடைபெறவிருக்கும் மாநாட்டில் அனைத்து தலித்துகளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

***தங்கவயல் வாணிதாசன்***

நிலங்களில் இரண்டு வகை உண்டு. 1. தாழ்த்தப்பட்ட தலைவர்கள் ஆங்கிலேயரிடமிருந்து பெற்ற நிலங்கள். 2. அரசு ஆட்சியின்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள். ஆனால் தற்போது இந்த நிலங்கள் எல்லாம் எங்கே உள்ளன என்று தெரியவில்லை.

அரசு தரிசு நில மேம்பாட்டு திட்டக் குழு அமைத்துள்ளது. அதேபோல DC நில மீட்புக் குழு ஒன்றும் அமைக்க வேண்டும்.

நில மீட்புப் போராட்டத்தை நாம் தீவிரமாக கையில் எடுக்க வேண்டும். பெண்கள் அதில் பங்கு கொள்ள முன்வர வேண்டும். கிராம மக்கள் கிராம அலுவலரை சந்தித்து பஞ்சமி நில அறிக்கையை பெற்றுப் போராட வேண்டும்.

***மாநாடு பற்றி சிவகாமியின் வேண்டுகோள்***

■ டிசம்பர் 12, 2005 மாநாட்டுத் தேதியாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் பஞ்சமி நிலம் மீட்பு பற்றியும், அடிப்படைப் பிரச்சினைகள், சுடுகாட்டுப் பிரச்சினை, வீட்டுமனைப் பட்டா, தண்ணீர், மின்சாரம், சாலை வசதி போன்ற பிரச்சினைகள் குறித்தும் பேசப்படும்.

■ மாநாடு குறித்து அவரவர் பகுதியில் கிராம அளவில் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

> “ ஆதிக்க சாதியினரும், அரசியல்வாதிகளும் தலித் மக்களிடம் ஒற்றுமை இல்லை என்று சொல்லிச் சொல்லி ஒரு மாயையை ஏற்படுத்தி உள்ளார்கள். இது தவறு என்பதை நாம் ஒற்றுமையாக இருந்து நிரூபிக்க வேண்டும். ”

■ துண்டறிக்கைகளை வெளியிட வேண்டும்.

■ மாநாடு குறித்து மக்களிடம் பேசி மக்களை ஒன்று திரட்ட வேண்டும்.

■ மாநாட்டிற்கு வருவதற்கான செலவுகளை அவரவர் பார்த்துக்கொள்ள வேண்டும். மாநாட்டிற்கு வரும்போது உணவு தயார் செய்து கொண்டு வரவும்.

■ இது நம்முடைய உரிமைக்கான பிரச்சினை என்பதை உணர்ந்து பங்கெடுக்க வேண்டும்.

■ மாவட்டம் வாரியாக பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களிடம் உங்கள் கருத்துக் களை தெரிவிக்கவும்.

■ மாநாடு பற்றிய செய்தியைப் பெற மாவட்ட பொறுப்பாளர்களின் தொலைபேசி எண்களை பெற்றுக்கொள்ளவும்.

***மாவட்ட வாரியாக பொறுப்பாளர்களின் பெயர்கள்***

திருவள்ளூர் (இன்பகுமார், ஜாய்ஸ் ரோஸ்லின்)
வேலூர் (தேவசகாயம்)
திருச்சி (ராதா சண்முகந்தரம், இருதயமேரி, ராஜேந்திரன்)
பெரம்பலூர் (லீட் நிறுவனம்)
கரூர் (லீட் நிறுவனம்)
சிவகங்கை ( சுப்பு, வெரோனிக்கா)
கடலூர் (ஜான் பிரிட்டோ)
புதுவை (லலிதா)
ஈரோடு (லீட் தங்கமணி)
திருவண்ணாமலை (மணவாளன்)
காஞ்சிபுரம் (வைரபாண்டியன், ராதா நிறுவனம்)
தஞ்சை (தீபம் டிரஸ்ட்)
விழுப்புரம் (அன்னை தெரேசா மகளிர் மன்றம்)
புதுக்கோட்டை (இருதயமேரி)

***பங்கேற்றோரின் கருத்துக்கள்***

***வைரபாண்டியன், காஞ்சிபுரம் மாவட்டம்***

பஞ்சமி நிலங்களை மீட்டெடுக்க கட்சிபேதமின்றி, தலித் என்ற ஒரே தகுதியுடன் முன்வர வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் 10,000 நபர்கள் பங்கு கொள்ள வேண்டும். அக்டோபர் முதல் வாரத்தில் நிலம் மீட்பு பற்றி கூட்டம் நடத்தி மாநாட்டின் முன் ஏற்பாடு பற்றி பேசுவேன்.



படிப்பகம்

www.padippakam.com

***தேவஆசீர்வாதம், வேலூர் மாவட்டம்***

வேலூர் மாவட்டத்தில் 70 ஏக்கர் DC நிலத்தை கண்டுபிடித்துள்ளோம். அதற்காக பல போராட்டம் நடத்தியுள்ளோம். மேலும் தொடர் நிகழ்ச்சியாக கண்காணித்து வருகிறோம். டிசம்பர் மாநாட்டிற்கு அனைத்து இயக்கங்களையும் ஒன்றிணைத்து மக்களை ஒன்று திரட்டுவோம்.

***இருதயமேரி, புதுக்கோட்டை***

எங்கள் பகுதியில் பஞ்சமி நிலம் குறித்து ஆய்வு செய்துள்ளோம். ஒரு கிராமத்தில் 156 ஏக்கர் நிலம் உள்ளதை கண்டுபிடித்துள்ளோம். போராட்டம் நடத்தவும், கருத்தரங்கு நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். மாநாட்டில் மக்களை பங்கெடுக்க வைப்போம்.

***அ.தெ.ம. மன்றம், விழுப்புரம் மாவட்டம்***

வழுதாவூரில் உள்ள தரிசு நிலங்களையும், கோவில் நிலங்களையும் தெரிந்துகொள்ள முயற்சித்து வருகிறோம். இதில் மகளிரை ஒன்றிணைப்போம். மாநாட்டிற்கு எங்கள் கிராமத்திலிருந்து 2000 நபர்களை அழைத்து வருவேன்.

***ராஜேந்திரன், பெரம்பலூர் மாவட்டம்***

நாங்கள் கல்லூரி மாணவர்கள் மத்தியில் நில வுரிமை குறித்து பேசி வருகிறோம். டிசம்பர் 12 மாநாட்டிற்கு மாணவர்களிடம் பேசி அவர்களை ஒன்று திரட்டு வேன்.

***மன்னாடிப்பட்டு கொம்யூன், புதுவை***

எங்கள் பகுதியில் புறம்போக்கு மற்றும் கோவில் நிலங்கள் ஆதிக்க சாதியிடம் உள்ளன. தலித் மக்களின் சுடுகாடு கோவில் நிலத்தில் உள்ளதால் சீரமைப்புப் பணி செய்ய முடியாது என அரசாங்கம் கூறியுள்ளது. அதற்காகப் போராடி வருகிறோம். டிசம்பர் மாநாட்டிற்கு புதுவையின் சார்பில் மக்களை திரட்டுவோம்.

***செல்லம்மாள், கரூர் மாவட்டம்***

டிசம்பர் மாநாட்டிற்கு கண்டிப்பாக 12,000 நபர்களை திரட்டுவோம்.

***கல்யாணி***

தமிழகத்தில் 200 விழுக்காடு பழங்குடியினர் இருக்கிறார்கள். அவர்கள் இன்றளவும் நிலம் இல்லா மலும், வீட்டுமனைப்பட்டா இல்லாமலும் குடிசையில் வாழ்ந்து வருகிறார்கள். அதனால் SC/ ST அனைவரும் சேர்ந்து பஞ்சமி நிலம் மீட்கவும், வீட்டுமனைப் பட்டா பெறவும் போராட வேண்டும் நமது அடைப்படை உரிமை வாழ்வுரிமைக்காக குரல் எழுப்ப வேண்டும் திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய மூன்று மாவட்டத்திலும் பழங்குடியினர் பாதுகாப்பு இயக்கம் உள்ளது. வருகின்ற டிசம்பர் மாநாட்டிற்கு நம் மக்களை ஒன்று திரட்டி போராட வேண்டும்.

***சிவகாமி***

மாவட்ட பொறுப்பாளர்கள் அந்தந்த பகுதியில் கூட்டம் நடத்தி அதன் விவரங்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும். நவம்பர் முதல் வாரத்தில் மாவட்ட பொறுப்பாளர் கூட்டம் நடைபெறும். மாவட்ட வாரியாக குழு பிரிந்து தங்களின் கருத்துக்களை கலந்துரையாடல் செய்து எங்களுக்கு தெரிவிக்க வேண்டும்.


***தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் சங்கம்***

419-D மலர் குடியிருப்பு
அண்ணா நகர் மேற்கு
சென்னை 600040
(தொலைபேசி 2618 0607)


## வேண்டுகோள்

தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும், தமிழின வளத்தைப் பிற மொழிகளுக்கு அறிமுகப்படுத்திய மொழிபெயர்ப்புக் கலை பற்றிய முறையாகத் தொகுக்கப்பட்ட வரலாறு இல்லை. எனவே அவ்வகையில் இதுபோன்ற தகவல் வங்கி மிகவும் தேவையானது. பிற மொழிகளிலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும் ஆக்கம் செய்த நூல்கள், நூல் ஆசிரியர்கள், பதிப்பாளர்கள், பதிப்பு ஆண்டு போன்ற தகவல்களைத் தந்து, இப்பெரும் பணியில் இணைந்து உதவுமாறு அறிஞர்கள், படைப்பாளிகள், பதிப்பாளர்கள், கல்வி நிலையங்கள், கல்வியாளர்கள், நூலகங்கள் சார்ந்த பெருமக்களை தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் சங்கம் வேண்டுகிறது. இதற்கென அனுப்பட வேண்டிய நபரின் பெயர், முகவரி ஆகியவற்றைத் தெரிவித்தால் தேவையான தகவல்கள் எங்கிருப்பினும் சங்கத்தின் சார்பில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும் அணியமாய் உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

■ சிவகாமி

# வரலாற்றில் யூகங்கள் 2

சென்ற இதழில் தலித்துகள் இந்நாட்டில் நிலைத்த வாழ்வை முதன்முதலில் மேற்கொண்ட அடிப்படையில் பூர்வகுடிகள் என்ற யூகத்தை முன் வைத்து அதற்கான வரலாற்றுத் தடயங்கள் நோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் முன்வைக்கப் பட்டது.

அம்பேத்கர் இக்கருத்தை இவ்வாறு நேரடியாக வலியுறுத்தாவிட்டாலும், தலித்துகளை நொறுக்கப் பட்ட மனிதர்கள் என்ற வகைப்பாட்டில் வைத்துக் காண்கிறார். ஏன் நொறுக்கப்பட்டார்கள் என்பதற்கான அனுமானங்களை முன்வைக்கிறார். அவரது முக்கிய மான கேள்விகளாவன,

- நொறுக்கப்பட்ட மனிதர்கள் ஏன் கிராம ஓரங் களில் வாழ்ந்தார்கள்?
- நொறுக்கப்பட்டதற்கான காரணம் என்ன?

மேற்கண்ட கேள்விகளுக்கு விடையாக, தனது யூகங்களை பதில்களாக வைக்கிறார். அவற்றை சுருக்க மாகக் காண்போம்.

நொறுக்கப்பட்ட மனிதர்கள் கிராமங்களில் மற்ற வர்களோடு ஒன்றாக வாழ்ந்திருந்து, பின் ஏதோ சில கார ணங்களுக்காக விலக்கி வைக்கப்பட்டிருந்தனரா என் றால் இல்லை. ஆரம்பகால முதலே கிராம ஓரங்களில் வசித்திருப்பார்கள் என்பதுதான் ஏற்றுக்கொள்ளக் கூடியது. ஏனெனில் ஒரே மாதிரியாக ஒவ்வொரு கிராமத் திலிருந்தும் அவர்களைக் குடிபெயர்த்து வெளியே அனுப்பியதற்கான வரலாற்றுத் தடயங்களில்லை. அது வும் இந்திய துணைக்கண்டம் முழுதும் இவ்வகையான திடீர் வெளியேற்றம் வல்லமை பெற்ற ஒரு பேரரசன் மூல மாகத்தான் சாத்தியப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட பேரரசன் அக்கால கட்டத்தில் வாழ்ந்ததற்கான வரலாற் றுச் சான்றுகளில்லை. மனு சாஸ்திரம் சண்டாளர் குடி யிருப்பு பற்றி கூறினாலும் அது ஏற்கனவே உள்ள நடை முறைகளை நெறிமுறைப்படுத்தி வலுப்படுத்துவதற்காக எழுதப்பட்ட ஒன்றேயன்றி, அப்படி வெளியேற்றம் நடந்ததற்கான சான்றுகளைக் கூறும் வகையானது இல்லை. எனவே நொறுக்கப்பட்ட மனிதர்கள், அவர் கள் நொறுக்கப்பட்ட காலத்திலிருந்து கிராமத்திற்கு புறம்பே வாழ்ந்தவர்கள் என்பதே ஏற்றுக்கொள்ளக் கூடி யது என்கிறார். நொறுக்கப்பட்டதன் ஆரம்பம் என்பது மனித சமுதாயத்தினர் வேட்டை, மேய்ச்சல் ஆகிய தொழில்களிலிருந்து விவசாயத் தொழிலுக்கு மாறிய போது நேர்ந்தது என்றும்,

அடுத்து, வெவ்வேறு இனக்குழுக்கள் தங்கள் இனம் சார்ந்து தனித்தனியே வாழ்வது அக்கால கட்டத் தில் இயல்பு வாழ்க்கை என்றாலும், ஒரு இனக்குழு சமு தாயத்தின் நடுநாயகமாக விளங்குவதும், மற்றவை படி நிலைகளிலும், ஒரு வேற்று இனம் அவர்களுக்கு முற்றி லும் சேவகம் செய்யும் அடிமை நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளது என்பதும் இந்த இனக் குழுக்கிடையேயான பகைமையையும். அதன் விளைவாக எழுந்த ஒப்பந்தங் களையும் குறிப்பனவாக உள்ளன என்கிறார். இந்த ஒப் பந்தங்களின் விளைவாகவே நொறுக்கப்பட்ட மனிதர் கள் கிராம ஓரங்களில் வாழ்ந்திருக்க வேண்டும் என்கி றார் அம்பேத்கர்.

இந்த இனக்குழுக்களிடையே ஏற்பட்ட பகைமைக் குக் காரணம் புராதன சமுதாயத்தில் ஏற்பட்ட பொருளி யல் மாற்றங்கள். பொருளியல் மாற்றங்கள் என்று கூறிய வுடன் மார்க்ஸியர்களின் வாய்ப்பாடுகளுக்குள் நுழை வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் வெவ்வேறு இனக் குழுக்கள் அடிப்படை என்றிருக்க, ரத்த உறவுகளே இனக்குழுவைத் தீர்மானிப்பதில் முதன்மையாக இருந்து வந்துள்ளது என்பதும், 'கால்நடை திருடும் தொழில்' என்றாலும், விவசாயத் தொழில் என்றாலும் தனது இனக்குழு சார்ந்தோரோடு சொத்துக்களைப் பகிர்ந்து கொள்ள (சமமாக இல்லாவிட்டாலும்) அனுமதிக்கும் பொருளியல் மாற்று இனக்குழுவினரிடம் பங்குபோட் டுக்கொள்ள சம்மதிப்பதில்லை என்பதும் இந்தியப் புராதனப் பொருளியலில் முக்கியப் பங்கு வகித்துள்ளது.

அம்பேத்கர் அவர்களின் கூற்றுப்படி, கால்நடை களைச் செல்வமாகக் கொண்டிருந்த நாடோடி இனக் குழுக்கள் பயிர்த்தொழில் வளர்ச்சியினால் நிலங்களைத் தங்களது செல்வங்கள் எனக் கொண்டபோது அவர்களி டையே சண்டைகள் வலுத்தன. நாடோடி இனக் குழுக் கள் நாடோடித் தன்மையைக் கொண்டிருந்ததற்குக் கார ணம் அவர்களது இயல்பு என்று கொள்ளக் கூடாது. மாறாக பச்சையைத் தேடி அலையும் கால்நடைக் கூட்டங் களைப் பின்தொடர்ந்ததுதான். எல்லோரும் ஒரே சமயத் தில் நாடோடி வாழ்க்கையை கைவிட்டிருக்க முடியாது. சில குழுக்கள் நாடோடிகளாகவே இருந்தபோது சில குழுக்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கலாம். இவ்வாறு சில இனக்குழுக்கள் பயிர்த் தொழிலும், சில இனக் குழுக்கள் கால்நடைத்தொழிலும் இருந்தபோது, பயிர்த் தொழிலின் வளர்ச்சி, விளைவான இனப் பெருக் கம், மேய்ச்சல் தளம் சுருக்கம் காரணமாக இவைகளுக் கிடையே சண்டைகள் வலுத்து சில இனக்குழுக்கள் நொறுக்கப்பட்டன. இதில் நொறுக்கப்பட்டவர்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள். ஏனெனில் அவர்களைத் தாக்கி, அவர்கள் பயிர்களுக்குத் தீயிட்டு கொளுத்தி, அவர்களின் கால்நடைகளை அழிப்பதின் மூலம் அவர்கள் செல்வங்களை, நாடோடிக் குழுவினர் சுலபமாக அழிக்க முடியும். ஆக நொறுக்கப்பட்டவர் கள் இவ்வகையில்தான் நொறுக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்.

இவை யாவும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியன வாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகவும் உள்ளன என்பதைத் தாண்டி வரலாற்று ஆதாரங்கள், அகழ் வாராய்ச்சிகள், சமூகப் பழக்கவழக்கங்களில் இவற்றின் வெளிப்பாடுகள் ஆகியவற்றின் துணைகொண்டு இவற்றை நிறுவ முடியுமா? அதற்கான முயற்சிகளே கீழ்க்கண் டவை.

முதலில் மேய்ப்புத் தொழிலிலிருந்து பயிர்த் தொழிலுக்கு மாறிய காலம் எது? இரும்பு விவசாயத் தொழிலுக்கு அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டு வந்தமையால் இரும்புக் காலமே பயிர்த்தொழிலுக்கு


படிப்பகம்

www.padippakam.com

மாறிய காலமாக வரலாற்றாளரால் கணிக்கப்படுகிறது. பழைய கற்கால மனிதர்கள் பெரும்பாலும் உணவு சேகரிப்பவர்களாகவும், வேட்டையாடுபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். புதிய கற்கால மனிதர்கள் வேட்டை மற்றும் கால்நடைகள் வளர்ப்பதில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். இந்தக் காலகட்டங்கள் முற்றிலுமான சமுதாய மாற்றங்களைக் கூறுவதில்லை. பெரும்பான்மையான மக்களின் பிரதானத் தொழிலின் அடிப்படையிலே இவை வரையறுக்கப்படுகின்றன. எனவே பயிர்த்தொழிலுக்கு மாறிய காலம் என்பது புதிய கற்காலத்திற்கும் இரும்புக் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் என அறுதியிட்டுக் கொள்ளலாம். அவ்வகையில் பார்த்தால், இந்தியாவைப் பொறுத்தவரைக்கும் வரலாற்றாளர்களின் கால வரையறைகள் சரிதானா என்ற அய்யம் எழுவது இயல்பு. ஏனெனில் சிந்துவெளி என்ற பண்பட்டு நாகரிகம் தோன்றி நிலைத்த காலம் கி.மு. 2500-இல். ஆனால் ரிக்வேத மரபினர் காலம் கி.மு. 1500-600. இக்காலம் இந்தியாவின் இரும்புக் காலம் அல்லது புதிய கற்காலத்திற்கும் இரும்புக் காலத்திற்கும் இடைப்பட்ட காலமாகக் கருதப்படுகிறது. இதற்குக் காரணம், வேத மரபு தோன்றிய காலத்திலிருந்து அது இந்திய துணைக் கண்டத்தில் வலுவாக ஆதிக்கம் செலுத்தி வந்ததோடு, சிந்துவெளி நாகரிகம் குறித்த அகழ்வாராய்ச்சி முடிவுகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் கிடைக்க ஆரம்பித்தன. மேலும் இக்கால கட்டத்தைக் குறித்த வரலாற்றுச் சான்றுகள் ஆவன ரிக் வேதம் மற்றும் பிந்திய காலகட்டத்தைச் சேர்ந்த யஜூர், சாம, அதர்வண வேதங்கள், ஆரண்யங்கள், உபநிஷத்துக்களே. இவை யாவும் வேத மரபினர் வழி கிடைத்தவை. ஆகையால் புராதன இந்தியாவின் வரலாறு என்பது ஒருதலைப்பட்சமான அல்லது குறிப்பிட்ட இனக்குழுக்கள் குறித்த பதிவுகள் அல்லது அவர்கள் பார்வையில் பதிந்தவையே. சிந்துவெளி அகழ்வாராய்ச்சி முடிவுகளை மேலும் செழுமைப் படுத்தி முன்னேறிச் செல்ல முடியாதவாறு தடையாயிருப்பது, சிந்துவெளியினரின் எழுத்துக்கள் இன்னும் புரிந்துகொள்ள இயலாத புதிராக இருப்பதுதான்.

எனவே ரிக்வேத காலம் இந்தியாவின் இரும்புக் காலம் என்பதை தற்காலிகமாக ஏற்றுக்கொண்டு நமது ஆய்வைத் துவங்குவோம்.

ஏற்கனவே கூறியதுபோல் ரிக் வேதம் என்பது ஒரு குறிப்பிட்ட இனக் குழுவின் இலக்கியம் அல்லது வேதம். ஆகையால் அந்த இனத்தின் தரப்பிலிருந்து அல்லது அதன் சாயலிலிருந்துதான் அது படைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

ரிக் வேத காலம் என்பது இந்தியப் பொருளாதார வரலாற்றில் 'மேய்ச்சல் பொருளாதாரம்' என்றே அழைக்கப்படுகிறது. "ரிக் வேத குடும்பம் 'பசு' என்பது மாடுகள், ஆடுகள், குதிரைகள் ஆகிய கால்நடைகளோடு மனிதர்களையும் உள்ளடக்கியது. செல்வந்தர்கள் 'கோமட்' என்று அழைக்கப்பட்டனர். அதாவது அதிக அளவில் கால்நடைகளைக் கொண்டிருந்தவர்கள். அவர்களது சண்டைகள் 'கவிஷ்டி' என்றழைக்கப்பட்டன. இதன் அர்த்தம் கால்நடைகளைக் கவர்தல் ஆகும். இனத்தலைவன் 'கோபதி' என அழைக்கப்பட்டான். அவன் வீட்டுப் பெண்கள் 'துஹித்திர்' என அழைக்கப்பட்டனர். அதாவது 'பால் கறப்பவர்' எனப் பொருள். (இன்றும் வேத மரபினர் மணப்பெண்ணை 'துல்ஹன்' என அழைப்பது கவனிக்கத்தக்கது.) "குலங்களும் 'கோத்ரா' என்றே அழைக்கப்பட்டன. இந்தக் கால்நடைகளுக்கான சண்டைகளில் (ஆநிரை கவர்தலில்) கவரப்பட்ட கால்நடைகள் விஷூ, பரிஷத் மூலமாக பகிர்ந்தளிக்கப்பட்டன."[1]

ரிக் வேத மரபினர் அனைவரும் மேய்ச்சல் தொழிலில் மட்டும்தான் ஈடுபட்டு வந்தனர் என்று கொள்ள முடியாது. ரிக் வேதத்தினரின் ஒரு பிரிவினரான பிராமணர், மற்றொரு பிரிவான 'விஷூ'க்களிடமிருந்து தானியத்தை தானமாகப் பெறும் செய்தி காணப்படுகிறது. மேலும் ரிக்வேதம் 'யவ' எனப்படும் பார்லியைப் பற்றி சில இடங்களில் பேசுகிறது. ஏனெனில் பார்லி நீண்ட காலம் சேமித்து வைக்கக்கூடியது என்பதோடு அதன் தட்டை கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்பட்டு வந்தது. ஆகையால் கால்நடைகளைக் கருத்தில் கொண்டுதான் இத்தானியம் இடம் பெறுகிறது. பிந்திய வேதங்களில்தாம் பலவகை தானியங்கள் இடம்பெறுகின்றன. வேதமர்பினரில் விஷூக்களே தானிய உற்பத்தியில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

வேதமரபினர் வரலாற்றில் இரும்பு காலத்தில் வாழ்ந்தவர்கள். எனினும் இரும்பைத் தூய்மையற்ற தாகக் கருதி வந்துள்ளனர். "யாகம் வளர்க்குமிடத்தில், கல்மேல் ஒரு தவளையை வைத்து (அது சாகும் வரை) குச்சியால் அடித்து சாகடிப்பதன் மூலம் யாகம் வளர்க்குமிடம் தூய்மைப்படுத்தப்பட்டது. அதேபோல், இன்றும் பலியிடப்படும் மிருகம் முதலில் மாத்தூணில் (தூபஸ் தம்பம்) கட்டி வைக்கப்பட்டு, அதனுடைய ஒன்பது ஓட்டைகளும் அடைக்கப்பட்டு, குச்சியினால் அடித்து சாகடிக்கப்படும், இரும்பு ஆயுதங்கள் பயன்படுத்தப் படுவதில்லை என்பதும் இதன் தூய்மையற்ற தன்மை கருதித்தான்."[2] பிற்காலத்தில் மனுசாஸ்திரம் வகுத்தவாறு பிராமணர்கள் கலப்பையைத் தொடக்கூடாது என்பதும் இரும்பை ஒட்டிய தீட்டுக் கருத்தியலே.

இரும்பைத் தூய்மையற்றதாகக் கருதிய ரிக்வேத மரபினர் 'அக்னி' எனப்படும் 'தீ'யைத் தூய்மையாகக் கருதி வந்துள்ளனர். அதை படைப்போனின் வாயாகக் கருதி யாகத்தீயில் அவிக்காத உணவுகளையும் மாமிசங்களையும் இட்டனர். வாயிலிருந்து பிறந்தவர் பிராமணர் என்ற பிந்திய காலத்து கருத்தியலை இதன் தொடர்ச்சியாகக் கருத முடியும். ரிக் வேதத்தில் வரும் 'அக்னி'யைப் பற்றிய வருணனையைக் காண்போம். "காற்றினால் அலைக்கழிக்கப்படும் அது காய்ந்த வனத்தினூடே பரவி, அரிவாள் போன்ற தனது நாக்குகளால் அவற்றைப் பேரிரைச்சலுடன் தன்னுள் அடக்குகிறது. இருளானது அதன் பாதை அக்கினியே, நீ பிரகாசிக்கும் சுவாலையுடன், காளையானது ஆர்வத்துடன் மரங்களை நோக்கி விரைவதுபோல், காற்றின் போக்கில் தீப்பந்தங்களுடன் விரைகின்றாய். எப்போதுமுள்ள காற்றுடன் உறவாடி பலம் பெற்றுத் திரிகிறாய். அசையும், அசையாப் பொருட்கள் அனைத்தையும் அதிரவைத்துப் பார்க்கிறாய். ......ரதத்தின் அடியில் சீறும் தண்ணீரைப்போல் கர்ச்சிக்கிறாய். இருளின் பாதையில் பிரகாசித்து, நீராவிக்கிடையே வெளிப்படும் வானம்போல் பளிச்சிடுகிறாய். மேய்ப்பனற்ற எருதுபோல் அலைந்து திரிந்து பரந்த உலகை விழுங்குகிறாய். ஒளி வெள்ளமாய்ப் பாய்ந்து


படிப்பகம்

www.padippakam.com

புதர்களை எரித்து கரிய கவடுகளை உண்டாக்கி, இவ் வுலகைப் பதப்படுத்துகிறாய்."[3]

ரிக்வேத மரபினரின் உயிர்நாடியான கால்நடைகள்தாம் ரிக்வேதம் முழுதும் ஆதிக்கம் செலுத்துகின்றன. 'தீ' என்பது மாமிச உணவைப் பக்குவம் செய்வது, தங்கள் குடியிருப்புகளுக்கான வனங்களை அழிப்பது என்றளவில் புனிதமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு தீயை வணங்கும் பண்பாடு இந்தியாவிற்கு வெளியில் உள்ள சில இனக்குழுக்களிடம் இருப்பதால் வேதமரபினர் வந்தேறிகளா என்ற கேள்விகளையும் வரலாற்றாளர்களிடம் உருவாக்கியுள்ளது. "ஆரிய வருகை" என்ற தலைப்பிலேயே வரலாற்று நூல்களில் ரிக்வேத மரபினரின் வரலாறு வைக்கப்பட்டுள்ளது.

தீ, தொழில் மரபு சார்ந்து புனிதமாகக் கருதப்பட்டு வந்ததுபோலவே, அங்கு மரபு சார்ந்தே 'இரும்பு' தீட்டாகக் கருதப்பட்டு வந்துள்ளது. பாலை இரும்புக் கலத்தில் சேமித்து வைக்க முடியாது என்பதும், இரும்பு கலத்தில் உணவைப் பக்குவப்படுத்த முடியாது ('துரு' காரணமாக) என்பதும் காரணமாக இருக்கலாம். இன்றும் வேத மரபின் தொடர்ச்சியாக சனி என்பது 'பாவகிரகம்' என்றும், அதற்குரிய உலோகம் இரும்பு என்றும் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இனி வேத மரபின் அணியும் முப்புரி நூல் பற்றியது. பொதுவாக வேட்டைத் தொழிலுக்குச் செல்பவரும், மேய்ச்சலுக்குக் கால்நடைகளை ஓட்டிச் செல்வோரும், வில் அம்பு மற்றும் தடி போன்ற ஆயுதங்களை எடுத்துச் செல்வதுண்டு. அம்புகளை பத்திரப்படுத்தி வைக்க அம்புறாத் துணிப்பை இடது தோளில் குறுக்காக மாட்டிக் கொள்வதுண்டு. மிருகங்களைக் கொன்றபின், அதன் தோலைப் பதப்படுத்தி பின்னால் மாட்டிக்கொள்வதுமுண்டு. இந்தத் துணிதான் நாளடைவில் இடதுதோளில் இன அடையாளத்தைக் குறிக்கும் முப்புரி நூலாக மாறியிருக்கக்கூடும். ஏனெனில் "இன்றும் கூட பிராமணத் திருமணங்களில் சம்பிரதாய (தீட்டுப் படாத) மரப் பட்டைகளிலிருந்து எடுக்கப்பட்ட நார் பூணூலாக அணிவிக்கப்படுவதுடன் அதன் நுனியில் மான் தோலின் சிறுபகுதியைக் கட்டி வைக்கின்றனர்."[4]

ஆகவே பூணூல் என்பது ரிக்வேதம் அல்லது அதற்கு முந்திய காலத்திலும் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டிருந்தோரின் அம்புறாத் துணியே என்று நம்பலாம். மேலும் P.T. சீனிவாச அய்யங்கார் அவர்கள் "தோல் உரியை இடப்புறம் அணிந்தார்கள் - வலது கை எதிரிகளைத் தாக்கவோ அல்லது அவர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளவோ தடையின்றி பயன்படுத்த வேண்டியிருக்கும் என்பதால். இதுதான் 'உபவிதம்' என்பதின் ஆரம்பமே. தேவர்கள் இப்படித்தான் உடையுடுத்தினார்கள் என்பது ஆரண்யகங்கள் மூலம் விளக்கப்படுகிறது. இது மனிதர்கள் அணியும்படியான 'நிவிதம்' என்றும், மாறாக இரண்டு கைகளையும் சுதந்திரமாக வைத்துக் கொள்ளும்பொருட்டு வலது தோளில் தோல்வுரியை அணிவது 'பிரச்னவிதம்' அதாவது தேவர்களின் எதிரிகளாக அசுரர்கள் அணியும் முறை" என்றும் கூறுகிறார்.

எருதுகளைப் பூட்டிய கலப்பை, விதைத்தல், தூற்றுதல் போன்ற விவசாய சம்பந்தப்பட்ட பிரயோகங்கள் மிகக்குறைவாக, அதுவும் ரிக்வேதத்தின் இறுதிப் பகுதியில் காணப்படுவதானது விவசாயத்துக்கும் நிலத்திற்கும் அவர்கள் அளித்த முக்கியத்துவத்தைக் குறிப்பதாக உள்ளது.

விவசாயத்தில் ஈடுபட்டிருந்த விஷூக்கள் என்பவர்கள் யார்? ரிக்வேதத்தில் விஷூக்கள் 171 முறையும், க(ஜ)னங்கள் 275 முறையும் இடம்பெறுகிறார்கள். விஷூக்கள் வேத மரபினரில் ஒரு இனமாக அல்லது இனத்தொகுதியாக இருக்கலாம். க(ஜ)னங்கள் என்பது விஷூக்களை உள்ளடக்கிய ஒரு பெரிய தொகுதியாகக் கொள்ளலாம். இவை தெளிவாக வரையறுக்கப்படவில்லை. எனினும், இவர்கள்தான் பிந்திய வேதகாலத்தில் வைசியர்கள் மற்றும் சத்திரியர்கள் என அழைக்கப்பட்டவர்கள் எனக் கருத வாய்ப்பிருக்கிறது. ஆக, ரிக் வேத மரபினர் பிராமணர், சத்திரியர், வைசியர் என்பவர்களை உள்ளடக்கிய மக்கள் சமூகமாகும்.

இவர்கள் மேய்ச்சல் தொழிலில் இருந்தனர் என்றாலும், சிறிதளவில் விவசாயம் செய்து வந்துள்ளனர். இவர்களின் இனக்குழுவின் தலைவன் ராஜன் என அழைக்கப்பட்டான். இவனுக்கு விஷூக்களும், கனங்கள் 'பலி' செலுத்தி வந்துள்ளனர். 'பலி' என்பது யாகத்தின்போது ராஜனை குஷிப்படுத்த செலுத்தப்படும் கப்பம். அப்போது தான் அவன் ஆநிரைகளைக் கவர்ந்து தங்களுக்கும் பங்கு கொடுப்பான் என்பதால் இருக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன் தலைமையில் அணிதிரண்டு, ஆநிரைகளைக் கவர்வதால் தலைவனுக்கு அவ்வப்போது கொடுக்கப்பட்டு வந்தது 'பலி.' இதே 'பலி' பின்னால் விவசாய வாழ்க்கையை இவர்கள் மேற்கொண்டபோது நிரந்தரமான-தொடர்ந்த வரி என்றாயிற்று.

விஷூக்கள் அல்லது க(ஜ)னங்கள் விவசாயம் செய்துவந்தாலும் அது பண்பட்ட விவசாய முறைகளைக் கொண்டிருக்கவில்லை. மழையை எதிர்பார்த்த விவசாயமே அது. நாற்றைப் பிடுங்கி நடும் முறையை வேத மரபினர் கையாளவில்லை. ஏனெனில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் அதாவது கௌதம புத்தரின் காலத்தில் தான் முதன்முதலில் நாற்றுப் பிடுங்கி நடவு செய்யும் முறையைப் பற்றிய பதிவு காணப்படுகிறது. இம்முறையில் பயிர் வளர்ப்பதில் நாட்டமின்மைக்குக் காரணம் அவர்கள் பெரும்பாலும் மாட்டிறைச்சியை உணவாகக் கொண்டிருந்ததும் காரணமாக இருக்கலாம்.

விஷூ மற்றும் க(ஜ)னம் என்பது வேதமரபினரின் உட்பிரிவுகள் என இருக்க, தாஸர், தஸ்யூக்கள், பாணி என்ற வேதமரபினிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சமுதாயம் ரிக்வேத காலத்தில் வாழ்ந்து வந்துள்ளது. தாஸர்கள் என்பவர்கள் பிந்திய வேத காலத்தில் அடிமைகள் எனக் குறிக்கப்பட்டாலும், ரிக் வேத காலத்தில் வேத மரபினருடன் பகைமை கொண்ட முக்கிய இனக்குழு ஆவர். ஆனால் வேதமரபில் வந்த ராஜனில் முக்கியமான திவோதாஸா (தேவதாஸ்) என்றிருப்பதைப் பார்க்கும் போது குழப்பம் உண்டாகிறது. அவர்கள் காலப்போக்கில் வேதமரபினரை ஏற்றுக்கொண்ட சமுதாயமாக மாறியிருக்கலாம் என அனுமானிப்பது கடினமல்ல. ஆனால் தஸ்யூக்கள் அப்படியல்ல. ரிக் வேதத்தில் 'தஸ்யூ ஹத்யா' அதாவது தஸ்யூக்களைக் கொல்லுதல் என்பது வேத மரபினரின் லட்சியமாகவேஇருந்து வந்துள்ளது. தஸ்யூ அல்லது தஹ்யூ என்ற சொல்லின் பொருள் ஈரான் பகுதியில் 'நிலம்' என்று அறியப்படுகிறது.[5] பாணி என்


படிப்பகம்

www.padippakam.com

பவர்கள் பற்றிய விவரமான குறிப்புகள் ஏதுமில்லை. ஆனால் இம்மூன்று இனங்களும் 'புறம்' என்ற பகுதிகளில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களது குடியிருப்புகள் சுற்றி கோட்டைகள் எழுப்பப்பட்டிருந்தன. இவர்கள் பெருமளவில் கால்நடைகளையும் சொத்துக்களையும் கொண்டிருந்தனர். பாதுகாக்கப்பட்ட கோட்டைக்குள் வாழும் முறை, பாதுகாக்கப்பட்ட நிலப் பரப்பு ஆகியவை நிலம், நீர் மற்றும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தியவர்கள் என்பதைக் குறிக்கிறது. இவர்களிடமிருந்து கால்நடைகளை அவ்வப்போது கூட்டமாக வந்து தாக்கி, அப்படி அபகரித்த கால்நடைகளை யாகத் தீயில் பொசுக்குதல், தஸ்யூக்களைக் கொல்லுவதுதான் ரிக்வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதன் சாரம் என்றால் அது மிகையாகாது. தசராஜன்யா என்று பத்து ராசாக்களோடு இம்மூன்று இனக்குழுக்களையும் தாக்கியது தான் மிகப்பெரிய போராக வர்ணிக்கப்பட்டுள்ளது.[5] இது 'ரவி' நதி நீர் குறித்து எழுந்த சண்டையாகும்.

தாஸர், தஸ்யூக்கள், பாணி ஆகிய இனக் குழுக்களின் வாழ்க்கை முறை ஓரளவுதான் ரிக்வேதத்தின் மூலம் தெரிய வருகிறது. இம்மூன்று இனக்குழுக்களும் கோட்டைகள் எழுப்பி தங்கள் நிலப்பரப்பை பாதுகாத்தவர்கள் எனும்போது இவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்திருக்கலாம். கால்நடைகளைப் பெருமளவில் விவசாயத்தில் ஈடுபடுத்தியதன் காரணமாக, யாகத்தில் அவற்றைப் பொசுக்குவதை எதிர்த்திருக்கலாம். இவர்கள் வேதமரபினரைப்போல 'தீ'யை வழிபடவில்லை. மாறாக phallus எனப்படும் லிங்க வழிபாட்டினர், கறுப்பு நிறத்தினர், தட்டையான மூக்குள்ளவர்கள்.

ரிக்வேதத்தில் காணப்படும் மூன்று இனக்குழு குறித்த இவ்வடையாளங்களும் வாழ்முறைகளும், கி.மு. 2500 வாக்கில் சிந்துவெளியில் வசித்த ஹரப்பர்களின் அடையாளங்களோடு ஒத்திருக்கிறது. மேலும் சிந்து வெளியினர் ருத்ரா அல்லது லிங்க வழிபாட்டாளர்கள் என்பதும் இவர்களுக்குள்ளான ஒற்றுமையை விளக்குகிறது. சிந்துவெளி நாகரிகம் நகர நகரிகம் என்றழைக்கப்படுகிறது. வேதமரபினரின் வரலாற்றுக்கு ஏறக்குறைய 1500 ஆண்டுகள் முன்பாக, தலைநகர் போன்ற பெரிய நகரத்தில், இலச்சினை-முத்திரை என்ற மேம்பட்ட அரச நிர்வாகத்தோடு, நீச்சல் குளம், கழிவறை வசதிகளுடன், மிக அழகிய வேலைப்பாடுகள் உள்ள மட்பாண்டங்கள், உலோகக் கருவிகள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள், படகு, கட்டுமரம், மாட்டுவண்டி, ரதம் போன்ற வாகன வசதிகளுடன், நீண்ட காலகாலமாய் பழக்கப்பட்ட, நிலைத்த வாழ்க்கையை ஹரப்பா, மொஹஞ்சோதாரா, காளிபங்கன் போன்ற நகரங்களில் வாழ்ந்திருக்கின்றனர்.

இதுவரை 80 இடங்களில் அகழ்வாராய்ச்சிகளின் மூலமாக சிந்துவெளியின் பரப்பு விரிந்துள்ளது.[6] சுருங்கச் சொன்னால் சிந்துவெளி மரபு என்பது இன்னும் பல பாகங்களில் பரவியிருந்த ஒரு நாகரிகமே. இந்நகரங்கள் வேண்டுமானால், வெள்ளத்தாலோ அல்லது பூகம்பத்தினால் ஏற்பட்ட நதியின் போக்கு (ரவி நதி ஹரப்பாவிலிருந்து முன்பைவிட எட்டு மைல் விலகி விட்டது) மாறியதாலோ அழிந்திருக்கலாம். அவை பூராவும் அழிந்து விட்டது என்பதைக் காட்டிலும் அதன் தலைமைதான் அழிந்தது. இதனால் அவர்கள் பல பாகங்களுக்கு சிதறியிருக்கலாம் என்ற எண்ணம் வலுப்படுகிறது. மேலும் பெரிய நகரங்களில் தானியக் களஞ்சியங்கள் இருந்தன என்பது அதையொட்டிய கிராமங்களிலிருந்து தானியங்கள் தருவிக்கப்பட்டிருக்கலாம் என்பதை நிலைநிறுத்துகின்றன. சிந்துவெளியை நிலைநிறுத்திய அக்கிராமங்களும் சிதறியிருக்கலாமே தவிர (தலைமை மய்யம் அழிந்ததன் காரணமாக) முற்றிலுமாக மறைந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் உலோகக் கொல்லர்கள், குயவர்கள், தச்சர்கள் குடியிருப்புகள், சிந்துவெளி நகரங்களில் காணப்படுவதானது, அங்கு அவர்கள் குவிக்கப்பட்டு, சில கட்டுப்பாடுகளுடன் செயல்பட்டனர் என்பதை விளக்குகிறது. அந்த நகரங்களோடு விவசாயம் சம்பந்தப்பட்ட உபதொழில்கள் அழிந்தன என்பதாகக் கொண்டால், ஹரப்பா-மொஹஞ்சோதாரா அழிவிற்குப் பிறகு சிந்துவெளி கிராமங்கள் விவசாய முன்னேற்றத்தில் பின்னடைவைச் சந்தித்திருக்கலாம் என்பதை அனுமானிக்கலாம்.

இந்த அனுமானங்கள்தான் வேதகாலத்து தாஸர், தஸ்யூக்கள், பாணிகள் என்ற இனக்குழுக்களின் வாழ்க்கை முறைக்கான அடிப்படைகள் அல்லது அவர்களின் தொடர்ச்சி எனக் குறிக்கப்படும் அளவில் உள்ளன என்பது விளங்கும்.

ஆக வரலாற்றில் வேத மரபினர், ஏற்கனவே நிலைத்த வாழ்வை மேற்கொண்டிருந்த முற்றிலும் வித்தியாசமான, அதே சமயத்தில் இன்னும் மேய்ச்சல் தொழிலில் இருந்து வந்த, 'தீ'யை வழிபட்ட வகுப்பினர். ஒரு வகையில் மேய்ச்சலுக்காக இடம் பெயர்ந்த ஒப்பீட்டளவில் ஒரு நாடோடிக் குழுவினர் என்பது தெரிகிறது.

இப்படி வேத மரபிலான நாடோடிக் குழுவினருக்கும் நிலைத்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்த தஸ்யூக்களுக்கும் நடைபெற்ற மோதல்கள் என்னவாயிற்று என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

இடையில் சிறந்த வரலாற்றாளரான P.T. சீனிவாச அய்யங்காரின் நகைப்புக்கிடமான சில யூகங்கள் குறித்தும் எழுத வேண்டி உள்ளது.

- தொடரும்

---

1. Ancient India by the Publication Division, Ministry of Information and Broadcasting, Govt of india - March 1995 (Phalguna - 1916) Page 19 Para 1 & 2.

2. The Stone Age in India by P.T. Srinivasa Ayyangar - AES - Reprint 1982 - Page 53

3. The Stone Age in India by P.T. Srinivasa Ayyangar - AES - Reprint 1982 - Page 30

4. The Stone Age in India by P.T. Srinivasa Ayyangar - AES - Reprint 1982 - Page 18, Para 2

5. Ancient India by the Publication Division, Ministry of Information and Broadcasting, Govt of india - March 1995 (Phalguna - 1916) Page 29 Para 3

6. Cultural Heritage of India Vol.I, Chapter VII, Page 110-128, Indus Valley Civilisation by Madho Sarup Vats, formerly Director General of Archaeology of India, New Delhi - Published by Ramakrishna Mission.


படிப்பகம்

www.padippakam.com

# கண் மூடும் வேளையிலே...

■ மு. அம்சா

முனகலும், அழுகையும், ஒப்பாரியுமாய் இன்னதென்று பிரித்தெடுக்க முடியாத ஓசை. தூரத்து அலை கடல் ஓசையாய்... மெல்ல விஸ்வத்தின் கண்கள் திறந்தன. தன் முகம் நோக்கி எத்தனை முகங்கள். சொர்ணம், தமிழரசி, ராமச்சந்திரன், செல்வம்... எங்கே... எங்கே நான் தேடும் அந்த முகம் பார்க்க முடியாதா. என்னால் நிம்மதியாய் கண் மூட முடியாதா... கடைவிழியில் கண்ணீர் வழிய விஸ்வத்தின் கண்கள் மெல்ல மூடிக் கொண்டன.

"அப்பா..."

"அப்பா..."

"என்னங்க..."

கதறல் ஒலி காதுக்கு எட்டாத வாறு விஸ்வத்தின் நினைவலைகள். தொண்டைக் குழியில் இருந்து மட்டு முரட்டென்று ஒலி.

"செத்துமா கட்டிடிச்சி. இன்னும் கொஞ்சம் நேரங்கூட தாங்காது. கட்டிலை விட்டு கீழே இறக்கி போட்டுறுங்க" யாரோ ஒரு மூதாட்டி கூற,

"இல்லம்மா, இப்படியேதா நாலு நாளா கெடக்காரு. மூச்சே நின்னுட்டா மாதிரி இருக்கும். எல்லாம் முடிஞ்சு போச்சுன்னு நினைக்கறப்ப லேசா கண்ணை தெறந்து பாத்துட்டு சட்டுனு கண்ணை மூடிடுறாரு. யாரையோ தேடுறாரு போல. நானும் எல்லாரையும் வரச்சொல்லி பேச வைத்து பாத்துட்டேன். ஒருத்தரு குரலையும் கேட்ட மாதிரி தெரியல. அவரு படற வேதனையை பாக்க கஷ்டமாக இருக்கு" சொர்ணத்தம்மா, விஸ்வத்தின் மனைவி அழுது கொண்டே கூறினாள்.

"ஏதாச்சும் நினைப்புலே கெடந்து துடிக்குதோ என்னமோ"

"ஆமாம்மா, அப்படி இருந்தா தான் உசிரு இப்படி நெஞ்சுக்குழியிலே கெடந்து தவிக்கும்"

"அட அப்படி என்னப்பா ஆசை இந்த மனுசனுக்கு இருந்துடப் போவுது. அறுபத்தைந்து வயசாச்சு.. ஆன மட்டும் எல்லா சொகத்தையும் அனுபவிச்சாச்சு. பிள்ளைங்க எல்லாத்துக்கும் கல் யாணம் பண்ணி, பேரன் பேத்தி எடுத்தாச்சு. யாருக்கும் திம்பு பண்ணாம, குனிஞ்ச தலை நிமிராம, மிதிச்ச புல்லு சாவாம வாழ்ந்த மனுசன். கடைசி காலத்துல உசுரு போவாம இப்படி கெடந்து அல்லாடறாரு."

ஆளாளுக்கு ஒவ்வொன்றாய் பேசிக்கொண்டிருக்கும்போதே விஸ்வத்தின் கண்கள் மெல்லத் திறந்தன. கடைவாயில் எச்சில் ஒழுக அவர் ஏதோ முனகுவது கேட்டது. விலகியிருந்தவர்கள் எல்லாம் மீண்டும் அவர் முகம் நோக்கி குனிய, அவரின் தேடல்... எங்கே.. எங்கே.. என் மனதில் அழியாத இடம் பிடித்து கம்பீரமாய் வீற்றிருக்கும் என் தேவகி எங்கே... உடல் மெலிந்து கண்கள் உள்வாங்கி மூச்சிரைத்துக் கொண்டிருக்கும் அந்தக் கிழவரின் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

தேவகி! என் வாழ்வில் எத்தனை இனிமையாய் புகுந்தவள் நீ. உன் நடையே கொடியொன்று அசைவது போலிருக்கும். உன்னிடம் நட்புக் கொள்ள எத்தனை தவம் கிடந்தேன். உன் அறிவின் தீட்சண்யத்திற்காகவே உன்னிடம் பழக வேண்டும் என்று எல்லோரும் ஏங்கியபோது மென்மையான புன்முறுவலால் ஒதுக்கிவிட்டு உயரத்தில் நின்றாயே.

தேவகி, நமது நட்புக்கூட நூல் நிலையத்தில்தானே ஆரம்பித்தது. அதை எப்படி மறக்க முடியும். தி.ஜா.வின் மோகமுள்ளிற்காக இருவரும் போட்டிபோட, பெருந்தன்மையுடன் எனக்கு விட்டுத்தந்து நான் வாசித்த பிறகு நீ வாசித்தாயே. அந்த நாளை எப்படி மறக்க முடியும்.

அப்பொழுது ஏற்பட்ட அந்த நட்பு காதலாய் மலர, அது காதல் தான் என்பதை நீ ஒப்புக்கொள்ள எத்தனை வருடங்களாயிற்று. இலக்கியப் புத்தகங்களால் நமது காதல் வளர்ந்ததா, நம் காதலுக்காக இலக்கியப் புத்தகங்களை படித்தோமா. இந்த முதுமையில் கூட என்னால் அதை கண்டுபிடிக்க முடியவில்லை தேவகி. மோகமுள்ளில் பாபுவும், யமுனாவும் நம்மிடம் சிக்கித் தவித்தாற்போல் வேறு யாரிடமும் தவித்திருக்க மாட்டார்கள்.

அந்த மென்மையான பெண் யமுனாவாகத்தான் இன்னும் நீ என் கண்களுக்குப் படுகிறாய் தெரியுமா.. உனது உணர்வுகளை எவ்வளவு அழகாக உள்ளிழுத்துக்கொண்டு எதுவுமே வெளியே தெரியாமல் புன்முறுவலிப்பாயே அந்த யமுனாவைப் போல். அது எப்படி தேவகி.

நட்பிற்கும், காதலுக்குமிடையில் இருந்த நூலிழையை நான் அறுத்தெறிந்தபோது எனக்கு அறிவுரை கூறினாயே - ஆத்திரப்படாமல். அந்த நிதானம்தானே தேவகி உன்னிடம் என்னை விழ வைத்தது. காதலைவிட நட்புதான் உயர்ந்தது, நாம் நல்ல நண்பர்களாகவே இருப்போம். ஆணும், பெண்ணும் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் நல்ல நண்பர்களாக கடைசிவரை இருக்க முடியும் என்பதை நிரூபிப்போம் என்று எவ்வளவு எடுத்துக் கூறினாய். ஆனால், நான் உன் மீதுள்ள காதலை மாற்றிக்கொள்ள தயாரில்லை என்று போராடி உன்னை ஒப்புக்கொள்ள வைத்தேன்.

நட்பிலிருந்து காதலுக்கு மாறிய பிறகும்கூட நாம் சென்ற இடமெல்லாம் நூல் நிலையங்களும், புத்தகக் கடைகளும், இலக்கியக் கூட்டங்களும், கவிபரங்கங்களும், கலந்துரையாடல்களும்தானே தவிர ஒரு பார்க்,



படிப்பகம்

www.padippakam.com

சினிமா, பீச் என்று ஒரு நாளும் போனதில்லையே. நண்பர்களாய் இருந்தபோதுகூட எதேச்சையாய் எத்தனையோ தொடுதல்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால், காதலர்களாய் மாறிய பிறகு எனது சுண்டு விரல்கூட உன் மீது பட நீ அனுமதித்ததில்லை. காதலனின் தொடுதலில் காமம் கலந்திருக்கும் என்று உன்னைச் சுற்றி வேலி போட்டுக்கொண்டபோது உள்ளுக்குள் துடித்துப் போனேன் - ஒரு நல்ல தோழியை நான் இழந்து விட்டேனோ என்று.

எப்படியெல்லாம் பேசி உன் மனதை மாற்றிய நான் கடைசியில் எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டேன். உன் முகத்தில் விழிக்க அருகதையில்லாமல் ஊர் ஊராய் மாற்றல் என்ற பெயரில் ஓடி... ஓடி... களைத்து, அப்படியும் என் மனசாட்சியை கொல்ல முடியாமல் இன்று கிழிந்த நாராய் கிடக்கிறேன். கடைசியாய் உன்னை ஒரு முறை பார்க்க வேண்டும் தேவகி.

"தேவகி... தேவகி... தேவகி..." கிழவரின் வாய் ஏதோ முணுமுணுக்க அவரது வாயருகே காதை வைத்துக் கேட்டான் அவரது பெரிய மகன் செல்வம்.

"தேவகி... தேவகி... தேவகி..." அச்சர சுத்தமாய் தந்தையின் வாயில் இருந்து ஒரு பெண்ணின் பெயர் வர திகைத்து நிமிர்ந்தான்.

"அம்மா... தேவகி என்று தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா" மெல்ல தன் தாய் சொர்ணத்திடம் கேட்டான். அவள் தெரியாதென்று தலையாட்ட, கூடத்தில் தலையில் கை வைத்து உட்கார்ந்திருந்த அத்தை, விஸ்வத்தின் தங்கை லட்சுமியைக் கேட்டபோது அவள் திகைத்தாள்.

"தேவகியா... தேவகின்னா அண்ணா சொன்னான்?" பதட்டத்துடன் எழுந்து விஸ்வத்தின் கட்டிலருகே ஓடிவந்து அவரின் முணுமுணுப்பை உற்றுக் கேட்டாள்.

"தேவகி... தேவகி..." கிழவர் கண்களில் நீர் பெருக முணுமுணுத்துக்கொண்டிருந்தார்.

அதிர்ச்சியுடன் நிமிர்ந்த லட்சுமியின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக பெருகியது. நெஞ்சில் அறைந்துகொண்டு கதறினாள் "அண்ணா... அண்ணா... நீ வாழலையா... கடமைக்கு நாளை ஓட்டினியா... ஒம்முகத்துல சிரிப்பே வராம போனதுக்குக் காரணம் புரிஞ்சி போச்சுண்ணா. அண்ணா, நாங்க பாவம் செஞ்சுட்டோம்... ஒன்னை நாங்க உயிரோட வதைச்சுட்டோமே."

தேவகி, தேவகி என்றவாறு தன் பூஞ்சைக் கண்களை திறந்து தேடியவர் மீண்டும் சோர்வாய் நினைவலைகளுள் நுழைந்து விட்டார்.

கல்லூரிக் காதல் வெளியில் வந்ததும் முடிந்துவிடும் என்பார்கள். நம் காதல் முடியவில்லை. கல்லூரி வாழ்க்கைக்குப் பிறகுதான் இன்னும் ஆழமாக வளர்ந்தது. நாம் சந்திப்பதென்னவோ பதினைந்து நாட்களுக்கு ஒருமுறைதான். அந்த ஒரு நாளுக்காகவே பதினான்கு நாட்களையும் நெட்டித் தள்ளிக்கொண்டு... சந்தித்துப்பேசியதைப் பற்றி அசைபோட்டுக் கொண்டு... ப்ச்... உனக்கு நினைவிருக்கிறதா தேவகி, கல்கியின் சிவகாமி சபதத்தைப் படித்துவிட்டு சிவகாமிக்காக நீ அழுத அழுகையும் உருகி உருகி பேசியதும் என்னால் இன்னும் மறக்க முடியவில்லை.

அதே நிலை உனக்கு நேர்ந்தபோது எப்படி துடித்துப்போனாய். குடும்பத்திற்காக நான் உன்னை கைவிட நேர்ந்து, உன்னிடம் அதைக் கூறியபோது நான் எவ்வளவு கேவலமானவனாக உணர்ந்தேன். உன் முன் என் வாழ்க்கைக்காக கையேந்தும் பிச்சைக்காரனாய், சுயநலவாதியாய், சந்தோசமாய் ஆடிக்கொண்டிருந்த ஒரு பெண் மயிலை வெட்டி சாய்த்தாற்போல், கள்ளம் கபடமில்லாத உன் மனதில் காதலெனும் விதையை ஊன்றி பயிராகி மரமான வேளையில் அதன் வேரில் விஷத்தை ஊற்றி விட்டு அந்த வேதனையில் பங்கு கொள்ளாமல் ஓடி ஒளிந்து... எவ்வளவு கேவலமாகிப் போனேன்.

உன்னையும் திருமணம் செய்துகொள் என்றபோது, என்னைப் பார்த்தாயே ஒரு பார்வை. அக்கினியாய் சுட்டெரிக்கும் அந்தப் பார்வை இன்னும் என்னை பொசுக்கிக் கொண்டிருக்கிறது தேவகி. உன்னைப் பிரிந்த பிறகு நான் வாழ்ந்த வாழ்க்கை நாய் வாழ்க்கை ஆகிப்போனது. மனதுக்குப் பிடிக்காக மனைவி, கடமையே என்று வாழ்க்கை நடைப்பிணமாகிப் போனேன். ஒரு பெண்ணை நம்ப வைத்து கழுத்தறுக்கும் பாவிக்கு ஆண்டவன் தண்டனை கொடுக்க வேண்டியதில்லை, அவன் மனசாட்சியே அவனை உருக்குலைத்து விடும் என்பதை என் வாழ்க்கையே கூறிவிடும். என்னுடைய ஒவ்வொரு அணுவிலும் நீ கலந்திருக்கும்போது நான் எப்படி நிம்மதியாக இருக்க முடியும். உன்னை மனதிற்குள் குமுற வைத்து பேச முடியாமல செய்ததற்கு எனக்கு தண்டனை என்ன தெரியுமா... என் பெண் தமிழரசி பிறவி ஊமை. அவளைப் பார்க்கும்போதெல்லாம் நீ கடைப்பிடித்த உனது மௌனமே என்னை சாகடிக்கும்.

நீ ஒன்றுமே சொல்லாமல் சென்றபோதுகூட உன் மனம் எத்தனை சுடு சொற்களை என்மீது வீசியதென்று எனக்குத்தானே தெரியும். அந்த அக்கினிக் கனல் என் வாழ்வை சுட்டு பொசுக்கிக் கொண்டிருக்கிறது. மரணத்தின் வாயிலில் நின்று கொண்டு உன்னைப் பார்க்க, உன் காலடியில் என் உயிரை விட துடிக்கிறேன். உன்னைப் பார்க்க முடியுமா தேவகி.

"தேவகி... தேவகி..." விஸ்வத்தின் குரல் மந்திரமாய் ஜெபித்துக் கொண்டிருந்தது. கண்ணீர் நின்றபாடில்லை. அவ்வப்போது உடல் மட்டும் தூக்கிப்போட்டுக் கொண்டிருந்தது.

தேவகி யார் என்ற முடிச்சு ரகசியமாய் செல்வத்திடம் அவிழ்க்கப்பட்டது லட்சுமியால். நாற்பது வயதைத் தாண்டிய செல்வம் தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான். சாதுவாய் இருந்த அப்பாவின் வாழ்க்கையில் இப்படி ஒரு ரகசிய சோகம். அந்த சோகம்தான் அப்பாவை இந்தளவு உள்ளுக்குள் சுருண்டு கொள்ள வைத்துள்ளது. மனதுக்குள் ஒரு வாழ்வு வாழ்ந்துகொண்டு, எங்களுடன் நடைப்பிணமாய் இருந்து விட்டார். சாவின் விளிம்பில் அவரது மனம் விழித்துக்கொள்ள வேதனையில் துடித்துக் கொண்டிருக்கிறார்.

செல்வத்தின் அருகில் அமர்ந்த லட்சுமி மெல்ல அவனது தலையை கோதி விட்டாள். "செல்வம்..." நிமிர்ந்தவன் தன் அத்தையின் கைகளை பிடித்துக்கொண்டு கண் கலங்கினான்.



படிப்பகம்

www.padippakam.com

"எப்படி அத்தை இது... அப்பாவை கண்ணுல பார்க்க முடியலே. பரிதாபமா இருக்கு. என்ன செய்யற துன்னு ஒன்னும் புரியலே" குரல் பிசிரடித்தது.

"ஏதாவது செய்யணும் செல்வம். அந்த தேவகி வராம உங்கப்பா உயிரு போகாது. அவங்க கையால பால் ஊத்துனாதான் அப்பா நிம்மதியா கண்ணை மூடுவார். அவங்களை முதல்ல கண்டுபிடி"

"இப்போ நாம் எங்கன்னு அத்தை தேடுறது. அவங்க உயிரோட தான் இருக்காங்களோ என்னவோ. அப்படியே இருந்தாலும் குடும்பம், குழந்தைங்கன்னு இருக்கறவங்கள என்ன சொல்லி அழைச்சிக்கிட்டு வர முடியும். எல்லோரும் நல்ல மாதிரியா புரிஞ்சுப்பாங்களா..."

லட்சுமியின் மனதில் மின்னலாய் ஒரு எண்ணம். பரபரப்பானாள். "செல்வம், அப்பா டைரி எழுதற பழக்கம் இப்பவும் உண்டுதானே..."

"ஆமாம். கடைசியாக படுக்கையில் விழும்வரை எழுதிக் கொண்டு தான் இருந்தார். நன்றாக இருக்கும் வரை ஒரு நாளும் டைரி எழுத மறந்ததேயில்லை. நிறைய நேரம் டைரியுடன்தான் உட்கார்ந் திருப்பார்."

"அப்படியானால் கண்டிப்பாக அதில் ஏதாவது இருக்கும். வா... வா... அவரது பெட்டியில் தேடலாம்" என்றவாறு விஸ்வம் உபயோகித்துக் கொண்டிருந்த அறையை நோக்கி ஓடினார்கள்.

டைரி... டைரி... டைரி... அந்த அறையில் இருந்த ஒரு அலமாரி நிறைய பழைய டைரிகள். நாற்பது வருட டைரிகள். ஏடுகள் எல்லாம் மக்கிப்போய், எழுத்துக்கள் கலங்கலாய். இதில் எந்த வருடத்து டைரியை எடுத்துப் பார்ப்பது. செல்வத்திற்கு விவரம் தெரிந்த நாள் முதலாய் அப்பா டைரி எழுதுவது தெரியும். ஆனால் அதை என்ன செய்கிறார் என்று யாருக்கும் தெரியாது. அதை ஒரு பொருட்டாகவும் கருதியது இல்லை. இப்போது அவ்வளவு டைரிகளை ஒரே இடத்தில் பார்க்கையில், அப்பா அவற்றை எவ்வளவு பாதுகாப்பாக பொக்கிஷமாக போற்றி பாதுகாத்து வந்திருக்கிறார் என்பது புரிந்தது.

"அத்தை இதெல்லாம் எப்படி கண்டு பிடிக்கிறது?"

"கடைசியா ஒரு நான்கு வருட டைரிகளை புரட்டிப்பாரு செல்வம். அப்பா இந்தளவு பாதிக்கப்பட்டிருக்காங்கன்னா சமீபத்துல அவங்கள சந்திச்சிருக்கணும். இல்லேன்னா அவங்களப்பத்தி கேள்விப்பட்டிருக்கலாம். அதனால் கடைசியில் இருந்து பார்க்கலாம்."

விஸ்வம் அவர்களை தவிக்க விடவில்லை. எல்லா டைரியிலும் தேவகி... தேவகி... தன்னுடைய இயலாமையாலும், குற்ற உணர்வினாலும் புலம்பிக் கிடந்தார். எண்சாண் உயர மனிதன் ஒரு சாணாய் குறுகிப் போயிருந்தார் டைரிகளில். தேவகியின் விலாசமோ வேறு விவரங்களோ தென்படவில்லை. விஸ்வத்தின் கவித்துவமும் ரசனையும் அவரது எழுத்துக்களில் தெரிந்தது. தாங்கள் அறியாத ஒரு தந்தையை பார்த்தான் செல்வம் அந்த டைரிகளின் மூலம்.

கண்கள் கலங்க ஒவ்வொரு தாளாய் புரட்டிக் கொண்டிருந்தவன் ஒரு டைரியில் ரெக்சின் கவருக்குள் ஏதோ தென்பட டைரியின் அட்டையை ரெக்சின் கவருக்குள் இருந்து எடுத்தபோது சிறிய அளவு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஒன்று இருந்தது. இரட்டைச் சடைகளில் ஒன்று மார்பின் மீது புரள சிரித்துக்கொண்டிருந்த அந்த அழகிய பெண்ணின் கண்கள்கூட சிரித்தது. புகைப்படத்தின்பின்புறம் என் இனிய தேவதை என்று எழுதப்பட்டிருந்தது. அடிக்கடி அது கையாளப்பட்டிருப்பது நிற மாற்றத் திலும், படிந்திருந்த அழுக்கிலும் தெரிந்தது.

"அத்தை இங்க பாருங்க..."

வாங்கிய அத்தை சட்டென்று உடைந்துபோனாள். எந்த போட்டோவினால் விஸ்வத்தின் காதல் வீட்டிற்கு தெரிந்து பூகம்பம் ஏற்பட்டு தன் தந்தையால் சத்தியம் பெறப்பட்டு விஸ்வாவின் காதல் தோற்கடிக்கப்பட்டதோ அதே புகைப்படம். நாற்பது நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னால் இருந்து இந்த புகைப்படத்தை பொக்கிஷமாய் பாதுகாத்து வரும் தன் அண்ணனின் நிலை குறித்து கலங்கினாள். தேவகியை மறக்கவில்லை. மாறாக நெஞ்சினில் போட்டு பூட்டி வைத்துள்ளார்.

இப்படிக்கூட ஒரு மனிதனால் தன் நினைவுகளை போற்றி பாதுகாத்து வர முடியுமா. இத்தனை நாளும் அந்தப் பெண்ணை தன் மனதில் சுமந்து வந்திருக்கிறார். அவளோடு வாழ்ந்து வந்திருக்கிறார். காதலின் வலி தெரிந்ததால்தான் செல்வத்தின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் திருமணம் செய்து வைத்திருக்கிறார்.

"அத்தை... கண்டுபிடிச்சிட்டேன்."

"எங்கடா... செல்வம்"

செல்வம் நீட்டிய டைரியின் ஒரு பக்கத்தில் 'கண்டேன் என் தேவதையை' என்று சற்று பெரிய எழுத்துக்களில் எழுதி அடிக்கோடிடப்பட்டிருந்தது. கீழே வரிகள் ஓடின.

இன்று என் தேவகியைக் கண்டேன். அவளிடம் முதுமையைத் தவிர எந்த மாற்றமும் இல்லை. ஆட்டோவில் இருந்து இறங்கி அந்த டிபார்ட்மென்ட் ஸ்டோரில் நுழைந்தவளை பின்தொடர்ந்து சென்றேன். என் தேவகிதான். என் மனதில் சிம்மாசனம் இட்டு அமர்ந் திருக்கும் என் தேவகிதான். சட்டென்று அவள் முன்னால் சென்று நின்றவுடன் திகைத்து தடுமாறிப் போனாள். தலை நரைத்து, சற்றே தோல் சுருங்கி, கண்ணாடி அணிந்து... இருக்காதா பின்னே... என்னை விட இரண்டு வயதுதான் இளையவள் அவள்.

இருவரும் கடையைவிட்டு வெளியே வந்தோம். நடந்து கொண்டே பேசலாமா... தேவகி கேட்க, நான் மௌனமாய் தலையாட்டினேன். எத்தனையோ வருடங்களுக்குப் பின் சந்திப்பதால் என்னால் இயல்பாக இருக்க இயலவில்லை. ஆனால் தேவகி வெகு இயல்பாக பேசினாள். என் குடும்பம் பற்றி, பிள்ளைகள் பற்றி, மனைவி பற்றி கேட்டாள். நான் பேசியதை அதே பழைய புன்முறுவலோடு கேட்டுக் கொண்டாள்.

மெல்ல தயங்கித் தயங்கி நான் அவள் குடும்பம், கணவன், குழந்தைகள் பற்றி கேட்ட போது சொன்ன பதிலில் அதிர்ந்து போனேன். 'நீங்கள் இட்ட குங்குமம் இன்னும் என்



படிப்பகம்

நெற்றியில் இருக்கிறது விஸ்வா நான் எப்படி வேறு திருமணம் செய்து கொள்ள முடியும்?` அந்த பதிலில் அக்கினிக் குண்டத்தில் விழுந்தாற் போல் துடித்துப்போனேன்.

அன்று ஒரு நாள்... சுகவனேஸ்வரர் கோவிலுக்கு அருகில் இருந்த ஒரு மன்றத்தில் நடைபெற்ற கவியாரங்கத்தைக் கேட்டுவிட்டு திரும்பிய பொழுது கோவிலுக்கு சென்றோம். அங்கே முருகனின் சந்நிதியில் சாமி கும்பிட்டுவிட்டு உட்கார்ந்திருந்த போது அங்கேயே என் தேவகியை என்னவளாக்கிவிட வேண்டும் என்ற வேகத்தில் என் கையில் இருந்த குங்குமத்தை அவளது நெற்றியில் இட்டு விட்டேன்.

``என்ன விஸ்வா இது... நீங்கள் இட்ட குங்குமத்திற்கு என்ன அர்த்தம் தெரியுமா'' பதறினாள்.

``தெரியும் தேவகி. நீ என் மனைவி. எனக்கு மட்டுமே உரியவள் என்பதும், கணவனால்தான் ஒரு பெண்ணிற்கு குங்குமம் இடப்பட வேண்டும் என்பதும் தெரியும். மனதளவில் இருந்த நம் உறவு இன்று இந்த முருகன் சந்நிதியில் உறுதியாக்கப்பட்டு விட்டது. இதுவே நமது திருமண நாள்'' என்று கூறி முருகன் முன்னிலையிலேயே மோதிரமும் மாற்றிக் கொண்டோம். ஆயிரம் பேருக்கு முன்னால் நடப்பதைவிட ஆண்டவனின் முன்னால் நடப்பதை யாராலும் மறுக்க முடியாது அல்லவா.

ஆனால் நான் வார்த்தை தவறிவிட்டேன். என் தேவகி நான் இட்ட குங்குமத்தையும், போட்ட மோதிரத்தையுமே தாலியாக எண்ணி வாழ்ந்து கொண்டு இருக்கிறாள். நான் அற்பப் பதறாய் அவளை ஒதுக்கிவிட்டு ஒரு சுகபோக வாழ்க்கை வாழ்ந்திருக்கிறேன்.

வேறு இடத்தில் திருமணம் வேண்டாமென்று ஒதுக்கியவளை உறவுகள் வெறுத்து ஒதுங்க இவளும் பொருட்படுத்தாமல் தனியாக வாழ்ந்திருக்கிறாள். கல்லூரி பேராசிரியராக இருந்து சமீபத்தில் ஓய்வு பெற்று முதியோர் விடுதி ஒன்றில் தங்கி மற்றவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்து கொண்டிருப்பதாக கூறினாள்.

www.padippakam.com

என் தேவகி [illegible]ட்டு, நான் செய்த கயமையால், எனது கோழைத்தனத்தால் வாழ்விழந்து, தனிமரமாய், கன்னி மலராய், காய்க்காமல், கனியாகாமல் வாடிக்கொண்டிருக்கிறாள். எத்தனை கனவுகள் கற்பனைகள் அவளிடம் இருந்தன. குழந்தைகள் என்றால் அவளுக்கு உயிர். எதற்கும் உணர்ச்சிவசப்படாதவள் குழந்தைகள் என்றால் குதூகலமாக பேச ஆரம்பித்து விடுவாள். ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளை பெற்றுக்கொள்வேன் என்று கண்கள் மின்ன கூறும்பொழுது அந்த குழந்தை முகத்தில்தான் எத்தனை சந்தோசம்... வெட்கம்... அந்த என் தேவகி ஒரு குழந்தைக்குக்கூட தாயாகாமல், தாம்பத்ய சுகம் என்னவென்றே அறியாமல் என் மனைவியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

எவ்வளவோ வற்புறுத்தலுக்குப் பிறகு அவளது விலாசம் கொடுத்தாள் - நான் அவ்ளை சந்திக்க வரக் கூடாது என்று உறுதி பெற்றுக் கொண்ட பிறகு.

தேவகி, உன்னால் மெருகேற்றப்பட்ட நான் இங்கே குடும்பம், குழந்தை குட்டிகளோடு ராஜபோகமாய் இருக்க, என்னால் வஞ்சிக்கப்பட்ட நீ கன்னியாய், ஆதரவற்றவளாய் முதியோர் இல்லத்தில். நான் எப்படி நிம்மதியாய் இருக்க முடியும். இந்த சிறிய உலகில் இத்தனை வருடங்களாக சந்தித்துக் கொள்ளாமல் தடுத்தது எனது கோழைத்தனம் தானே. உன்னை எண்ணி வாடிக் கொண்டிருந்தேனே தவிர நீ எப்படி இருக்கிறாய், உயிரோடு இருக்கிறாயா இல்லையா என்பதைக்கூட அறிந்துகொள்ள முடியாமல் உனக்கு எவ்வளவு பெரிய துரோகத்தை இழைத்து விட்டேன். என்னை மன்னிப்பாயா தேவகி.

அதன் பிறகு உள்ள தாள்கள் எல்லாமே ஏறக்குறைய அழுதிருந்தார் விஸ்வம். நிறைய இடங்கள் கண்ணீர்த் துளிகள் பட்டு எழுத்துக்கள் கலங்கியிருந்தன. பாவ மன்னிப்பிற்காக நிறைய ஏங்கியிருந்தார்.

கொடுத்த வாக்குறுதியை மீறி தேவகியை சந்திக்க சென்றபோது பார்க்க முடியாமல் திரும்பியிருந்தது குறிப்பிடப்பட்டிருந்தது. தேவகியின் கோபமும் ஆற்றாமையும் கண்டிப்பான அவரது நிராகரிப்பில் தெரிந்ததாக குறிப்பிட்டிருந்தார். அப்படி சந்திக்கவே மறுத்தவர் இப்போது வருவாரா. செல்வம் குழம்பிப் போனான்..

தான் ஏமாற்றப்பட்ட அவஸ்தையில் ஒரு தவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தம்மா வருவார்களா என்பது செல்வத்திற்கு சந்தேகமாகவே இருந்தது. அப்பாவை சந்திக்கவே மறுத்தவர் இப்போது வீட்டிற்கு வர சம்மதிப்பாரா யோசனையுடன் அந்த முதியோர் இல்லத்தை அடைந்தான். மாதந்தோறும் ஒரு தொகையை பெற்றுக்கொண்டு நடத்தப்படும் இல்லம் நல்ல பராமரிப்பில் இருந்தது. ஓரளவு வசதி படைத்தவர்கள் மட்டுமே தங்கக் கூடிய இடம் என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது.

தேவகியை முதன்முதலில் பார்த்த செல்வம் சற்றே யோசித்தான் இவ்வளவு அழகாகவும், அமைதியாகவும் இருக்கும் இந்தம்மா வயதில் இன்னும் நன்றாகவே இருந்திருப்பார்கள். நல்ல படிப்பும் அறிவும் இருந்தும் தன் தாத்தா ஏன் இவர்களை நிராகரித்தார். காதலை எதிர்க்கும் கண்மூடித்தனமான போக்கைத் தவிர வேறு எதுவும் இருந்திருக்க முடியாது. இப்போதுகூட காதல் எளிதில் கை கூடுவதில்லை. அப்படியிருக்க அரை நூற்றாண்டுக்கு முன் உள்ள சூழ்நிலை மிக மோசமாகத்தான் இருந்திருக்கும்.

செல்வம் தன்னை தேவகியம்மாவிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான். `நானும் உங்கள் மகன் போலத்தான் அம்மா` என்று கூறியபோது தேவகியம்மாவின் முகத்தில் மெலிதான புன்னகை. அது என்ன சிரிப்பு என்னவென்று இனங்காண முடியாத சிரிப்பு. செல்வம் குழம்பிப் போனான்.

``அம்மா... உங்களை எங்கள் வீட்டிற்கு அழைத்துப்போக வந்திருக்கிறேன். அப்பா மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறார். உங்களைப் பாராமல் அவர் உயிர் பிரியாது என்று சொல்கிறார்கள். உங்கள் பெயரையே ஜெபித்துக் கொண்டிருக்கிறார். அவர் தொடர்ந்து எழுதிவரும் நாட்குறிப்புகளை படித்த பிறகே உங்களைப் பற்றிய விசயம் எங்களுக்குத் தெரிய வந்தது. அந்தக் காலத்தில் எனது தாத்தா செய்த தவறினால் அப்பா கோழை



படிப்பகம்

யாக நடந்து கொண்டுள்ளார். அவ்வைப் பற்றிய உங்கள் எண்ணம் என்ன வென்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் ஒவ்வொரு நிமிடமும் உங்களுடனேயே வாழ்ந்துள்ளார் என்பது மட்டும் சத்தியம். அவரது உடலுக்கு மட்டுமே நாங்கள் சொந்தக்காரர்களாக இருந்திருக்கிறோம். மனதிற்கும், உயிருக்கும் நீங்கள் மட்டுமே சொந்தம் என்பதை கடைசி நிமிடத்தில் புரிய வைத்துள்ளார். தயவு செய்து எங்களுக்கு சொந்தமான அந்த உடலில் இருந்து உங்களுக்கு மட்டுமே உரிய அந்த உயிரை விடுவித்து அந்த ஜீவனுக்கு பாவ மன்னிப்பு வழங்குங்கள். உங்களுக்குச் செய்த துரோகத்தை எண்ணி எண்ணி ஊசலாடிக் கொண்டிருக்கும் அந்த உயிருக்கு விடுதலை கொடுங்கள் அம்மா..." செல்வம் சட்டென்று தேவகியின் கால்களில் விழுந்து விட்டான்.

சட்டென கால்களை நகர்த்திக்கொண்ட தேவகி "என்னப்பா இது... எழுந்திரு" என்றார் பதட்டமாக. அவரது கண்கள் கலங்கியிருந்தது. இன்றைய விஸ்வம் அவரது மனதில் இல்லவே இல்லை. தான் நேசித்த அந்த விஸ்வா நட்பும், காதலுமாய் கை கோர்த்து நடைபயின்றவன். தனக்காக உயிரையும் விட காத்திருந்தவன். இப்போது கட்டிலில் கிடக்கும் இந்த விஸ்வம் இல்லை. இவரை நான் எப்படி போய் பார்ப்பது.

"அம்மா, நீங்கள் யோசிப்பதைப் பார்த்தால் எனக்கு பயமாக இருக்கிறது. வர மாட்டேன் என்று மட்டும் தயவுசெய்து கூறி விடாதீர்கள்" செல்வம் கெஞ்சினான்.

"நான் எப்படி அங்கே வர முடியும் தம்பி. எனது மனத் தவிப்பை உன்னிடம் சொல்ல முடியவில்லை. சொல்லவும் மாட்டேன். விஸ்வத்திடம் கேட்க வேண்டிய கேள்விகளை எல்லாம் உன்னிடம் கேட்க முடியுமா என்ன. இத்தனை வருடங்களாக எந்த ஆதரவும் இன்றி நான் தவித்த தவிப்பு. நான் நினைத்திருந்தால் அந்த முருகன் கோவிலில் நடந்ததை மறந்து விட்டு வேறொருவருடன் வாழ்ந்திருக்க முடியும். ஆனால், விஸ்வா என் மீது வைத்த அன்பு, நீ எனக்கு மட்டுமே உரியவள் என்று கூறிய வார்த்தை, குங்குமம் வைத்து மோதிரம் மாற்றிக் கொண்டது இவற்றையெல்லாம் மதித்து ஒரு யோகியாய் வாழ்ந்து விட்டேன். இந்த சூழ் நிலையில் நான் அவரை மாறுபட்ட ஒரு சூழலில் எப்படி பார்க்க முடியும். இன்னொரு குடும்பத்திற்கு தலைவராய் இருக்கும் அவரை நான் எந்த உறவை வைத் துக்கொண்டு பார்க்க வர முடியும்" தேவகி மிக மிக மென்மையாக பேசினார். கோபப்பட்டு ஆக்ரோஷமாய் கத்த வேண்டிய விசயத்தை எவ்வளவு மெல்ல கையாளுகிறார். செல்வம் அந்த நிலையிலும் வியந்தான். இப்படிப்பட்ட ஒருவரை தவிக்க விட்டு விட்டீர்களே அப்பா.

"அம்மா, தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். அங்கே இருப்பது எனது தந்தையின் உடல். துடித்துக் கொண்டிருப்பது உங்கள் விஸ்வாவின் உயிர். ப்ளீஸ்... என்னோடு வாருங்கள். குற்ற உணர்வில் துடித்துக் கொண்டிருக்கும் அவரை அமைதியாக உயிர்விட செய்யுங்கள்" உருக்கமாக எடுத்துக் கூறி அவரை சம்மதிக்க வைத்து அழைத்துச் சென்றான்.

வீட்டில் மயான அமைதி நிலவியது. தேவகியை எல்லோரும் ஆர்வத்துடனும், வியப்புடனும் பார்த்தனர். ஒரு சிலர் மரியாதைக்கு எழுந்து நின்றனர்.

விஸ்வம் கிழிந்த நாராய் கட்டிலில் கிடந்தார். முதுமையை விட மனநோய் அவரது உடலை உரு மாற்றிவிட்டிருந்தது. தேவகி மெல்ல அவரது கட்டிலருகே சென்றார். சுற்றிலும் விஸ்வத்தின் உறவுக்காரர்கள். கொஞ்ச நாட்களுக்கு முன்பு பார்த்தபோது கூட நன்றாக இருந்தாரே. அதற்குள் இப்படி உருக்குலைந்து போக முடியுமா. எனது நினைவுகள் இந்தளவு மோசமாக இவரை தாக்கியிருக்கிறதா. தேவகி ஏதோ அர்த்தத்துடன் செல்வத்தைப் பார்க்க, அவன் சிறிது நேரத்தில் கூடியிருந்த உறவுகளை விலக்கி வெளியேற்றினான்.

விஸ்வத்தின் குரல் தெளிவாக ஒலித்துக் கொண்டிருந்தது. "தேவகி... தேவகி..."

"தேவகி... உங்க தேவகி வந்திருக்காங்கப்பா" அவரிடம் எந்த அசைவும் இல்லை. மீண்டும் மீண்டும் பல முறை கூறினான். எந்த பலனும் இல்லை. அவர் இப்போது தேவகியின் விஸ்வாவாக அல்லவா இருக்கிறார்.

"அம்மா... நீங்கள் கூப்பிட்டுப் பாருங்களேன்"

தேவகி குனிந்து அவரது காதருகே "விஸ்வா... விஸ்வா, நான் தேவகி வந்திருக்கேன் விஸ்வா" என்றார். அந்தக் குரலை கேட்டதுமே விஸ்வத்தின் கண்களுக்குள் ஒரு உயிரோட்டம். மூடியிருந்த இமைகளுக்குள் கருவிழிகள் அங்குமிங்கும் நகர்வது தெரிந்தது. "விஸ்வா, கண்ணைத் திறந்து பாருங்கள். உங்கள் தேவகி வந்திருக்கிறேன். பாருங்கள் விஸ்வா..."

இப்படியும் நடக்க முடியுமா எனும் விதத்தில் உடலில் அசைவு. ஒரு துடிப்பு. மெல்ல கண் இமைகள் திறந்தன. தேவகியைப் பார்த்ததும் புரிந்து கொண்டதற்கு அடையாளமாக கண்கள் சுடர்விட்டன. "தேவகி... தண்ணி... தண்ணி" முணு முணுத்தார். செல்வம் நீட்டிய பால் செம்பிலிருந்து சிறிய கரண்டியால் பாலை எடுத்து புகட்டி விட்டார். தேவகி கொடுத்த பால் அவ்வளவும் உள்ளே இறங்கிக் கொண்டிருந்தது. பிறகு போதும் என்று தலையாட்டினார். தேவகியின் முகம் தெளிவாக அடையாளம் தெரிய, தன் மெலிந்த கைகளை எடுத்து கும்பிட்டார். "என்னை மன்னிச்சிடும்மா" கும்பிட்ட கைகளை தன் கரங்களுக்குள் பிடித்துக் கொண்ட தேவகி மெல்ல குமுங்கி அழுதார். கைகளை அவர்விட்ட போது விஸ்வாவின் உயிர் பறந்துவிட்டிருந்தது. தன்னையே பார்த்துக் கொண்டிருந்த அந்த விழிகளை இமைகளை அழுத்தி மூடிவிட்டு எழுந்தவர் தன் நெற்றி குங்குமத்தை எடுத்து அவரது நெற்றியில் பதித்து விட்டு செல்வத்திடம் சென்றார். வெறுமையான அந்த முகம் கலங்கியிருந்தது. "செல்வம், எனக்கு அவரோட டைரிகளை மட்டும் தொடுக்க முடியுமா... என்னைப் பற்றிய அவரது நினைவுகள் என்னோடு போகட்டும். உங்களை தொடர வேண்டாமே. ப்ளீஸ்."

செல்வம் கொடுத்த அவ்வளவு டைரிகளையும் பெற்றுக்கொண்டு அந்த காதல் தீபம் வெளியேறிக் கொண்டிருந்தது.

■


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



ரூத் மனோரமா கர்நாடக மாநிலத்திற்கு இடம் பெயர்ந்த தமிழர். 'விமன்ஸ் வாய்ஸ்' என்ற அமைப்பின் பொதுச்செயலாளர். 'நிவசிலக சம்யுக்தா துங்கட்டன்' எனும் குடிசைப்பகுதி மக்களுக்கான கூட்டமைப்பைத் தொடங்கிய அமைப்புச் செயலாளர். இவ்வகையில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மகளிர்க்கு தொண்டாற்றியது, பின்னால் தேசிய அளவிலான 'பெண்களின் கூட்டமைப்பு' (National Allaiance of Women) என்ற இயக்கத்தைத் தொடங்கி அதன் தலைவராகப் பொறுப்பேற்கும் நிலைக்குச் சென்றது. இவ்வமைப்பின் கிளைகள் இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ளன. இவர் பிறகு தேசிய அளவிலான தலித் பெண்கள் கூட்டமைப்பைத் துவங்கினார். தலித் பெண்களுக்கான தேசிய அளவில் துவங்கப்பெற்ற முதல் அமைப்பு என்பது இதன் சிறப்பு. இவ்வமைப்பின் மூலம் தலித் பெண்களின் தேவைகளையும் கோரிக்கைகளையும் தேசிய அளவில் பிரதிபலித்தார். சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள பெண்களுக்கான அரசு திட்டங்களில் இவரது பங்களிப்பு கணிசமானது. மத்திய அரசின் தொழிலாளர்களுக்கான அமைப்பு உருவாக்க மய்யத்தின் செயலாளராகவும் (Secretary, Organisation Building National Centre for Labour), கர்நாடக அரசின் மாநில பெண்கள் ஆணையத்தின் தலைவராக 15 மாதங்களும், கர்நாடக அரசின் திட்டக் கமிஷன் உறுப்பினராக 18 மாதங்களும், பணியாற்றி உள்ளார். மத்திய அரசின் பத்தாவது ஐந்தாண்டு திட்டக் குழுவில் 'பெண்களை அதிகாரப்படுத்துதல்' குழுவின் உறுப்பினர் பதவிக்கு கர்நாடக அரசால் பரிந்துரைக்கப்பட்டார். மாண்புமிகு பாரதப் பிரதமர் தலைவராக உள்ள தேசிய சனத்தொகைக் குழு (National Commission on Population) வின் உறுப்பினராக தற்போது உள்ளார். பெண்கள், குழந்தைகள் குறித்த இவரது செயல்பாடுகள் காரணமாக ஐ.நா. சபை இவரை பெண்கள், மனித உரிமைகள், சுகாதாரம் மற்றும் குடியிருப்பு சம்பந்தமாக பிரேசில், பாங்காக், நியூயார்க், கெய்ரோ, வியன்னா, மணிலா, பெய்ஜிங் போன்ற இடங்களில் நடத்தப்பட்ட கூட்டங்களுக்கு வருமாறு விடுத்த அழைப்பை ஏற்று சென்று வந்துள்ளார்.



சுருங்கச் சொல்லின், தேசிய அளவிலும் உலக அளவிலும் புகழ்பெற்ற தலைவரும், வறிய வருக்கும், பெண்களுக்கும், விளிம்பு நிலை மனிதருக்கும் தொடர்ந்து பாடுபட்டுவரும் ரூத் மனோரமாவை நேர்முகம் கண்டார் சிறந்த ஆங்கில எழுத்தாளரும், கவிஞரும், சிந்தனையாளருமான **மீனா கந்தசாமி.** தமிழில் **சிவகாமி.**

# "தலித் விடுதலையே நாட்டின் விடுதலை"

ஒவ்வொரு நாளுமா நோபல் பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்டவரை சந்திக்கின்றோம்? விவரிக்க முடியாத படபடப்பு எனக்குள். காலை 8.30 மணிக்கே அம்பேத்கர் மணிமண்டபத்துக்கு சென்று காத்திருந்தேன். தேசிய தலித் பெண்கள் கூட்டமைப்பின் தலைவர் ரூத் மனோரமா அங்கு வர ஒப்பந்தம். இந்த நாள் - அக்டோபர் 14 - சிறப்பு வாய்ந்த நாள். அண்ணல் அம்பேத்கர் 49 வருடங்களுக்கு முன்பு புத்த நெறிக்கு செல்லும் முகமாக தீட்சை பெற்ற நாள். பேசப்போவதும் சாதாரண விஷயங்களில்லை. எனவே பரஸ்பர விசாரிப்புகளை இறுதியில் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து கேள்விகளை அடுக்கினேன். பளிச்சென்று பதிலிறுக்கத் துவங்கினார் ரூத்.

**மீனா கந்தசாமி**

*நீண்ட காலமாகவே பெண்ணியம், பெண்கள் இயக்கம் நடத்தி வந்த நீங்கள், எதனால் பெண்ணியத்தையும் சாதிய ஒடுக்குமுறையையும் இணைத்துக்கொள்ளத் தலைப்பட்டீர்கள்? தலித் பெண்ணியம், தலித்துகளுக்கான தனி இயக்கம் ஆகிய இவற்றிற்கு என்ன தேவை ஏற்பட்டது?*



படிப்பகம்

**ரூத் மனோரமா**

பெண்கள் இயக்கத்தில் இருந்த பெண்கள் பெண்ணியத்தைத் தெளிவாக விளங்கிக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு வகையில் பெண்ணியம் என்பதே சமூகத்திற்குப் புறம்பான அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்ப்பதுதான். ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்தும் அது பொதுவாக 'சமத்துவம்' என்பதை அடிப்படையாகக் கொண்டது. எனவே சாதி காரணமான ஒடுக்குமுறையையும் அது எதிர்க்கிறது. ஆனால் பெண்ணியலாளர்கள் இவ்விஷயங்களைக் கண்டு கொள்வதே இல்லை. இது எனக்குள் பெரிய கேள்வியாக முளைத்தது.

அடுத்து, பெண்களை இயக்கப்படுத்தும் போது நான் கவனித்ததில் பெண்களில் விவசாயக் கூலிகளும், தலித் பெண்களும், பழங்குடிப் பெண்களுமே அதிக அளவில் கூட்டங்களிலும், போராட்டங்களிலும் கலந்து கொள்கின்றார்கள். ஆனால் அவர்களில் பெரிய தலைவர்கள் யாருமில்லை. கல்வியறிவின்மை ஒரு காரணமாகச் சொல்லப்பட்டாலும், அவர்களில் திறமையானவர்களுக்கு இயக்கங்களில் பொறுப்புகள் அளிப்பதில்லை. அவர்கள் எப்போதுமே தொண்டர்களாகவே இருப்பார்கள். இந்த இடைவெளி எதனால்? இங்கு பெண்ணியம் பேசுகின்றவர்கள் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமையை முன்னிறுத்தி எதிரி யார் எனத் தேடி 'ஆண்கள்' என்ற வன்மமான பதிலை வைப்பவர்கள். தந்தை வழிச் சமூகமே இதற்குக் காரணம் என்ற எளிய புரிதல்கூட கிடையாது. இவர்களுக்கு ஆண்களெல்லாம் எதிரிகள். இதுதான் நடக்கிறது இங்கே. தந்தைவழிச் சமூகம் என்று புரிந்து கொண்டால் அதன் அடுத்த பக்கம் சாதி ஒடுக்குமுறை என்பதை புரிந்து கொள்வது கடினமா? ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல அவை ஒட்டிப் பிறந்தவை. தந்தை வழி சமூகம் எப்படி மனிதர்களை படிநிலைக்குள் வைத்துப் பார்க்கிறதோ, அவ்வாறே சாதியும் சமூகத்தைக் கூறு போட்டு பலவித தடைகளை விதித்துள்ளது.

என் அனுபவத்தில், சிந்தனைத் தளத்தில் அவர்களின் இப்போதாமையை எப்போதும் கண்டு வந்துள்ளேன். சரி, தலித் பெண்களை எடுத்துக் கொள்வோம். இவர்களுக்கு போதிய தலைமைத்துவம் கிடையாது. வசதி வாய்ப்புகளும் கிடையாது. இவற்றை ஏற்படுத்துவதில் எந்தப் பெண்ணியவாதிக்கும் அக்கறை கிடையாது.

நான் 'கெயில் ஓம்வெட்'டை சந்தித்து இவற்றைப் பற்றி விரிவாகப் பேசினேன். "ரூத், உங்கள் சிந்தனைதான் என்னுடையதும்" என்றார் அவர். பிறகு அவர் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள தலித் தலைவர்கள் பலரை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர்களெல்லோரும் அம்பேத்கருடனும் அவரது இயக்கத்துடனும் தொடர்புடையவர்கள். இந்த சந்திப்புகளுக்குப் பிறகு, தலித் பெண்களுக்கான தனி இயக்கம் அவசியம் என்பதை உணர்ந்தேன். "தலித் பெண்களுக்கு வறுமை, ஆண்-பெண் ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை ஆகிய மூன்று பிரச்சினைப்பாடுகள். எங்கள் குரல் உங்கள் சபைகளில் ஒலிக்க அதிகம் சிரமப்பட வேண்டி இருக்கிறது." இவ்வாறு நான் பேசத் துவங்கியதும் "நோ, நோ, எல்லாப் பெண்களும் ஒன்று மாதிரிதான். பிரித்து விடாதீர்கள்" என்றார்கள். இதுதான் அவர்கள் தந்த ஒரே பதில். பிறகு நான், தலித் பெண்களுக்கான இயக்கம் துவங்க சீரிய முயற்சிகள் மேற்கொண்டேன்.

**மீனா**

எப்படி உங்கள் அமைப்பைத் துவக்கினீர்கள்? தலித் பெண் இயக்கம் உருவாக்க உங்களைத் தூண்டியது எது? இப்போது நீங்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் யாவை?

**ரூத்**

1980-களில் இது குறித்து யோசித்திருந்தாலும், அமெரிக்க கறுப்பினப் பெண்கள் தங்களுக்கான தனி இயக்கம் கண்டிருந்தது தனி இயக்கம் துவங்க தூண்டுதலாக இருந்தது. தங்கள் பிரச்சினைகளை வெள்ளைப் பெண்கள் தீர்த்து வைப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லாததோடு, அதற்காகக் காத்திராது இயக்கம் கண்டவர்கள் அவர்கள்.

கறுப்பினப் பெண்ணியம் பற்றிய புத்தகங்களையும் படிக்கத் துவங்கினேன். கறுப்பருக்கும் தலித்துகளுக்கும் நிறைய ஒற்றுமைகள் இருப்பதை அறிந்தேன். அவர்கள் நிறவெறியை எதிர்த்ததோடு, வர்க்க ஒடுக்குமுறையையும் எதிர்த்தார்கள். கறுப்பருக்கும் தலித்துக்கும் ஒற்றுமை உண்டு. கறுப்பர்களின் வேலையின்மை காரணமாக கஞ்சா, குடி இவற்றில் ஈடுபட்டு வந்தார்கள் நமது (தலித்) இளைஞர்கள் போலவே.

இவ்வாறாக 1987-இல் தேசிய தலித் பெண்கள் கூட்டமைப்பு துவக்கம் கண்டது.

**மீனா**

சரி, நம் மக்கள் அதை எப்படி எதிர்கொண்டார்கள்?

**ரூத்**

(சிரிப்பு) என்னைப் பெண்ணியவாதி என்று கிண்டல் செய்தார்கள். 'நம்மை எதிர்க்கிறார்' என்று கூறியதோடு "நம் சமூகத்தில் ஆண் பெண் சமத்துவமாக இல்லையா?" என்று கேட்டார்கள். நான் சொன்னேன் "ஆமாம், சமத்துவமிருக்கு - ஆணும் பெண்ணும் நன்றாகக் குடிப்பதற்கு. ஆனால் இது என்ன சமத்துவம், ஆண் மட்டும் குடித்தவுடன் பெண்ணைப் போட்டு அடிப்பது?" பிறகு கேட்டேன் "நமது சமூகத்தில் ஏன் பெண்களை படிக்க வைப்பதில்லை. வாய்ப்புகள் தருவதில்லை?" அதற்கு "நீ பெண்ணியவாதியாக மாறி விட்டாய்" என்றார்கள். நான் சொன்னேன் "ஆமாம், நான் பெண்ணியவாதிதான். ஆனால் நான் தலித் பெண்ணியம் பேசுகிறேன், சோஷலிஸப் பெண்ணியம் பேசுகிறேன்."

ஆண்கள் என்னுடன் நட்பாகப் பழகினாலும் அடிமனதில் என்னைத் தள்ளி வைத்தே (சிரிப்பு) பார்க்கிறார்கள். இதெல்லாம் நுணுக்கமாக செயல்படுத்தப்படுகிற விஷயம். வார்த்தைகளால் உறுதிப்படுத்த முடியாது. இதெல்லாம் நமது சமூகத்து ஆண்கள் தான் செய்வது. என்னை ஒரு 'ஸ்டீரியோ டைப்'பாகத்தான் பார்க்கிறது, ரூத்தா, பெண்களைப்பற்றிதான் பேசுவார் என்று.

நான் தலித் சேனா பாஸ்வானை ஒரு விழாவில் கேட்டேன். "எங்கே உங்களமைப்பின் பெண்கள்? தலித் பெண்கள் எவ்வளவு போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்? திசுந்தூர் விவகாரத்தை எடுங்கள். கொலை

www.padippakam.com

களுக்குப்பிறகு போலீஸும் அவர்களைத் தாக்கத் தொடங்கியதும் ஆண்கள் எல்லோரும் ஊரைவிட்டு ஓடிவிட்டார்கள். பெண்கள் நகர மறுத்து தாக்குதல்களை சமாளித்து, ஊரையும் சமுதாயத்தையும் காப்பாற்றினார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கு உங்கள் இயக்கத்தில் இடமில்லையா?" என்னிடம் ஒரு கைக்கடிகாரத்தைக் கொடுத்து அதை சிறப்பு விருந்தினருக்குக் கொடுக்கும்படி சொன்னார்கள். "நான் இங்கே என் கருத்தை அளிக்க வந்தேனே அன்றி வாட்சை அல்ல" என்று சொல்லி மறுத்துவிட்டேன். எனக்கு இரண்டே இரண்டு நிமிடம் கொடுத்தார்கள். நான் அதைத் தாண்டி அதிக நேரம் எடுத்துக்கொண்டபோது பாஸ்வான் 'பரவாயில்லை சகோதரி' என்றார். நான் "இப்போது மணி என்ன? இரவு 12 மணி. இந்த நேரத்திலும் இங்கு திரளாகப் பெண்கள் குவிந்திருக்கிறார்கள். ஆனால் உங்கள் இயக்கத்தில் அவர்களுக்கு எந்தப் பொறுப்பும் தர மாட்டீர்கள், அப்படித்தானே? ஏன் மேடையில் எந்தப் பெண்ணுமில்லை?" என்று வினாவினேன்.

**மீனா**

ஆனால் புரட்சியாளர் அம்பேத்கர் இதையா விரும்பினார். அவர் பெண்களுக்கு என்னவெல்லாம் செய்திருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே?

*ரூத்*

தலித்துகளெல்லாம் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கிறார்களா என்றே தெரியவில்லை. நாக்பூர், கான்பூர் மாநாடாகட்டும், பம்பாய் மாநாடாகட்டும். அவர் பெண்களுக்கு எப்போதுமே முன்னுரிமை கொடுத்து வந்தார். முதலில் பெண்களுக்கென்று தனி அமர்வுகள் நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றி அந்தத் தீர்மானங்களை பொது மாநாட்டிற்கு எடுத்துச் செல்வார். ஊர்மிளா பர்வார் எழுதி எலனூர் செலியட் எனும் அமெரிக்க வரலாற்று சமூகத்துறை பேராசிரியர் முன்னுரை எழுதிய 'நாங்களும் வரலாறு படைத்திருக்கிறோம்' (We Too Have Made History) என்னும் புத்தகத்தைப் படித்தால் அம்பேத்கரை சந்தித்த பெண்கள் இயக்கத்துக்காக உழைக்க முன்வந்திருப்பது விளங்குகிறது. இன்றுகூட நம் சமுதாயத்தில் போதுமான பெண் தலைமை இல்லை. 'எங்களுடன் பெண்கள் இருப்பதைப் பார்த்தால் மற்றவர்கள் தவறாகப் பேசுவார்கள்' என்று (சிரிப்பு) பரிதாபகரமாகப் புலம்புகிறார்கள் ஆண் தலைவர்கள். அவர்களைப் பொறுத்தவரை பெண்கள் என்றால் தொந்தரவுதான். அதிலிருந்து தப்பிக்கவே விரும்புகிறார்கள்.

*மீனா*

தொல்லை தருபவர் என்ற முத்திரை உங்கள் மீது விழுந்துவிட்டது. இல்லையா? பெண்கள் இயக்கத்திலோ நீங்கள் பிரிவினைவாதி. அப்படித்தானே?

*ரூத்*

ஆமாம். என்னைப் பிரிவினைவாதி என்றவர்களிடம் சொன்னேன் "பெண்மணிகளே, பாலியல் பற்றிப் பேசுவதுதான் பெண்ணியம் என்றால், தலித் பெண்களின் உடல்கள்தான் இங்கு வன்முறைக்காளாக்கப்படுகின்றது. உங்களது தத்துவங்களுக்கு வாழ்கின்ற சாட்சிகள் அவர்கள். பாலியலும் கருவுறுதலும் சாதி மூலமாகத்தான் கட்டுப்படுத்தப்படுகிறது. சாதிப் பெண்கள் தங்கள் குலம் கோத்திரம் என்ற பெட்டிக்குள்ளே முட்டை போடுபவர்களாக முடக்கப்பட்டிருக்கிறார்கள். பாலியலும் கருவுறுதலும் எப்போது பாதுகாப்பு கவசங்களுக்குள் முடப்படுகிறதோ. அப்போதே நீங்கள் வலுவிழக்கிறீர்கள், அடிமைப்படுகிறீர்கள்." இப்படிப் பேசத் துவங்கினேன் நான்.

பெண்கள் இயக்கத்தினர் அதிர்ந்து போனார்கள்-பிராமணியத்தையும், சாதியையும் தாக்கத் துவங்கியதால். பதிலுக்கு என்னைத் தாக்கத் துவங்கிவிட்டார்கள். எப்படி? 'இதோ நமது சிறந்த தலித் தலைவர்' என்று அழைக்கத் துவங்கிவிட்டார்கள். தீண்டாமையின் பிரயோகம் இது என்று எனக்குத் தெரியாதா? இதுவரை என்னைப் பெண்ணாகப் பார்த்தவர்கள் என்னை தலித்தாக பார்க்கத் துவங்கி விட்டார்கள். வேறெவரையும் போல!

இப்போதுகூட என்னை அறிமுகப்படுத்தும் போது "ரூத் தலித்தியவாதி. இவர் தலித் பெண்களைப் பற்றிப் பேசுவார்" என்கிறார்கள். புரிகிறதா, எப்படி குயுக்தியுடன், உள்நோக்கத்துடன் பேசுகிறார்களென்று

இது ஒருவகையில் நல்லதுதான். இது நல்ல அடையாளம். ஆனால் இதுவும் சாதிப்படிநிலையின் ஒரு அம்சம்தான். தலித் விஷயங்கள் முக்கியத்துவமில்லாதவை. ஆகவே அதை எனக்குக் கொடுத்துவிட தீர்மானித்தார்கள். பெரிய விஷயங்கள், அதாவது அணு ஆயுத குறைப்பு, உலகமயம் இவையெல்லாம் முக்கியமானவை. அவற்றைப்பற்றி சாதியாளர்களாகிய நாங்கள் பேசுவோம் என வகுத்துக் கொண்டார்கள். இந்த இவர்களின் போக்கு தலித் பெண்களுக்கு சவால்தான்.

**மீனா**

தேசிய தலித் பெண்கள் கூட்டமைப்பு எங்கு செயல்படுகிறது?

*ரூத்*

இது இன்னமும் பதிவு செய்யப்படாத அமைப்புத்தான். இது தென் மாநிலங்களிலும், வட மாநிலங்களில் மகாராஷ்டிரா, ஹரியானா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் செயல்படுகிறது. திட்டப் பணிகளில் 17 பெண் தலைவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அடித்தட்டு மக்களை அணி சேர்ப்பதில் ஆர்வமாக உள்ளோம். எங்களுக்கு அடித்தட்டு மக்கள் மத்தியிலிருந்து ஆதரவு பெருகுகிறது. அரசுக்கு தலித் பெண்கள் பற்றிய திட்ட வரைவுகளைத் தொகுத்து கொடுத்துள்ளோம். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. தங்களுக்கான தனி இயக்கம் இருப்பதையும் தலைவர்கள் உருவாவதையும் பெண்கள் உணர்ந்து வருகிறார்கள். இதன் வளர்ச்சியில் தாமதம் இருந்தாலும், இவ்வியக்கத்தில் பெண்கள் இருப்பதைப் பெருமையாகக் கருதுகிறார்கள். பின்-அம்பேத்கரிய நிகழ்வுகள் இவை.

**மீனா**

இதில் எந்தப் பின்னடைவையும் நீங்கள் சந்தித்ததில்லையா?

*ரூத்*

தொடக்கத்தில் சிக்கல்கள் எழத்தான் செய்தன.



படிப்பகம்

www.padippakam.com

'கெய்ல் ஓம்வெட்'டுடன் இதைப் பற்றித் தொடர்ந்து விவாதித்து, உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன். திரும்பிப் பார்ப்பது என்பது இனி இல்லை!

**மீனா**

பெண்கள் மசோதாவில் உங்கள் பங்கு என்ன? உள் ஒதுக்கீடு பற்றி உங்கள் கருத்து...

*ரூத்*

பெண்களுக்கு இட ஒதுக்கீடு வரும்பட்சத்தில் தலித் பெண்களும் பயனடைவார்கள். தலித் பெண்களை ஒதுக்கிவிட்டு பெண்கள் மசோதா எப்படிக் கொண்டு வர முடியும்? இப்பொழுது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள் இட ஒதுக்கீடு கேட்கிறார்கள். முலாயம் சிங் திடீரென்று விழித்துக்கொண்டு பெண்கள் பற்றி பேசத் துவங்கியுள்ளார். அவர் தமது கட்சியில் பெண்களுக்கு இடம் எப்போதுமே தந்ததில்லை. மேல்தட்டுப் பெண்கள் இடம் பிடித்து விடுவார்கள் என்று பயப்பட ஆரம்பித்துள்ளார். எவ்வளவுக்கெவ்வளவு பெண்கள் மசோதா விரைவில் நிறைவேற்றப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

**மீனா**

மதமாற்றத்தை சிலர் தீர்வாக முன்வைக்கிறார்கள். அதைப்பற்றிய விவாதங்கள் தொடர்கின்றன...

*ரூத்*

எவ்வளவு பேர் விவாதிக்கிறார்கள் என்பது விஷயமல்ல. அம்பேத்கர் சொல்லியிருக்கிறார் (சிரிப்பு). அவர் காலத்தில் மதமாற்றம் என்பது இயக்கமாக இருந்தது. ஆனால் இன்று? எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. இன்று தலித்தல்லாதவர்களின் பிரச்சினையாக மாறிவிட்டது.

**மீனா**

நீங்கள் தலித் கிறித்துவர். உங்கள் உணர்வுகள் எப்படி?

*ரூத்*

இது நெடுங்கதை. இந்திய கிறித்துவ தேவாலயங்களில், கிறித்துவர்களில் 70-80% பேர் தலித்துகள். தலித் விடுதலையில் தலித் மதகுருமார்கள் ஆற்றிய பணிகளை, பங்களிப்பை மறுப்பதற்கில்லை. ஆனால் கிறித்துவத்தில் உள்ள சாதியத்தைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக உள்ளது. மார்க்ரெட் ஆல்வா உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நினைவுக்கு வருகிறது. மதமாற்றத்தினால் கறுப்பர்கள் வெள்ளையர்களாவதில்லை. அதுபோலவே தீண்டத்தகாதவர்களும்!

கர்நாடக தலித் சங்கர்ஷ் சமிதியைப் பற்றி எனக்குத் தெரியும். இயக்கவாதிகளில் பலர் தலித் கிறித்துவர்கள். ஆனால் அவ்வியக்கம் தலித் கிறித்துவர்களுக்கு இட ஒதுக்கீடு பற்றிப் பேசுவதே இல்லை. இந்துப் பிடியில் உள்ள தலித்துகள் ஒதுக்கீட்டை தலித் கிறித்துவர்களுக்கு பங்கு போடுவதில் தயக்கம் காட்டுகின்றனர். இட ஒதுக்கீட்டின் பெரும் பங்கு தலித் கிறித்துவர்களுக்கும் போய் விடும் என்ற பயம்!

தலித் கிறித்துவர்களும்தான் வன்கொடுமைக்கு ஆளாகிறார்கள். திருநூரில் தாக்கப்பட்டவர்கள் யார்? ஆனால் வன்கொடுமை தடுப்புச் சட்டம் அவர்களுக்கு பயன்படவில்லை. எனினும் பாதிக்கப்பட்ட தலித் கிறித்துவர்கள் கடுமையாகப் போராடியதால் அரசின் ட்ரிபுயூனல் அந்த கிராமத்திற்குச் சென்றது.

**மீனா**

இந்துத்துவம்தான் சாதியின் மூலம். தலித்துகள் இதை எப்படிப் பார்க்கிறார்கள்?

*ரூத்*

நமது மக்கள் புரிந்துகொள்ளவே இல்லை. இந்துத்துவம் நமது எதிரி என்ற உணர்வே இல்லை. தாங்கள் இந்துக்கள் அல்ல என்று இன்னமும் அறியவில்லை. ஏனெனில் ஒதுக்கீடு அவர்கள் கண்களை மறைக்கின்றது. சுயமரியாதையற்று இந்துக்களின் கடவுளர்களிடம் தஞ்சம் புகுகின்றார்கள். புதுப்புது மாய்மாலத்தைக்கொண்டு இந்து மதம் அரக்கத்தனமாக அவர்களைப் பிடித்துள்ளது. தலித்துகளில் சிலர் சமீபத்தில் இந்துக் கடவுளைத் தரிசிக்கச் சென்றனர். அவர்கள் சென்ற பஸ் குப்புறக் கவிழ்ந்து இறந்தனர். பெங்களூரில் கடவுளுக்கா பஞ்சம்! மூடப் பழக்கங்களினால் உந்தப் பட்டு வேண்டுதல்களை நிறைவேற்ற நீண்ட பயணம் மேற்கொள்கிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறது.

இந்துத்துவம் தலித்துகளைப் பாழடிக்கிறது. குஜராத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே நடைவீரர்களாக தலித்துகள்! இந்துத்துவத்தின் கொடுமைகளை அறிந்திருந்தால் இப்படி மாறுவார்களா? இந்துத்துவமா இவர்களுக்கு சமத்துவத்தை வழங்கும்? ஒவ்வொரு நாளும் புதுப்புதுக் கடவுள்களின் பின்னால் இவர்கள் ஓடுவதைப் பார்த்தால்... அறிவைத் தேடி பயணம் செய்ய அவர்களைத் தூண்ட வேண்டும்.

**மீனா**

பி.ஜே.பியாவது தலித் அஜன்டா என்று சிலவற்றை வகுத்துள்ளது-அது தலித்துகளுக்கு விரோதமானது என்றாலுங்கூட. தலித்துகளை எப்படி தங்களது அருவருப்பு தரும் செயல்களில் பயன்படுத்திக் கொள்ளலாம் எனக் காத்திருக்கிறார்கள். மற்ற அரசியல் கட்சிகளோ தலித்துகளுக்கான எந்தவிதமான கொள்கைகளையும் கொண்டிருக்கவில்லையே!

*ரூத்*

மற்றவர்கள், தலித்துகளில் டம்மிகளை தங்களுடன் சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள். அவர்களின் அடியாட்கள்தான் தலித்துகளின் பிரதிநிதிகள். திறமையானவர்களுக்கு அவர்கள் இடமளிப்பதில்லை. எந்தக் கட்சியும் தலித்துகளின் ஆதரவின்றி ஆட்சி அமைக்க முடியாது என்றாலும் அவர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. தலித் கட்சிகளுக்கு ஒரு இடம் அல்லது ஒண்ணேகால் இடம் (சிரிப்பு) என்று, அதுவும் பெருத்த விவாதத்திற்குப் பிறகு ஒதுக்குகிறார்கள். கட்சி போஸ்டர்கள் ஒட்ட, கூட்டம் கூட்ட தலித்துகள் தேவை. இதை தலித்துகள் உணர்வதே இல்லை. நம் மக்கள் கூட்டங்களில் கை தட்டுவதில்லை. மாறாக விசிலடித்து ஆதரவு தெரிவிக்கிறார்கள். அடுத்தவர்களைப் புகழ்ந்தே நம் மக்களுக்குப் பழக்கம். தாம் பசி பட்டினி கிடந்தாவது



படிப்பகம்

தலைவருக்கு மாலை வாங்கத் தவறுவதில்லை. ஆனால் நம் மக்களோ கூலிகளாக நடத்தப்படுகிறார்கள்.

www.padippakam.com

அரசியல் பலம் தேவை - ஆள்வதற்கு மட்டுமல்ல, அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள; வேலை வாய்ப்புகளை, வளங்களைப் பகிர்ந்து கொள்ள. பதவி, பொறுப்பு மட்டும் போதாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கட்சித் தலைமைக்கு தலையாட்டும் பொம்மைகளாக இருக்கிறார்கள். தனித்துவமிகுந்த ஆளுமையில்லை இதில் பெண்கள் கிடையாது. அவர்களுக்கு முகவரி கூட கிடையாது. அவர்கள் உருவமற்றவர்கள்... இன்மையிலுள்ளவர்கள் (சிரிப்பு).

**மீனா**

அப்போ, தலித் அரசியல் கட்சிகள்தான் இலக்கை நோக்கி நகர்பவை. கர்நாடகா, தமிழ்நாடு அனுபவங்கள் பி.எஸ்.பி., எல்.ஜே.பி. போன்ற அரசியல் கட்சிகள் பற்றி உங்கள் கணிப்பு என்ன?

**ரூத்**

தேசிய அளவில் தத்துவத் தலைமை பின்னால் தள்ளப்பட்டு விட்டது. தேர்தல் அரசியல்தான் பிரதானம். கர்நாடகத்தில் எந்த தலித் அரசியல் கட்சியும் கிடையாது. தமிழ்நாட்டில் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள், கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் உள்ளன. அவர்கள் மக்களை இன்னும் அணிதிரட்டுவதில் தொடர்ந்து செயல்பட வேண்டியுள்ளது. உறுதியாக செயல்பட்டால் இன்னும் பத்து வருடங்களில் அவர்களால் நிறைய சாதிக்க முடியும். சாதி இந்துக்கள் எப்படி அரசியல் கட்சிகளாக வளர்கிறார்கள் என்று பார்க்கிறோம். அவர்களிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் ஒன்று, நாம் மேலும் சனநாயகத்துடன் செயல்பட வேண்டியது அவசியம்.

**மீனா**

தலித்துகளுக்குள்ளே இருக்கும் உட்சாதி முரண்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?

**ரூத்**

தலித் அரசியலுக்கு அவைகள் தடைகள்தான். மற்றவர்கள் இதை பலமாகக் கருதலாம். புரிதலும், பக்குவமற்றும் இருப்பதால்தான் இப்பிரச்சினை. என்னைப் பொறுத்தவரையில் தலித் என்பது சாதி விரோதம் என்ற அடையாளம் மட்டுமே. அது சாதிஅடையாளமல்ல. நாம் சாதிக்கு எதிரானவர்கள். ஆனால் பலரும் இதை சாதி அடையாளமாகவே கருதுகிறார்கள். நமது இயக்கம் சாதி எதிர்ப்பு இயக்கம். நாம் இதைப் புரிந்து கொள்ளாவிட்டால் பிறர் நம்மீது மாறி மாறி சவாரி செய்வார்கள்.

**மீனா**

பெங்களூர் குடிசைப் பகுதிகளில் நீங்கள் ஆற்றிய பணிகள் பிரசித்தம். அதை நீங்கள் பகிர்ந்து கொள்ளலாமல்லவா?

**ரூத்**

உண்மையில் அது நிலப் போராட்டம். அவர்கள் சொல்கிறார்கள், பெங்களூர் அழகிய நகரமாம்! பூங்காக்கள் உள்ளனவாம். ஆகையால் குடிசைகள் அவர்கள் கண்களை உறுத்துகின்றனவாம்! 1985-இல் பெருவாரியான குடிசைகள் அழிக்கப்பட்டன. நாங்கள் அதை எதிர்த்தோம். குடிசைவாசிகளில் 95% பேர் தலித்துகள். அழகிய நகரத்தை சிருஷ்டித்தவர்கள் வேலை முடிந்ததும் அவர்கள் வெளியேறிவிட வேண்டுமாம்! எப்படி கதை? குப்பங்கள் வெறும் இடங்களல்ல, மனிதர்கள். இந்த நாட்டின் பொருளாதாரத் தூண்கள் வீடுகள், ரோடுகள் எல்லாம் அவர்களின்றி இல்லை. தேசிய பொருளாதார வளர்ச்சியில் (GNP) 60% அவர்களுடையது. நான் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குப் போட்டேன். இதன் மூலமாக குப்பத்துவாசிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. ஏதாவது காரணங்களுக்காக அவர்கள் அகற்றப்பட்டாலும் மாற்றிடங்கள் வழங்கப்பட்டன. இப்பொழுது மத்திய அரசு குப்பங்களுக்கான கொள்கை வரைவை மேற்கொண்டுள்ளது.

1985-இல் கர்நாடகத்தின் முதலமைச்சரைப் பார்த்துக் கேட்டேன், எங்கே போவார்கள் குப்பத்து மக்கள்? என்று. அவ்வருடம் ஒரு லட்சம் மக்களைத் திரட்டி போரணி நடத்தினேன். "நிலங்கள் என்ன உங்கள் பாக்கெட்டிலா இருக்கிறது? அவர்கள் குடியிருக்கும் இடங்களைத் தானே கேட்கிறார்கள்?" இவை நாங்கள் எழுப்பிய கோஷங்கள்.

**மீனா**

நீங்கள் பெங்களூர் போன்ற ஹை-டெக் நகரத்தில் வசித்தும் எப்போதும் குடிசைவாசிகள், அங்கு வசிக்கும் தமிழர்கள், தலித்துகள்-தலித் கிறித்துவர்கள், தலித் பெண்கள் என்று கடைக்கோடி மனிதர்களுடனே அடையாளப்படுகிறீர்கள். ஏன்?

**ரூத்**

விளிம்புநிலை மக்களின் தலைவர் என்று அறியப்படுவது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய ஒன்றா? காந்தி குடும்பத்தவள் என்பதில் என்ன பெருமை இருக்கிறது? ஒடுக்கப்பட்டவரோடு இணைந்து செயல்படுவதை பெருமையாக நினைக்கிறேன். அப்படி அடையாளப்படுவது தவிர்க்க முடியாதது. ஏனெனில் எனது லட்சியமும் அவர்களது லட்சியமும் ஒன்றேதான். இவர்களுக்கு உழைத்தால் நான் கௌரவப்படுத்தப்படுகிறேன். இதுவும் ஒரு விஷயம்.

**மீனா**

நீங்கள் உலகம் சுற்றியவர்கள். நோபல் பரிசுக்கும் உங்கள் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஐ.நா. சபை தலித் விஷயங்களில் எவ்வகையில் அக்கறை காட்டுகிறது என்று சொல்ல முடியுமா?

**ரூத்**

தலித் என்பதை தனியாக அடையாளப்படுத்த வேண்டும் என்பதை ஐ.நா. உணர்ந்து விட்டது. இந்த வெற்றியில் தலித்தல்லாதவருக்கும், தலித்தல்லாதவர்கள் சார்ந்த தொண்டு நிறுவனங்களுக்கும் எந்தப் பங்கும் கிடையாது. மனித உரிமை பேசுபவர்கள் தலித் விஷயங்களைப் பேசுவதே இல்லை. தலித் என்ற வார்த்தையைக்கூட பயன்படுத்துவதில்லை. வியன்னா மாநாட்டின் போது 500 மனித உரிமை ஆர்வலர்களும் போராளிகளும் கலந்து கொண்டனர். அதில் என்னையும் சேர்த்து மூன்று



படிப்பகம்

www.padippakam.com

பேர்தான் தலித்துகள். நான் சொன்னேன் "நாங்கள் மனித உரிமைப் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கில்லை. ஏனெனில் நாங்கள் மனிதர்களே இல்லை. நாங்கள் மனிதர்களை விட தாழ்ந்தவர்கள். எங்கள் தேசத்தில் நாய்களும் கழுதைகளும் கூட மதிக்கப்படுகின்றன. ஆனால் நாங்கள் மதிக்கப்படுவதில்லை. எங்களை எங்கள் தேசத்தினர் மனிதர்களாகக் கருதுவதில்லை" என்று. நிறவெறிக்கெதிரான அம்மாநாட்டில் இது ஒரு திருப்பு முனையாக அமைந்தது. நமது அரசுக்கு நான் இப்படி பேசியது கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர்கள் இடையீடு செய்து இது உள் விவகாரம் என்றனர். அப்போது இந்திய நாட்டின் வறுமையும், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையும் உள்நாட்டு விவகாரமில்லையா, அவற்றை மட்டும் பன்னாட்டளவில் விவாதிக்கலாமா?

தற்போது ஐநா. ஒரு துணைக் குழுவை உருவாக்கி தலித் பிரச்சினைகளுக்கான தீர்மானங்களை நிறைவேற்ற உள்ளது. இரண்டு பேர் தனி நியமனம் செய்யப்பட்டு தலித்துகளுக்கு இழைக்கப்படும் அநீதியைக் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்க உள்ளனர். இனி பன்னாட்டளவில் இந்தியா குறித்து வேறுவிதமான அணுகுமுறை உருவாகும்.

**மீனா**

நீங்கள் மதிக்கத்தக்க முன்னோடி என்றளவில் தலித் பெண்களுக்கு ஏதேனும் கூற விரும்புகிறீர்களா?

**ருத்**

தலித் பெண்கள் விழிப்புணர்வும் எழுச்சியும் பெற்று போராட முன்வரவேண்டும். தலித் பெண்கள் எந்நாளும் துயரப்படவே கூடாது. இயக்கங்களோடு இணைந்து ஆண்-பெண் ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறைக்கெதிராக போராட முன்வர வேண்டும். அவர்கள் வாழ்க்கையை மாற்றிக்கொண்டே சமூக மாற்றத்திற்கும் உழைக்க வேண்டும்.

தலித் ஆண்கள் கூட வேலை கிடைத்து விட்டது, இனி ஓய்வில் இருக்கலாம் என்ற எண்ணமில்லாது தலித் விடுதலைக்கு பாடுபட வேண்டும். தலித்துகளுக்கு உழைப்பது என்பதே நாட்டிற்கு உழைப்பதாகும். இது தான் அவர்களின் நாட்டுப் பற்றாக இருக்க முடியும். மேதை அம்பேத்கர் கூறியதை நினைவு கூர்கின்றேன். "என் சமுதாயம் என் நாட்டை விட முக்கியமானது." 250 மில்லியன் தலித் மக்களை ஒருங்கிணைப்பது என்பது நாட்டின் உருவாக்கம். அம்பேத்கர் வகுத்த பாதையில் உண்மையாக உழைக்க வேண்டும். மார்க்ஸியம் மற்றும் தலித் விடுதலைக்கு ஏதுவான அனைத்துக் கருத்தியல்களையும் ஏற்றுக் கொள்வதும் இதில் அடக்கம். இந்நாடு தொழிலாளர்களை மதிக்கும், மனித மாண்பைப் போற்றும், பெண்களை மதிக்கும் நாடாக வேண்டும்.

■

---

கவனத்திற்கு வந்த துண்டறிக்கை

# ஓட்டுக்கு மட்டுமா தலித்துகள்? கண்ணீர் விடும் காலனி மக்கள்

- *டாக்டர் மு.வா. கரித்துண்டு புத்தகத்தில் வங்கனூர் அழகிய கிராமம் என்றார். ஆனால் இன்று...*
- *25 வருடம் ஆகியும் நீர்வரத்து கால்வாய் இல்லாமல் வரண்டு கிடக்கும் வங்கனூர் ஏரி, சிங்கசமுத்திரம் ஏரி, தாங்கல் ஏரி ஆகிய நீர்நிலைகளை பெரும் புள்ளிகள் அபகரித்த கொடூரம்!*
- *விடும், மக்களும் இல்லாத ஒரு வாரியார் நகருக்கு பல லட்சக் கணக்கு செலவில் சிமெண்ட் சாலை. ஆனால் காலனிக்கு அரசு வழங்கும் தொகுப்பு வீடுகள் நிறுத்தப்பட்டுள்ளது.*
- *தலைமை ஆசிரியரே இல்லாத மேல்நிலைப் பள்ளி சீர் கெட்டுக் கிடக்கிறது.*
- *ஒரு நாள் கூட பயன்படுத்தாத சமுதாயக் கூடம் - வங்கனூர் பெரிய குளக்கரையில்.*
- *சின்ன குளக்கரை மற்றும் பஸ் ஸ்டான்டில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு.*
- *அரசாங்க வேலை பஞ்சாயத்தில் செய்யும்போது சேரி ஆட்களை கூலிக்குக்கூட வேலைக்கு அமர்த்துவதில்லை.*
- *வள்ளுவர் காலனியில் தண்ணீருக்கு ஏகப்பட்ட அவஸ்தை. அரசு டாங்க் இருந்தும் நீர் ஏற்ற வசதி இல்லை. சிமெண்ட் சாலை இல்லை.*
- *பல காலனிகள் இருந்தும் (S.B. கண்டிகை, C.P. கண்டிகை, மேட்டு காலனி) ஏழைகள் பயன்படுத்த சமுதாயக் கூடமில்லை.*
- *மேட்டு காலனி ரோடு சாதி வெறியால் தடைபட்டு நின்று விட்டது.*

*இங்ஙனம்*

**புரட்சி பாரதம் கட்சி**

*திருவள்ளுவர் மாவட்டம்*



படிப்பகம்

www.padippakam.com


# சுயமரியாதையின் குறியீடுகளாகும் சிலைகள்



நானும், தோழர் சாலைசெல்வமும் சிறிய பயணமாக முதுகுளத்தூர் பகுதி வீரம்பல் கிராமம் வரை போய்த் திரும்பும் ஆசையோடு புறப்பட்டோம். இம்மானுவேல் சேகரன் பற்றிய ஆர்வம் இப்படி எங்களை பயணப்பட வைத்தது. முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தை அடைந்ததும், பேருந்து நுழையும் மற்றும் வெளியேறும் இரு வாயில்களிலும் இரண்டு சிலைகள் பயணிகள் கண்ணுக்குப் படாமல் போகாவண்ணம் அமைக்கப்பட்டிருந்தன. தமிழகத்தின் தென்பகுதியான ராமநாதபுரம் பசும்பொன் உ. முத்துராமலிங்கம் பிறந்த மாவட்டம் என்பதோடு, ஒடுக்கப்பட்ட வகுப்பினரான தேவேந்திரகுல வேளாளர் என்று தங்களை அழைத்துக்கொள்ள விரும்பும் பள்ளர்களும் வீரமிகு போர்களில் ஈடுபட்ட பகுதி என்பதை இவ்விரு சிலைகளின் இருப்பு உணர்த்துவதைப்போல அமைந்திருக்கின்றன. ஒரு வாயிலில் பசும்பொன் முத்துராமலிங்கம் சிலை, மற்றொரு வாயிலில் வீரன் சுந்தரலிங்கனார் சிலை கம்பீரத்தோடு குதிரையில் அமர்ந்திருப்பதுபோன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. சிலை அமைத்தல், பெயரிடுதல் போன்றவை மேலோட்டமான நடவடிக்கைகள் என்று தீவிர அரசியல் உணர்வாளர்களால் சொல்லப்படுவதுண்டு. ஆனால் கருத்து தான் மேலோட்டமானது என்பதை புரிந்து கொள்ள எனக்கு நாள் பிடித்தது.

நிலவும் சாதிய சமூகத்தில் மானமிக்க வாழ்வை கட்டமைக்கும் சமூகக் குழுவின் சுயமரியாதைக்கான அடையாளமாக சிலைகள், பெயரிடுதல் ஆகியவற்றை நாம் பார்க்க முடியும். ஆதிக்க வகுப்பினை நேரடி மோதலாக மட்டுமில்லாமல் வரலாறு, பண்பாடு, பொருளாதாரம் போன்ற பல்வேறு தளங்களிலும் எதிர்கொள்கிறது ஒடுக்கப்பட்ட சமூகம். தான் ஒடுக்கப்பட்ட சமூகமாக ஆக்கப்பட்டபோது ஆதிக்க சக்திகளால் அழிக்கப்பட்ட அடையாளங்களையும், உள்வாங்கிக் கொண்ட அடையாளங்களையும் மீட்டெடுத்துக்கொள்கிறது. இந்தியாவில் மரபுகளை நவீனத்தன்மையோடு மீட்டெடுத்ததில் தலித் அரசியலுக்கான தனித்துவத்தை ஆராய வேண்டியிருக்கிறது. குறிப்பாக 1881-ஆம் ஆண்டு குடிமதிப்பு கணக்கெடுப்பின்போது தாழ்த்தப்பட்ட பஞ்சமர்களை 'சாதிபேதமற்ற திராவிடர் அல்லது தமிழர்' என்று அயோத்திதாசப் பண்டிதர் குறிப்பிடக் கோரியதை இங்கே சுட்டிக்காட்டலாம்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இம்மானுவேல் சேகரன் சிலை ராணுவ உடையோடு மிடுக்காக அமைக்கப்பட்டிருப்பதை இங்கே நினைவுபடுத்திப் பார்க்கலாம். தன்மான வாழ்வுக்கான இத்தகைய அடையாளங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உளவியல் பலத்தோடு பொருத்திப் பார்க்கப்பட வேண்டும். ஆதிக்க வகுப்பினரை நேர்மறையாகவோ/எதிர்மறையாகவோ சித்தரிக்கும் எல்லா தகவல்களும் பெரும்பாலும் அவர்களை வீரியமிக்கவர்களாகவும், ஒடுக்கப்பட்ட வகுப்பினரை அடங்கிக் கிடப்பவர்களாகவும் வர்ணிப்பது வழக்கம். ஆதிக்க சக்திகளின் கொடூரத்தை உணர்த்த இது ஓரளவு உதவுகிறது. என்றாலும் இதுவே முழு உண்மையல்ல என்பதை சொல்லியாக வேண்டும். உலகின் எல்லா பகுதிகளிலும் ஒடுக்குமுறை என்ற வடிவம் தோன்றியது முதலே அதற்கான எதிர்ப்பு என்பதும் தோன்றிவிடும். இதுவே இயங்கியல் விதி. இந்தியாவிற்கும் இதுவே பொருந்தும். சாதி அமைப்பு எதிர்ப்பே இல்லாமல் இங்கே செயற்படுத்தப்பட்டது கிடையாது. ஆனால் அத்தகு எதிர்ப்புக்கான வரலாறு இல்லாமல் செய்யப்பட்டு இருக்கிறது. இத்தகு எதிர்ப்புப் போராட்டங்களை வெளிக்கொணர வேண்டும். போராடும் மக்களுக்கு கலகத்தை நினைவூட்டும் விதமாகவும், உளவியல் ரீதியான பலத்தினைத் தரும் விதமாகவும் இது அமையும். எதிர்ப்பே இல்லாமல் ஒரு சமூகக் குழு எப்படி இருந்திருக்க முடியும்? அத்தகைய அடையாளங்களாகவே இச்சிலைகளை மக்கள் நிறுவுகிறார்கள்.

தென்மாவட்டம் என்றாலே 'அரிவாள்' குறிப்பிட்ட சாதியின் குறியீடாக மாற்றப்பட்டிருக்கிறது. ஒரு வகையில் இக்குறியீடு அச்சாதிக்கான என்றென்றைக்குமான குறியீடாகிப் போவதற்கு வாய்ப்பிருக்கிறது. தென்மாவட்ட கலவரங்கள் நமக்கு தலித்துகள் அடங்க மறுக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. முதுகுளத்தூர் கலவரம் என்று சொல்லப்படுகிற போராட்டம் என்பது தேவேந்திரகுல வேளாளர்கள் சரிக்கு சரி திருப்பித் தாக்கியதை இன்றைய ஆய்வாளர்கள் முன்வைக்கிறார்கள். வீரம்பல் கிராம வயதான பெரியவர்களிடம் பேசிப் பார்த்தபோது இதே எண்ணம் வெளிப்பட்டது.

ராணுவத்திலிருந்து சமூகப் பணிக்காக தன்னை ஈடுபடுத்திக்கொண்ட இம்மானுவேல் சேகரனின் வருகை இம்மக்களின் சுயமரியாதைக்கான அடையாளமாகவே எழுந்தது. தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்கள், நவீன வடிவமான அரசியல் அமைப்போடு இணைதல், கல்வி, உடை போன்ற கூறுகளில் நவீனமாதல், இழிவுகளை கைவிடுதல் போன்ற கூறுகளை அவரது நடவடிக்கைகள் உணர்த்தின. 20-ஆம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட


படிப்பகம்

www.padippakam.com

வர்களின் முதல் தலைமுறை முன்னோடிகள் இம்மக்கள் நவீன வாழ்க்கைக்கு மாறுவதையே விரும்பியிருக்கிறார்கள். குறிப்பாக கல்வி, வேலைவாய்ப்பு போன்றவைகளுக்காக பாடுபடுதல். இதன் மறுமுனையாக மரபுவழியாக திணிக்கப்பட்டதாக கருதப்படும் தொழில்களை கைவிடுதல் என்பது வலியுறுத்தப்பட்டது. இவைகளுக்காக கடுமையான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன. வடமாவட்டங்களில் நடந்த பறையொழிப்பு, செத்த மாடு எடுக்க மறுத்தல் போன்றவையும். தென் மாவட்டத்தில் இம்மானுவேல் சேகரனின் நடவடிக்கைகளும் இதையே கூறுகின்றன. இன்றைய தலித் அரசியல் கட்டமைப்புகள் இந்த கடந்த கால போராட்ட அனுபவங்களை கணக்கில் கொள்ள வேண்டும்.

இம்மானுவேல் சேகரன் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்ததோடு, தாம் சார்ந்த சமூகத்தை அவ்வியக்கத்தின் கீழ் அரசியல் சக்தியாக உருமாற வைத்தார். இம்மக்கள் அரசியல் இயக்கமாக மாறாத வரை அமைதி காத்த ஆதிக்க வகுப்பினர் இப்போது கலக்கம் கொள்கின்றனர். முக்குலத்தோர் என்று சொல்லப்படும் மறவர் சாதிக்கும், தேவேந்திரகுல வேளாளருக்கும் இடையே முரண் கூர்மையடைந்தது. ஒடுக்கப்பட்டோர், அரசியல் சக்தியாக மாறுவது, யாரையும் எதிர்பாராமல் சுயமரியாதை யோடு தலைநிமிர்வது என்று அர்த்தம் பெறுகிறது. காங்கிரஸ் தலித்துகளுக்கான தனித்துவமான இயக்கம் இல்லையென்றாலுங்கூட, அன்றைய சூழலில் இம்மானுவேல் சேகரன் ஒரு குறிப்பிட்ட கட்சியின் கீழ் அரசியல் சக்தியாக திரள வைத்தார் என்றுதான் சொல்ல வேண்டும். ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் நடந்த சமாதானக் கூட்டத்தில் உ. முத்துராமலிங்கம் இம்மானுவேல் சேகரனுக்கு இணையாக தாம் கையெழுத்து போட முடியாது என்றதும், அவர் 'கள்ளர்'களின் தலைவர் என்று ஒத்துக்கொள்ள மறுத்ததும் இப்படியான வெறுப்பின் தொடர்ச்சிதான். பள்ளர்களின் மரபான வாழ்க்கைத் தொடர்ச்சியில் ஏற்பட்ட மாற்றம் இப்படி ஆதிக்க வகுப்பினரை அச்சுறுத்தியது. மேலும் அக்கூட்டத்தில் முத்துராமலிங்கத்துக்கு சமமாக அமர்ந்திருந்ததும் அவர் படுகொலை செய்யப்பட காரணமாயிற்று என்று சொல்லப்படுகிறது. 1957 செப்டம்பர் 11-இல் நடந்த படுகொலைக்குப்பிறகு மாவட்டம் முழுவதும் கலவரம் பரவியது. தேவேந்திர குல வேளாளர்களின் வீரமிகு போராட்டம் மறவர்களுக்கு இணையாக எழுந்தது. தமிழகத்தின் பல்வேறு கட்சிகளும் இப்போராட்டத்தினை தங்கள் நலனுக்கான ஒன்றாக மாற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருந்ததை அரசியல் எதிர்வினைகள் உணர்த்துகின்றன.

இன்றைக்கு தென்மாவட்டங்களில் இம்மானுவேல் சேகரன், வீரன் சுந்தரலிங்கம் ஆகியோரின் சிலைகள் ஒடுக்கப்பட்டவர்களின் சுயமரியாதைக்கும், வீரத்திற்கும் குறியீடாக நிற்கின்றன. தம் சமூக இருட்டில் வீரத்தையும், சுயமரியாதையையும் வெளிக்காட்டிய பிம்பங்களை மக்கள் கொண்டாடுகின்றனர். அதோடு அவ்வீரத்தையும், சுயமரியாதையையும் உயிர்ப்போடு உணர்த்தியபடியே இவைகள் அமைந்துவிடுகின்றன. அதனால்தான் சிலை அமைப்பதற்காக, சிலையை பாதுகாப்பதற்காக இங்கு கடுமையான போராட்டங்கள் நடந்திருக்கின்றன.

இங்கு ஒரு சமூகத்தை அவமதிப்பதாக கருதும் யாரும் அச்சமூகத்தின் சிலையை அவமதிக்கிறார்கள். எல்லா சாதிப் பெயரையும் சகிக்கும் இந்திய சமூகம் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் பெயரை பேருந்துக்கோ, மாவட்டத்துக்கோ சூட்டுகிறபோது பதட்டமடைகிறது. இத்தகைய பெயரிடுதல் அம்மக்களுக்கு தரும் உளவியல் பலத்தை உணர்ந்து கொண்டமையாலேயே ஆதிக்க சமூகம் தடுக்க முனைகிறது. தமிழகத்தின் வட மாவட்டங்களில் அம்பேத்கர் சிலைகள் அதிகம். குறிப்பாக வேலூர் மாவட்டத்தில் சேரிகள்தோறும் அம்பேத்கர் சிலைகளை காண முடியும். அம்பேத்கர் கையில் வைத்திருக்கும் புத்தகம் தலித்துகளுக்கான அறிவின் குறியீடு என்பதாகவே சொல்ல முடியும். அம்பேத்கரின் படிப்பு தொடர்பான பெருமிதம் நீங்காத தொன்மமாக தலித்துகளிடம் இருப்பதை பார்க்கலாம். இது தொடர்பான மிகையான தகவல்களைக்கூட இச்சமூகப் பெரியவர்களிடம் இப்போதும் கேட்க முடியும். இழிவுபடுத்தப்பட்ட தம் சமூக அறிவுதான் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் சட்ட அமைப்பை கொடுத்தது என்பதை சொல்லும் விதமாக இச்சிலைகளை தலித் மக்கள் நிறுவுகின்றனர்.

ஒட்டுமொத்த இந்திய சமூகத்தையும் ஆராய்ந்த அம்பேத்கர்தான் சூத்திரர்களுக்கான வரலாற்றையும் எழுதினார். தொடக்ககால தலித் முன்னோடிகள் அம்பேத்கரின் படிப்பாற்றலை முன்மாதிரியாக வலியுறுத்தியபடியே தலித்துகளின் கல்விப் பணியை தொடங்கி நடத்தினர் என்பது வரலாறு. இவை யாவற்றையும் ஒருசேர உணர்த்துவதாக இச்சிலைகள் மாறி நிற்கின்றன.

குறிப்பிட்ட அடையாளத்திற்காக உருவாக்கப்படும் சிலை போன்ற குறியீடுகள் நாளடைவில் உள்ளீடு இழந்த குறியீடாக மாற வாய்ப்பிருக்கிறது. இக்கருத்தினை தலித் பிரச்சினைகளுக்கு அப்படியே பொருத்த முடியாது. பொது இடத்தில் சிலையை நிறுவுவது, ஒதுக்கி வைக்கப்பட்ட தம் சமூக அடையாளம் பொது சமூகத்தில், மையத்தில் தம் இருப்பை கம்பீரத்தோடு வெளிப்படுத்துகிற அர்த்தத்தையும் பெறுகிறது. சாதியம் உள்ள வரை இதுபோன்ற குறியீடுகள் ஏதோவொரு வகையில் தலித் மக்களுக்கு பொது சமூகத்தின் மீதான தங்களின் பங்கினை உணர்த்துகிற அர்த்தம் வாய்ந்த செயற்பாடாகவே அமைகிறது. இதனையே இச்சிலைகள், பெயர் சூட்டல் போன்றவை எமக்கு கூறுகின்றன. சிலைகள் பற்றிய ஆய்வுகள் இங்கு மேலெழ வேண்டிய அவசியமுள்ளது; அவையும் தலித் மக்களின் போராட்ட வரலாறுகளை நமக்கு உணர்த்துவதால்.

மறவர் பூமி என்று கட்டமைக்கப்பட்ட புனைவை மறுத்து தேவேந்திரர்களின் அடையாளத்தை முத்துராமலிங்கம் சிலைக்கு எதிராக நின்று வீரன் சுந்தரலிங்கத்தின் சிலை உணர்த்தியபடியே நிமிர்ந்து நிற்பதை பார்க்க முடிந்தது.

-தொடரும்

**சந்திரன் அவர்களின் கணிதம் நம் உடைமை தொடர் தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்விதழில் இடம்பெறவில்லை. அது அடுத்த இதழில் வெளியாகும்.**

**- ஆசிரியர்**


படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

# 'மேன்ஷன்' மனுசன்

■ பால்ராஜ் செல்வம்

ஆசிரியர்: பவுத்த அய்யனார்
சித்தார்த்தா வெளியீடு
பக்கம் 63
விலை ரூ.25

நகரம் நகலைத்தான் தர முடியும், வேறு வழியில்லை. அதன் பண்பாடு அப்படி. இயற்கையோடு தொடர்புள்ளவர்கள் - குறைந்த பட்சம் அதில் தொய்பவாவது தேடியலைபவர்கள் பாக்கியவான்கள். நகலர் - தலையில் இருக்கும் கொம்பு; அவர்கள் உற்பத்தி செய்து கொண்டதில்லை; நகரம். கிராமத்தில் தலைக்குமேல் மனசு கிடக்கலாம். நகரத்தில் வெறும் மொட்டை மாடிகள். அதுவும் வானத்தை எட்டி உதைத்து உறங்கி எழுகிற மனநிலைக்கே அதிக சாத்தியம். கிராமத்து கவிதை சிசு இங்கு நுழைந்தால் என்ன செய்ய முடியும். பாடுபொருள் உண்டாகும். கிடைத்திருக்கிறது 'மேன்ஷனில்.'

*நரக விருட்சம்...*

நவ காலத்தில் தவிர்க்க முடியாத அங்கமாகி விட்டது 'அறை.' தற்கால நாகரிகம். கூட்டுக் குடும்பத்திலிருந்தும் தனித்து வார்த்துக் கொண்டது - 'அறை.' நவசூழல் தனிப்பிலிருந்தும் தனித்துக் கொண்டிருக்கிறது. அறையில் பழகும் விதமே அந்நியப்படலை அனுசரிப்பது என்பது மட்டுமல்ல அந்நியத்தின் எதிரிலுள்ளவற்றைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பது. பேசாவிட்டால் அங்கு சூழல் இல்லை; சூன்யம். சூன்யமும் வாய்க்கிறது. எல்லாவற்றையும் இழந்துவிட்டோமா என்கிற பிரமையில். பிரமைகள் இக்கால உற்பத்திப் பொருள். உற்பத்திக்கான சாதனங்கள் எண்ணப்பட முடியாதவை. குறிப்பாக கவி மனத்திற்கு எதிராக அவற்றையெல்லாம் அடுக்கித் தள்ள முடியாது. இங்கு கவிமனம் குற்றுயிர் குறையுயிர் என்பதைத் தவிர வேறுவழியில்லை. முடிவை 'மேன்ஷன்' தருகிறது இது ஒரு எதிர்ப்புக் குரல் - ஒட்டவும் முடியாமல் வெட்டவும் முடியாமல் இருத்தலை அப்படியே நகர்த்துகிறது, 'இருப்பிடமே இருப்பிடமாயிற்று' ப.49 - வாக்குப்பட்ட வேதனைதான்.

*படைப்புப் புள்ளி...*

கவிதை எப்போதும் பிரபஞ்ச 'தன்மை'யுடன் 'தனை'யுடன் தன்னை இழைத்துக் கொண்டது. நகல் மனிதர்களையும் நரக மனிதர்களையும் பார்க்கச் சகியாதுதான் அதன் ஓட்டம் துவங்குகிறது நவகவிதையில். இன்று ஒன்றை வித்தியாசப்படுத்திச் சொல்வதற்கான அலங்கார பூமியில்லை; அல்லல் பூமி. வயிறுகள் வயிறுகள் மீதுதான் கிடக்கிறது. இது தொன்றுதொட்டு என்றாலும் அடுத்தவரை உண்ணும் சுழற்சியோட்டத்தை நமக்கும் முடக்கிவிட்டிருக்கிறது இக்காலம். சுமைகளுக்கும் புலம்பல்களுக்கும் பஞ்சமில்லை. மலட்டில் மானிடம் பொங்க இயந்திரங்களுக்குக் கொடுத்திருக்கிறோம் நீரையும் நிலத்தையும். எதிலிருந்தும் துவங்கலாம் படைப்புப்புள்ளி. 'உன் உயிர் உனதல்ல' (47) தலைப் புள்ள கவிதைகள் நிகழ்காலம் சுமந்திருக்கும் இருப்பைச் சொல்லும் விளைவுதான்; மற்றும் 'இரண்டாம் மனிதன்' (51) தேவையான எச்சரிக்கைக்கு குறியீடு. பொது இருப்புக்கு 'சிவப்பு தேசத்துக் கதிர்வீச்சு' (55), கவிஞனின் இருப்புக்கு 'சொரணை' (56).

கடின நீரோ - மென் நீரோ - தன்மீது கல்லெறியப் படுவதை அலைகள் பதிவு செய்கின்றன. நாம் வரண்டு விடும்போது ஆவிகளில் அதன் வார்த்தைகள் விழுகின்றன. நிறம் திரிந்தால் தமது தொன்மத்தை நினைவு கூர்கின்றன. அலைகள் கவிதைகள். இதன் தொடர்ச்சியாக '.../ மனிதனல்லாதவனாக' (40) என மாறுவதற்கும் மூர்க்கத்துடன் எம்புகிறது கவி மனசு. எல்லோரினாலும் ஆன தன்னை விடுவித்துக் கொள்வதற்கும் - தட்டி மழுக்கப் பட்ட தன்னை விலங்குகளின் கட்டற்ற வீரியத்துடனிருந்து பெற்றுக் கொள்வதற்கும் - தன்னைத்தானே தகவமைப்பதற்கும் 'மனிதனல்லாதவனாக' எனும் பிரதிக்குள் மாற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. பழக்கத்திலுள்ள - புழக்கத்திலுள்ள இவனுக்குப் பிரதியழிப்பைச் செய்ய 'மனிதரல்லாத இன்னொரு உயிராய்' (40) தவிர வேறு வழியில்லை இக்கவிதையுடனான நிகரிழைபை குறுக்காக ஓடவிடுவது 'முகங்கள்' (41). தன் விலங்கிலிருந்து தப்பிக்க எடுக்கும் முயற்சியில்தான் ஆக்கத்தை விளைக்கும் நிசமனிதன் இருக்கிறான். அவனைத் தேடுவதற்கு இந்த பயந்தாளிகள் உதவுவர் - 'என்னைக் கண்டே/எனக்குப் பயம்' (32). ஆனால் வாழ்க்கையின் இயக்கத்தள பாய்பிற்கு நாம் ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளோம் நம் அனுமதியின்றி - 'கொஞ்சம் கொஞ்சமாய்/அதன் வாய்க்குள்/நாங்கள்' (37).

*காலூன்றும் கவிஞன்...*

கவிஞன் புனிதன் என்பதை அவனே கட்டமைக்கும் பூச்சிலிருந்து வெகுவாக விலகிவந்திருக்கிறோம். கட்டமைப்பு ஊடிழைப் பொருளிலிருந்தும் விலகி வந்து எல்லா இடத்தையும் தொட்டுப் பாயும் மழைக் கவிதையை உணர்ந்துகொள்ள தலைப்பட்டுள்ளோம். பாராட்டுதலும் ஒப்பாரியும் கடந்து வந்து அது அதுவாய் பேசிக் கொள்ளும் அவ்வவற்றுடன் இரண்டற கலக்க முயற்சிக்கிறோம். இப்போது பூமிக்குள் தனித்து விடப்பட்ட எல்லா உலகங்களையும் வாசிக்கிறோம். வாழும்படி வாசிப்பைத் தருகிறார்கள் படைப்பாளர்கள் மிருகங்களைப் பூனையாக்கிவிடும் சமர்த்தாளர் அல்ல அய்யனார். மனிதன் எல்லாவற்றாலும் ஆனவன் என்பதை அய்யனார் ஒத்துக்கொள்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

*மேன்ஷனிலிருந்து ஒரு சுனை...*

மனசு வளர முடியாதா என்ன? வளர்கிறது. மேன்ஷன் அறை அளவுக்கு. அறை எது மனசு எது? இப்போது மனசுக்குள் தான் உடம்பு இருக்கிறது. ஆனால் அந்த மனசு சந்தேகங்கள்/ரகசியங்கள் இல்லாத// அறைகளை நோக்கி ஓடுவதுதான் மனிதம். இயங்குவதான வழி. நீதியை நியதியை இவ்வித மனசாட்சிகளில்தான் பார்க்க முடியும். பிறகெங்கு? வாழ்வின் பெரும்போக்கு எதுவும் கலக்காத தெள்ளியதாய் இருந்தால். வேண்டியது தான் - யாரும் மறுத்துக் கொள்ளவில்லை.

கவிதையின் நீள விளிம்பில் பாறாங்கல்லைத் தூக்கிப்போடுவது. மத்தாப்புகளைக் கொளுத்த விடுவது - கூட்டை உடைக்கும் பொட்டுப் பட்டாசுகள் - அறைவது - மாரடிக்க வைப்பது. கொஞ்சம் கடந்திருக்கிறோம் - மறைபவைக்க - உணர வைக்க - இடுக்குகளைப் பார்க்க - தானழிந்து தன்னைப் பார்க்க... இப்படி மற்றும் விளிம்பில் படமெடுக்கும் ஐந்து தலை அல்லது அதற்கும் மேலுமான பாம்புகள். அய்யனார் அழுந்த உட்கார வைக்கிறார்: அதிக நேரமுமில்லை. கவிதைக்குள்ளும் கால வேகம். சரி... மேன்ஷன்கள் என்ன சொல்கின்றன? அல்லது செய்கின்றன? நுழைபவர்களை ஐந்துவாக்கிட ஆளுமையோடு கிடக்கின்றன. இல்லையென்றால் தன்னோடு தானாய் கிடக்கட்டும் என இளகிவிடுகின்றன. இந்த இரண்டாவது கட்டத்தை பிடித்து விட்டதைப் பேசுகிறது. 'எங்களுக்குள் பல ரகசியங்கள் உண்டு/ யாரிடமும் எதுவும் கூறாத இந்த அறை/என் நண்பனை விட உசத்தி' 'பிளாஸ்டிக் வாளிக்குள்/தவளை யாய்க் கிடந்தேன்' (28) ஒன்று சூழல். மற்றொன்று இருப்பு. முன்னது கவிதை சிசுவுக்கே நடக்கக்கூடியது. பின்னது காலச் சூழலின் அன்பளிப்பு. முதல் - அரவணைப்பு, இரண்டாவது - தண்டனை. முரணில் பிறக்க வைக்கிறது; ஆகக்கூடி மேன்ஷன். சுனையைப் பெற்றெடுக்கிறது.

சரள நடையும் சற்று முதிர்ந்த எழுத்தும் குழந்தை பாவத்துடன் எழுதப்படுவது அய்யனாரின் கவிதை மொழி. ஒப்பனையில்லை. ஒரு பத்தாம் வகுப்பு கவிஞனின் காதல் கடிதத்தை நசுக்கி எடுத்தால் கிடைக்கும் வரிகள் இப்போதும் அய்யனாரிடம் உண்டு. 'அன்பு' (18) போல பரபரப்பு வியக்கவைக்கும் சொல் அலகுகள் அற்று நதியின் இயல்பான சலனமொழி குண்டு குழிக்குள் கிடந்தாலும் அதனால் காட்டமுடிந்த பிரபஞ்சம்போல ஒரு நடையழகு.

எல்லா இயக்கங்களையும் கதவுக்கு வெளியே தள்ளிவிடும் மேன்ஷன், உணர்வுகளை உணர்ச்சிகளை அதன் வழிப்போக்கில் வளர்த்தெடுக்க 'உள்ளே X வெளியே' சதிராட்டம். உலகம் மின் வலையாக மாறிய க்ஷணமே மனிதன் சிலந்தியாக மாறிவிட்டான். சின்ன சின்ன அறைகள் உயிருடன் வாழ்பவர்களுக்கான கல்லறைகள் எனும்போது மனிதத்தை விரும்புபவர்கள் அவற்றை பாத்தியாக்கி வேர்பிடிக்கத் தவங்கொள்கிறார்கள், கவிதை சிசுவைப்போல. பிரபஞ்சத்தின் துவக்கமே கவிதைதான். பிறகு மனிதன் என்பவன் கவிதையைக் கற்றுக்கொண்ட பொழுதுகளில் மாமனிதனாக - மகாத்மாவாக அடையாளப்பட்டான். இன்று மனிதன் என்ற சொல்லுக்குள் சில சோப்பு - சில ஆணி - வீட்டிக்க சுண்ணாம்பு.

*சரி... மேன்ஷன்...*

கடலை விழுங்க முடியாமல் மேன்ஷன் துப்பும் போது அய்யனார் வெளிவருகிறாரா? மேன்ஷனைச் சுமந்து ஐந்துவர்யத் திரியும் அய்யனாரை நகரம் அறைக்குள் போட்டுத் தாழிடுகிறதா? வெண்திரையில் காண்க.

---

■ பொன். குமார்

கூடை குறித்து எப்பொழுதாகிலும்
காயப்பட்டிருக்கிறீர்களா -

கூடை குறித்து எப்பொழுதாகிலும்
காயப்பட்டிருக்கிறீர்களா -

ஆம். நீண்ட காலமாய் என் பாட்டி
கூடை முடைவதை பார்த்ததினால்!

வேலை குறித்து எப்பொழுதாகிலும்
காயப்பட்டிருக்கிறீர்களா -
நான் பட்டுள்ளேன்.
ஏனெனில் என் அப்பா கடினமாக
உழைத்தார். மேலும் எப்படி உழைத்தார் என
சொல்லியுள்ளார்.

## மொழிபெயர்ப்புக் கவிதை

கால்நடைகள் குறித்து எப்பொழுதாகிலும்
காயப்பட்டிருக்கிறீர்களா -
நான் காயப்பட்டிருக்கிறேன்.
ஏனெனில் என் தாத்தா நீண்ட காலமாய்
கால்நடைகளுடனே காலம் கழித்தவர்.

பள்ளி குறித்து எப்பொழுதாகிலும்
காயப்பட்டிருக்கிறீர்களா -
நான் பட்டுள்ளேன்.
ஏனெனில் ஏராளமான வார்த்தைகளை
பள்ளியிலிருந்து கற்றுக் கொண்டுள்ளேன்.
மேலும் அவைகள் என் வார்த்தைகள் அல்ல.
■


படிப்பகம்

www.padippakam.com

# இருளர் வாழ்வு இன்னும் இருளிலா?

## தமிழக பழங்குடியினர் நிலவுரிமை மாநாடு




மாநாட்டில் கலந்து கொண்ட கொளத்தூர் மணி. பேரா. கல்யாணி உரையாற்றுகிறார்

■ விழி. பா. இதயவேந்தன்

வாழும் காலத்தில் மனிதர்கள் சாதியாய், மதமாய், இனமாய் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். பிரித்து வைக்கப் பட்டுள்ள சமூகத்தில் மனிதர்களின் சாதிய பிரிவினை என்பது மிகவும் கொடூரமாக உள்ளது. அதிலும் சூத்திரர்களைக் காட்டிலும் பஞ்சமர்கள் நிலை மிக இழிநிலையில் உள்ளது. தாழ்த்தப்பட்டோர் ஒடுக்கப்பட்டோர் ஒரு புறமிருக்க, பழங்குடியினர், காடுகள் மலைகளில் வாழ் வோர் சமூகத்றில் சக மனிதர்களோடு சேர்ந்து வாழ வக் கற்ற நிலையே இங்கு உள்ளது.

ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பழங்குடியினர்களை கூண்டோடு சாகடித்ததுபோல், நம் தமிழகத்திலும் பழங்குடியினர் வாழ்வின் ஜீவ ஆதாரங்கள் தொலைத்து நிம்மதி இழந்து அரசின் பல்வேறு நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கின்றனர். இவற்றால் பழங்குடி சமூகம் கடந்த 100 ஆண்டுகள் பிற சமூகத்தினரைப்போன்று மக்கள் தொகை அடிப்படையில் உயராமல் மிகக் குறைந்து கொண்டு வருவதை பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

தமிழகத்தில் தோடர், கோத்தர், பளியர், குறும்பர், இருளர், காட்டுநாய்க்கர், காடர், மலசர், மலையாளி, ஊராளி, குருமன் உள்ளிட்ட 36 வகையான பழங்குடிகள் வசிப்பதாகவும், அவற்றில் இருளர்கள் அதிகமாக வாழ்வதாகவும் எழுத்தாளர் சிவகாமி அவர்களின் ஆய்வு நூலில் வெளியாகி உள்ளது (நன்றி: தமிழக பழங்குடியினர் நிலவுரிமை).

தமிழகத்தின் மொத்தப் பழங்குடியினர் எண்ணிக்கை 1991-ஆம் ஆண்டு கணக்குப்படி 5,74,194 ஆகும். ஆண்கள் 2,94,012. பெண்கள் 2,81,182 பேர் உள்ளனர். அதிகமாக இவற்றில் பழங்குடி இனத்தவர் 1,07,757 பேர் இருளர்களாக உள்ளனர். இருளர்கள் தமிழகத்தின் 17 மாவட்டங்களில் இருந்துகொண்டு சாதிய வன்கொடுமைக்கும், பாலியல் பலாத்காரத்தினாலும், உழைப்பை விற்று அடிமைகளாகி சுதந்திரமற்ற நிலையிலேயே உள்ளனர்.

பழங்குடியினரில் ஆதரவற்ற இந்த இருளர் சமூகத்தில் விழுப்புரம் மாவட்டம் அத்தியூர் விஜயா என்பவர் புதுச்சேரி காவல்துறையினரால் கற்பழிக்கப்பட்ட சம்பவம்தான் திண்டிவனத்தை தலைமையிடமாகக் கொண்டு 4.10.1996-இல் பேராசிரியர் பிரபா கல்விமணி(பேரா. கல்யாணி) "பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம்" துவங்கப்பட காரணமாயிற்று.

சங்கம் துவங்கிய நாள் முதல் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் இருளர்கள் பிரச்சினைகள், வன்கொடுமைகள், வழக்குகள், போராட்டங்கள் என தொடர்ந்து இன்று 10-ஆம் ஆண்டில் சங்கம் வலுவோடு செயல்பட ஆரம்பித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம், அடக்குமுறைக்கெதிராக இருளர்கள் ஒன்றிணைவதும் உறுதியோடு தொடர்ந்து நிற்பதும்தான்.

விழுப்புரம் மட்டுமல்லாது கடலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை உட்பட சங்கம் வளர்ந்து வரும் சூழலில் தமிழக பழங்குடியினரின் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து, குறிப்பாய் இழந்துபோன நிலங்களை மீட்கும் முகமாக தமிழக பழங்குடியினர் நிலவுரிமை மாநாடு 15.10.2005 அன்று திண்டிவனத்தில் எழுச்சியோடு தொடங்கியது. தாழ்த்தப்பட்டோர் முழங்க தலித்துகளும், பழங்குடியினரும் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

தலித்துகள் மண்ணுரிமைக்காக பஞ்சமி நிலங்களை மீட்கவேண்டும்எனப் போராட்டங்கள் நடைபெறும் இவ்வேளையில் தமிழகமெங்கும் உள்ள பழங் குடியினர் தங்களுக்கான நிலவுரிமையைப் பெற கோரிக்கை வைப்பதுதான் இந்த மாநாட்டின் நோக்கமாகும்.


படிப்பகம்

www.padippakam.com

காலையில் துவங்கிய தொடக்க அரங்கத்திற்கு பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்க மாநிலத் தலைவர் ப. இளங்கோவன் தலைமை தாங்கினார். மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் திரு மு. கந்தசாமி வரவேற்புரை ஆற்றியதோடு நிகழ்ச்சி முழுக்க அழகாக தொகுத்து ஒருங்கிணைப்புப் பணியினை திறம்படச் செய்தது எல்லோர் வியக்கும் வண்ணம் இருந்தது.

"கடந்த 9 ஆண்டுகளில் துவங்கிய எங்கள் சங்கம் எத்தனையோ பிரச்சினைகளை, பொய் வழக்குகளை சந்தித்தது என் என்று கேட்க ஆளில்லாத பழங்குடியினர் மீது வன்கொடுமை நிகழ்த்தப்படும்போது அதற்காக உருவானதே எங்கள் சங்கம். பழங்குடியினருக்கு ஆதரவாக செயல்பட்டதால் என் மீதும் போலீஸ் நடவடிக்கை எடுக்கிறது. பின்னர் வாபஸ் பெறப்படுகிறது. நமது சங்கத்திற்கு மிகப் பெரும் பாதுகாப்பு விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் இன்று நமது நிகழ்வில் கலந்துகொள்வதாகும்" என நமது அறிமுக உரையில் போரா. கல்யாணி (எ) பிரபா. கல்விமணி பேசினார்.

### தொல். திருமாவளவன்

"இருளர் சமூகத்திற்காகத் தொண்டாற்றிவரும் போரா. பிராபா. கல்விமணி அவர்கள் நல்லதொரு வாய்ப்பை வழங்கியமைக்கு நன்றி. விடுதலை சிறுத்தைகளின் தமிழ்ப் பெயர் ஏற்பு நிகழ்வுகளில் பேராசிரியர் தனது பெயரை மாற்றிக் கொண்டது எங்களுக்கும் பெருமை. இதனை சிலர் கிண்டலடிக்கிறார்கள். கட்டுரை எழுதுகிறார்கள். மதுரை மாநாட்டிலே பிரபா. கல்விமணி என்று பெயரை மாற்றிக் கொண்டது இயக்கத்திற்குக் கிடைத்த மகத்தான அங்கிகாரம். அதற்காக நான் எத்துணை முறை நன்றி சொன்னாலும் தகும். இந்த பெருந்தன்மை யாருக்கும் வராது. முரண்பாடுகள் ஆயிரம் இருக்கலாம். தோழமையோடு எதனையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

இன்று மதுரை-திருமங்கலத்தில் இறந்துபோன குடும்பத்திற்கு ஆறுதல் சொல்ல செல்ல இருக்கின்றேன். நான் வரக்கூடாது என அங்கே இருக்கிற ஆதிக்க சாதியினரும் காவல் துறையினரும் முடிவு செய்கிறார்கள். அதற்குள் நேற்று 40 வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. போரா. பிரபா. கல்விமணி பழங்குடியினர் இல்லை. அத்தியூர் விஜயா வழக்கிலிருந்து அவர் இருளர் சமூகமாகவே மாறிவிட்டார். இந்த மக்களுக்காக வெளிநாட்டிலிருந்து பணம் வாங்காமல் செயல்படுகிறார். தாய்த் தமிழ் கல்வியை இலவசமாக மாணவர்களுக்குத் தருகிறார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி ஆதிவாசிகளுக்கும் விடுதலை சிறுத்தைகள் இயக்கம் இருந்தாலும் பழங்குடியினர் தொடர்பு நமக்கு அதிகம் கிடைப்பதில்லை. இன்று நில உரிமைக்கான மாநாடு நடைபெறுகிறது. விடுதலை சிறுத்தைகள் ஆரம்பத்தில் தாழ்த்தப்பட்டோர் மண்ணுரிமைக்காக போராட்டங்கள் துவங்கியது. இந்த மண்ணின் மைந்தர்களுக்கு நிலமில்லை. மண்ணுரிமை இல்லை. இந்த தேசமே நமது தேசம்.

ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த மண்ணில் வியர்வை சிந்தி சும்மா இருந்தார்கள். சும்மா இருந்தவர்கள்தான்

> நிலமற்ற கூலிகளான நாம்
> மண்ணி லிருந்து பிடுங்கப்பட்ட
> நாம் சிதறி யிருக்கிறோம். நமக்கும்
> மண்ணிற் கும் உள்ள உறவு
> உழைப்பு ஒன்று தான். உழைத்து
> யாருக்கோ மூட்டை கட்டிக்
> கொடுக்கிறோம். இந்த மண்ணை
> ஆளுவதற்கு எங்களுக்குத்
> தகுதி உண்டு என்பதை
> நிரூபிக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள். நிலமற்ற கூலிகளான நாம் மண்ணிலிருந்து பிடுங்கப்பட்ட நாம் சிதறியிருக்கிறோம். நமக்கும் மண்ணிற்கும் உள்ள உறவு உழைப்பு ஒன்றுதான். உழைத்து யாருக்கோ மூட்டை கட்டிக் கொடுக்கிறோம். இந்த மண்ணை ஆளுவதற்கு எங்களுக்கு தகுதி உண்டு என்பதை நிரூபிக்க வேண்டும். அதிகாரங்கள் பலவகையாக உள்ளன. இங்கே இருளிலே கிடக்கிறார்கள். அதனால்தான் இருளராக இருக்கிறார்கள்.

மலைவாழ் மக்கள் என்றால் மலையிலேதான் வாழ வேண்டுமா? இந்தியா முழுமைக்கும் 80% இட ஒதுக்கீடு பழங்குடியினர் அல்லாதவர் அனுபவிக்கிறார்கள். நம்மிடம் நிலம் இல்லை, அதிகாரம் இல்லை. இன்னும் ஆயுதங்கள் ஏதுமின்றி வாழ்ந்து கொண்டிருக் கிறோம். எப்படி பழங்குடியினர்க்கு நிலம் வேண்டும் என்பதுதான் இந்த மாநாடு. பழங்குடியினர் பற்றி ஒரு சிலர்தான் ஆய்வு செய்திருக்கிறார்கள். ஆனால் புத்தகமாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் பழங்குடி இருளர்கள். பழங்குடியினர் கோரிக்கைகளை விடுதலை சிறுத்தைகள் ஆதரிக்கிறது" என்றார், துவக்கி வைத்துப் பேசிய தொல். திருமாவளவன்.

சி. வள்ளுவன், நசீர் அகமது, உமேன், கோ. செல்வி, அலெக்ஸ், சுரேஷ் மோகன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

### நிலவுரிமை அரங்கம்

இரண்டாம் அமர்வாக நிலவுரிமை அரங்கம் சிறுவாலை மு. நாகராஜன் தலைமையில் துவங்கியது. அத்தியூர் விஜயா முதற்கொண்டு சங்கம் துவங்கியதையும் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றதையும் நினைவு கூர்ந்து மாநாட்டு வரவேற்புக் குழு இரா. முருகப்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பின்னர் கருத்துரை வழங்கி பலர் பேசினர்.

### உ. மலர் [மாநில துணைத் தலைவர், ப.இ.ப. சங்கம்]

"இந்த மாநாட்டுக்கு எல்லா இனத்தையும் சேர்ந்தவர்கள் வந்திருப்பது மகிழ்ச்சி. இந்த கூட்டம் எதுக்கு



படிப்பகம்

வெச்சாங்க, இன்னாத்துக்கு வெச்சாங்கன்னு எங்கிட்ட நாளைக்கி எங்க சனங்க கேப்பாங்க என்னா சொன்னாலும் எங்க மக்களுக்கு எதுவும் புரியல. சங்கம்னா இன்னாங்க, இன்னா செஞ்சிச்சுன்னு கேப்பாங்க. சாதி சர்டிபிகேட்டு கெடைக்க மனு குடுத்தா பணம் கேக்குறாங்க. ஒரு நாளைக்கி நடவு நட்டா, கல எடுத்தா 15 ரூபா கூலி. ஆர்.ஐ. தாசில்தாரு, மணியகாரரு 100 ரூபா கேக்குறாங்க. எங்களால முடியல. 2001, 2002, 2003, 2004, 2005-இல் மனு குடுத்தோம். எழுதிகுடுத்தா திரும்பிப் போய் பாக்க முடியல. பயம். எங்களுக்கு சாதி சர்ட்டிபிகேட்டு வேணும், நெலம் வேணும், எதுன்னா பிரச்சினையின்னா விழுப்புரம் மாவட்டத்துல போலிசுல கம்பிளன்ட்டு குடுக்க முடியல. என்னா பயம். F.I.R. காப்பி போடுறதில்ல. அடிச்சவன் கம்பிளயின்ட்டு கொடுத்தா உடனே F.I.R. காப்பி குடுக்கறான். எனக்கு படிக்கத் தெரியாது. எங்க அப்பா அம்மா என்ன மாடு மேய்க்க வெச்சாங்க. எங்க புள்ளகளுக்கும் படிக்கணும்தான் சாதி சர்ட்டிபிகேட் கேக்கிறோம்."

### அ. இராச கணபதி (வழங்குரைஞர்)

"வேறெந்த வீடுகளைப்போல் இல்லாமல் சாதாரண மாய் மண் வீடு கூரை வீடுகளில் வாழ்கிறார்கள் இருளர்கள். கூரை என்றால் தஞ்சைப் பகுதியைப் போல் இல்லை. மிகவும் குனிக் குறுகிதான் இருளர்கள் வீட்டில் செல்ல வேண்டும். தாழ்ந்த குடிசைகளில்தான் வாழ்க்கை. நாங்கள் உழைக்கக்கூடிய இனம், எங்களுக்கு நிலம் இல்லை. இதுதான் நிலை என இளைஞர்கள் கூறுவது நியாயம் தானே."

### இருளப்பூ செல்வக்குமார் (ஆதிவாசிகள் கூட்டமைப்பு)

"ஆதிவாசிகள் அடையாளம், உரிமைகள் மறுக்கப்படுகின்றன. புதுவையில் ஆதிவாசிகள் அங்கீகரிக்கப்படவில்லை. நான் இருளன். நிலவுரிமைக்காக சிறை சென்றிருக்கிறேன். நமது சொந்தங்கள் தேவையற்று இன்னும் 11 பேர் கடலூர் மத்திய சிறையில் தண்டனை அனுபவிக்கிறார்கள். அரசு முதலாவதாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உள்ள தன்னாட்சி உரிமையை வழங்க வேண்டும். அதைச் செய்யாமல் சான்று கொடுக்க நீ யார்? நிலம் கொடுக்க நீ யார்? ஓட்டு வாங்குவதற்காக அரசியல்வாதிகள் எப்படி வேண்டுமானாலும் வருவார்கள். தண்ணில உப்பு குடுத்தாலும் குடிப்பான். மூத்திரம் கொடுத்தாலும் குடிப்பான். அதன் பிறகு ஆதிவாசிகளை கவனிக்க மாட்டான்."

நில உரிமை அரங்கத்தில் மேலும் சோன் (விடுதலை சிறுத்தைகள்), ஆ.க. சுப்பிரமணியன், ஆ. பாலகிருஷ்ணன், மருத்துவர் நா. சுந்தர் (மக்கள் உரிமைக் கூட்டமைப்பு), எஸ். ஜீவா (C.S.I.), பணியாளர் சேவியர் ஆகியோர் உரையாற்றினார்கள்.

கக்கனூர் வீரமுழக்கம் கலைக் குழுவினர் வழங்கிய கலை நிகழ்ச்சியும் மலையக தொழிலாளிகளின் நடனமும் சிறப்பாக இருந்தது.

### தீர்மான அரங்கு

பிற்பகல் நடந்த தீர்மான அரங்கிற்கு பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்க மாநில பொருளாளர் எ. ஜெகதீசன் தலைமை தாங்கிப் பேசினார். "நிலம் வேண்டும், நிலம் வேண்டும் என்றால் கிடைக்காது. காணி நிலமானாலும் போராடினால்தான் நமக்குக் கிடைக்கும். பேராசிரியர் கல்யாணி அவர்கள் சிந்துகிற ஒவ்வொரு சொட்டு ரத்தத்தில்தான் நமது சங்கம் வளர்ந்துகொண்டு வருகிறது. எங்களுக்கு சாமி தெரியாது. சாதிச் சான்று கொடுத்த சிவகாமி அம்மாதான் எங்களுக்கு தெய்வம்" என்றார் அவர்.




மாநாட்டில் கலந்து கொண்ட சிவகாமி உரையாற்றுகிறார்

இந்நிகழ்வில் மு. பூபால் வாவேற்க வழக்குரைஞர் கௌதம சன்னா, ச. இலட்சாதிபதி, காசிநாதன், பன்னீர் செல்வம், கா. பாலமுருகன் (மக்கள் உரிமைக் கூட்டமைப்பு) ஆகியோர் பங்கேற்றுப் பேசினார்கள்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

❑ பழகுடியினர் இருப்பிடங்களை இந்திய அரசியலமைப்பு சட்டம் ஐந்தாவது அட்டவணையின்கீழ் கொண்டு வர வேண்டும்.

❑ தங்கராஜ் அறிக்கை (1990) பரிந்துரையின்படி சிதறி வாழும் பழங்குடியினருக்கு 5 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்.

❑ பழங்குடியினருக்கு வீட்டு மனைப்பட்டா, தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும்.

❑ சாதிச்சான்று கால தாமதமின்றி வழங்கப்பட வேண்டும்.

❑ SC/ST வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989 மற்றும் விதிகள் 1995 ஆகியவற்றை சரியாக அமல்படுத்த வேண்டும்.

### பேரணி

மாலையில் திண்டிவனம் மீனாட்சி திரையரங்கிலிருந்து துவங்கிய மாபெரும் பேரணியில் இரண்டாயிரம் பேருக்கு ஒன்று திரண்டு அணி வகுத்தது நகரை உலுக்கின. வலுவான முழக்கங்களும், கோசங்களும் உணர்வுபூர்வமாக இருளர்களிடையே எழும்பின. ஆ. பூபதி தலைமையேற்க கா. குருக்கு தொடங்கி வைத்தார். பாம்பு படம் பொறித்த சங்கக் கொடிகளுடன் ஊர்வலம் மீண்டும் பொது அரங்கில் வந்து முடிந்தது.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

### நூல் வெளியீட்டு அரங்கம்

எழுத்தாளர் சிவகாமி எழுதிய 'தமிழக பழங்குடியினர் நிலவுரிமை' என்னும் நூல் வெளியிடப்பட்டது. வழக்குரைஞர் லூசி தலைமை ஏற்க கா.வ. கன்னியப்பன் வரவேற்புரை ஆற்றினார். நூலை அத்தியூர் விஜயா வெளியிட அமிர்தா பெற்றுக் கொண்டார். பேரா. கோச்சடை, பழங்குடியினர் வாழ்க்கை முறையை விளக்கி அதற்கு இந்நூல் தரும் எண்ணற்ற விளக்கங்களைச் சுட்டிக் காட்டிப் பேசினார்.

விழி.பா. இதயவேந்தன் தொகுத்த 'பழங்குடியினர் கதை, கவிதை, கட்டுரைகள்' என்னும் நூல் தைலாபுரம் சந்திரா வெளியிட ரஞ்சிதம் பெற்றுக் கொண்டார். பழங்குடியினரின் கலாச்சாரங்களைப் பதிவு செய்யும் இந் நூலில் பழங்குடியினர் எழுதிய படைப்புக்களும் தலித்துகள் பழங்குடியினர் பற்றி எழுதிய படைப்புக்களும் இடம் பெற்றுள்ளன. "பழங்குடியினர் மட்டுமே அவர்கள் வாழ்க்கைப் பதிவுகளை எழுதி அடுத்த நூல் வெளிவர வேண்டும். புதிய கோடாங்கி பல்வேறு பழங்குடியினரின் இத்தகைய வாழ்க்கைப் பதிவுகளைப் பதிவு செய்திருக்கிறது" என்றார் எழுத்தாளர் ப்ரதிபா ஜெயச்சந்திரன். "போதிய கால அவகாசமும் பண வசதியும் இல்லாததால் தொகுப்பு சிறு நூலாக வருகிறது. அடுத்து இன்னும் விரிவாக வரும்" என ஏற்புரையில் விழி.பா. இதயவேந்தன் பேசினார்.

### பொது அரங்கம்

இறுதியாக நடந்த பொது அரங்கத்திற்கு பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்க மாநில பொதுச் செயலாளர் க. ஆறுமுகம் தலைமை ஏற்க, ச.க. ஜைனுதீன் வரவேற்றுப் பேசினார்.

### சிவகாமி

"பழங்குடியினர் மிருகங்கள், தாவரங்கள் போன்றே வனத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டியவர்கள். ஆனால் அவர்கள் வனங்களை அழிப்பவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள்.

புதிய கோடாங்கியினர் பழங்குடி வாய்மொழிப் பதிவுகளை மேற்கொண்டபோது, அவர்கள் எப்படி வனத்தை நேசிப்பவர்களும் பாதுகாப்பவர்களும் என்பது விளங்கியது.

கிழங்குகள் தோண்டும்போது பேசக்கூடாது அவை ஆழத்தில் சென்று புதைந்து விடும்; தலைக்குச் சீப்பு போட்டு வாரக்கூடாது; அப்படிச் சென்றால் கிழங்கு கிடைக்காது என்றனர். இப்படி தாவரங்களின் அசைவுகளையும், மிருகங்களின் நடமாட்டத்தையும் துல்லியமாக அறிந்து வனத்தை நேசிப்பவர்கள் வனத்தை அழிப்பவர்கள்? பழங்குடிகள் வனங்களுக்குத் திரும்பிப்போக வேண்டுமா அல்லது கூடாதா என்பது வாதமல்ல. அது அவர்களுக்கான உரிமை, சுதந்திரம் என்று கருதப்பட வேண்டும்.

பழங்குடிகளை அய்ந்தாவது அட்டவணைக்குக் கீழ் கொண்டு வர வேண்டும்" என்று சிவகாமி பேசினார்.

தந்தை பெரியார் திராவிடக் கழக தலைவர் கொளத்தூர் தா.செ. மணி, விடுதலை சிறுத்தைகள் துணைப் பொதுச் செயலாளர் ஏ. விஜயராகவன், மனித உரிமை இயக்கம் வழக்கறிஞர் லூசி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

மாநாட்டிற்கு வருகை புரிந்தோருக்கு உணவும் தேநீரும் குறைந்த விலையில் விற்கப்பட்டிருந்தது. பழங்குடியினர் பாதுகாப்பு சங்க கடந்த கால போராட்டத் துண்டறிக்கைகளை ஆவணப்படுத்தியிருந்ததும், புகைப்படங்களும் வந்திருந்த அனைவரின் கவனத்தை யும் கவர்ந்தது.

மேலவளவு முருகேசன் வழக்கிற்கு பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம் தங்கள் சொந்த உழைப்பிலிருந்து ஐயாயிரம் ரூபாயை இவ்வழக்கினை நடத்தி வரும் வழக்கறிஞர் ரத்தினம் அவர்களிடம் கொடுத்தது எல்லோரையும் நெகிழச் செய்தது.

பேரா. பழமலய், எழுத்தாளர் அமரந்தா உட்பட பலர் பார்வையாளர்களாக வந்திருந்தனர். கவிஞர் குட்டி ரேவதி, இரண்டு ஸ்வீடன் நாட்டு மாணவிகளுடன் வந்திருந்ததும், பழங்குடியினர் பற்றி அவர் ஆய்வு மேற் கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

இருளர்கள் வாழ்வு இனி இருளில் இல்லை என்பதற்கு சான்றாய் எழுச்சியோடு ஒன்று திரண்டிருந்த இந்த பழங்குடியினர் நிலவுரிமை மாநாட்டில் இறுதியாக அனைவருக்கும் பேரா. பிரபா. கல்விமணி நன்றி கூறினார்.

■

## முகத்தில் முகம்

காங்கிரஸ் கட்சியிலிருந்தும் தலித் மக்களுக்காகப் போராடியவர் எல். இளையபெருமாள். அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக தலையங்கம் இருந்தது. பர்னாட் பாத்திமாவின் நேர்காணல் தலித்தியத்தோடு பெண்ணுக்காகவும் உரிமை கோருவதாயிருந்தது. விழி.பா. இதயவேந்தனின் 'இது தலித்துகளின் காலம்' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட துளிப்பாக்கள் ஒவ்வொன்றும் ஓர் ஏவுகணை. இமயம் அவர்களின் 'மண்பாரம்' குறித்த சிவகாமியின் விமரிசனம் சிறப்பு.

- பொன். குமார், சேலம்.

அக்டோபர் மாத கோடாங்கி தலித் விடுதலை, தலித் முன்னேற்றம் ஆகியவற்றிற்கு ஒரு சக்தி வாய்ந்த ஊடகமாக விளங்குகிறது. இம்மாத படைப்புகள் எல்லாமே அமைவும், செறிவும் நிரம்பப் பெற்று நிறைவாக அமைந்திருந்தது.

- மு. ஹரிகிருஷ்ணன், ஏர்வாடி.



படிப்பகம்

www.padippakam.com



அ. ராமசாமி

11

# வெளியிலிருந்து வந்தவர்கள்

நிகழ்காலத் தமிழகத்தில் சிந்தித்துச் செயல் படுகிற வர்களாகக் காட்டிக் கொள்ளும் மனிதர்களின் மூளையை அலைக்கழிக்கும் பிரச்சினைகள் பலப் பல. சுதந்திரம், தேசியம், சமய நல்லிணக்கம் அல்லது சமயச் சார்பின் மை, பிராமண எதிர்ப்பு, சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு என்பன அவற்றுள் சில. இந்த வார்த்தைகள் இவற்றின் எதிர்வுகளாக சிலவற்றைக் காட்டிப் பய முறுத்தி அவற்றில் எதை ஆதரிக்கிற மனிதனாக நீ இருக்கப் போகிறாய் எனக் கேட்பது நிகழ்கால மனத் தின் புறநிலை.

அண்மையில் இந்தியக் கிரிக்கெட்டின் பயிற்சி யாளரா... நியமிக்கப்பட்டுள்ள கிரேக் சேப்பலுக்கும், அணியின் தலைவர் சௌரவ் கங்குலிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு தகவல் ஊடகங்களில் ஊதிப் பெருக் கப்பட்டது. நீண்ட நாட்களாக தான் செய்ய வேண்டிய வேலையைச் சரிவரச் செய்யாத அணியின் தலைவர் சௌரவ் கங்குலி டெஸ்ட் கிரிக்கெட் ஆடும் அணி களிலேயே திறமை குறைந்த அணியாகக் கருதப்படும் ஜிம்பாப்வேக்கு எதிராக ஒரு சதத்தை அடித்துவிட்டு, தனக்கு எதிராக நடக்கும் சதியைப் பற்றியும் அதில் அணியின் பயிற்சியாளராக வந்துள்ள கிரேக் சேப்பல் பற்றியும் ஊடகங்களில் வாய் திறந்தார். அதன் தொடர்ச்சி யாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பயிற்சியாளர் x இந்தியாவைச் சேர்ந்த அணியின் தலைவர் என்பதாகச் சொல்லாடல்கள் உருவாக்கப்பட்டன. சௌரவ் கங்குலி யின் மாநிலமான வங்காளத்திலும் (சர்வதேச மனிதனைப் பற்றிப் பேசும் கம்யூனிஸ்டுகள் ஆளும் மாநிலம்), அதன் தலைநகரான கல்கத்தாவிலும் சேப்பலுக்கு எதிராகக் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. கங்குலிக்கு ஆதர வாகப் போணிகள் நடத்தப்பட்டன. அதன் பிறகு சம ரசம் ஏற்பட்டு விட்டது என்பது பழைய கதை.

இந்தியப் பணக்காரர்களின் - உயர்சாதிக் குழுக் களின் விளையாட்டான கிரிக்கெட் இன்று வரை அவர் களின் கைகளிலேயே இருக்கிறது. அதில் ஏற்படும் சிக் கல்கள் இந்தியாவிற்கே ஏற்பட்ட சிக்கல்கள் போல ஊட கங்களில் விவாதிக்கப்படுகின்றன. இந்த விவாதங்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்துவிட்டுப் போகட்டும், நமக்கென்ன வந்தது; கிரிக்கெட் மற்றவர்களின் விளை யாட்டே அல்ல என்று இருக்கலாம்தான். ஆனால் அப்படி விட்டுவிட முடியாது என்பதுதான் நான் சொல்ல வரு வது. இந்த மாதிரி விவாதங்களில் உண்டாக்கப்படும் எதிர்வுகள் மிக முக்கியம் என்று கருதுகிறேன். சேப்பல் அந்நியர் - கங்குலி இந்தியர் என்று எதிர்வு உருவாக்கப் படுவது கவனிக்க வேண்டிய ஒன்று. வெளியிலிருந்து வந்த சேப்பலால் பிரச்சினை உருவாக்கப்படுகிறது என்பதாக நம்ப வைக்கப்படுகிறது. தேச அளவில் நடந்த இந்தச் சொல்லாடலின் சாரம் எல்லா மட்ட விவ காரங்களிலும் வெளிப்படுகிறது என்பதை நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஜனநாயக முறையின் அடித்தளம் என்று கிராமப் பஞ்சாயத்து முறையைக் கருதும் இந்திய அரசு, தமிழ் நாட்டில் நான்கு பஞ்சாயத்துக்களில் - பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டாக்கச்சியேந்தல் - தேர்தலை நடத்த முடியாமல் இருப்பது பற்றிக் கவலைப்படவே இல்லை. தமிழ்நாட்டில் நடக்கும் அரசாங்கம் தன் அரசியல் அமைப்புக் கடமையை நிறை வேற்ற விரும்பாமல் தப்பித்துக்கொண்டிருக்கிறது. அதைப்பற்றிப் பேசும் பலரும் பெரும்பான்மைக்கெதி ராக சிறுபான்மையை நிறுத்துவது சரியல்ல என்பது போலப் பேசுகின்றனர். அந்தக் கிராமத்தவர்கள் தரும் பேட்டிகளில் வெளிப்படுவது ஜனநாயக நடைமுறை களைப் பற்றித் தெரிந்து கொள்ளாத அப்பாவித்தனம் மட்டுமல்ல, பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் வெளி யில் இருந்து வந்தவர்கள்தான் என்பதும்தான். பாப்பா பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் போன்ற பஞ்சா யத்துக்களில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும், தலித்துகளின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தும் போராட்டக்காரர்களும், ஜன நாயகவாதிகளும் ஊடகங்களும் வெளியில் இருந்து வருபவர்கள் என்றே கணிக்கப்படுகின்றனர். வெளியில் இருந்து வருபவர்கள் பிரச்சினைகளை உருவாக்குபவர் கள் என்று நம்புவதும், உள்ளே இருப்பவர்கள் சமரசமும் சகிப்பும் மனிதாபிமானமும் கொண்டவர்கள் என்று நம்பச் செய்யவும் முயற்சிகள் தொடர்ந்து நடக்கின்றன. ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பிருந்த குருகுலக் கல்வி உயர்வானது என்றும், ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த கல்வி முறை - மெக்காலே கல்வி முறை - குமாஸ்தாக்களை உருவாக்கும் கல்வி முறை என்றும் பேசுவது கூட ஓர் அப்பாவித்தனம்தான். ஆனால் அதற்குள் அனைவருக்கும் கல்வி அளிக்கும் திட்டம் இருந்தது என்பதை மறைக்கின்றனர் என்பதை உணர்ந் தாக வேண்டும். அப்பாவித்தனம் ஏற்கத்தக்கதல்ல; அப்பாவித்தனத்தின் பின்னால் தான்தோன்றித்தனமும், பொது சிவில் சட்டத்திற்கு ஒத்துப்போகாத சாதி ஆதிக்க மனோபாவமும் இருக்கிறது என்பதை உணர பாப்பாபட்டிகள் உதாரணங்களாகி இருக் கின்றன.



படிப்பகம்

தொடர்ந்து வரலாற்றிலிருந்து பாடங்கற்றுக் கொள்ளவும் வரலாற்றை விடுதலைக்கான கருவியாகப் பயன்படுத்தவும் நாம் நினைக்கிறோம். அந்தப் பின்னணியில் சமீபத்தில் படித்த கட்டுரையொன்றை நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். 'கலாசாரத்தின் அரசியல்' என்ற அந்த நூலின் ஆசிரியர் வெங்கடேசன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி(மார்க் சிஸ்ட்)யின் முழுநேரப் பணியாளர். அதில் ஒரு கட்டுரை உள்ளது. பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டு வந்த குற்றப் பரம்பரைச் சட்டத்தின் பின்னணிகளை ஆய்வு செய்யும் கட்டுரை அது. மதுரை மாவட்டம் கீழக்குயில்குடி கிராமத்தை மையமாகக் கொண்டு தான் சேகரித்த தகவலின் அடிப்படையில் அந்தக் கட்டுரையை அவர் எழுதியுள்ளார். இந்தக் கீழக்குயில்குடி இன்று ஜனநாயகத்தை ஏற்க மறுக்கும் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் பக்கத்தில் உள்ள கிராமம் என்பது குறித்துக் கொள்ள வேண்டியது.

இந்திய தேசத்தைத் தனது காலனிய ஆட்சிக்குள் கொண்டு வந்த ஆங்கிலேய அரசாங்கம் தனது சட்டத்திற்குக் கட்டுப்படாமல் பொது ஒழுங்கை மீறும் குழுக்களை - தனி நபர்களை அல்ல - கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர உருவாக்கிய சட்டம்தான் குற்றப் பரம்பரைச் சட்டம். இந்தச் சட்டம் தமிழ்நாட்டில் இரண்டு பகுதிகளில் கடுமையாக அமல் செய்யப்பட்டது. இப்போதைய கடலூர் மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலும் அப்பகுதிகள் உள்ளன. இன்றும் மதுரை மாவட்டக் கிராமப்புற மக்களிடம் கைநாட்டுச் சட்டம் என அறியப்படும் அச்சட்டம் கொடிய அடக்கு முறைச் சட்டம் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. குற்றப் பரம்பரைச் சாதி என அறிவிக்கப்பட்ட பிறமலைக் கள்ளர் சாதி ஆண்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இரவிலும் காவல் நிலையத்திற்கு வந்து கை நாட்டுப்போட்டுவிட்டு அங்கேயே தங்கிவிட வேண்டும் என்பது அதன் நடைமுறை. அதை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது அதற்குக் கட்டுப்படாமல் எதிர்த்தவர்கள் பலருண்டு. பலர் சிறையிலடைக்கப்பட்டதாகவும், கண்மாய் நீருக்குள் பதுங்கியிருந்த பலர் மதுரை மாவட்டம் பெருங்காமநல்லூரில் சுட்டுச் கொல்லப்பட்டதாகவும் வாய்மொழி வரலாறுகள் கூறுகின்றன.

இந்தப் பிரச்சனையை வெளியே இருந்து வந்தவர்கள் x சொந்த மண்ணுக்குரியவர்கள் என்று பார்த்துள்ள வெங்கடேசன், ஆங்கிலேய அரசாங்கம் பிறப்பித்த குற்றப் பரம்பரைச் சட்டத்தை வெளியிலிருந்து வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் கொடூரமான சட்டம் என்றும் அதற்குக் கட்டுப்பட மறுத்தவர்களின் எதிர்ப்பை வீரம் செறிந்த காலனிய எதிப்புப் போராட்டமாகவும் சித்தரிக்க முயன்றுள்ளார். அந்தப் பார்வை முழுவதும் ஏற்கத்தக்கதல்ல என்றே தோன்றுகிறது. அந்தப் பார்வையினூடாக வெங்கடேசனின் எழுத்து வேறு சில தகவல்களையும் ஆதாரமாகத் தந்துள்ளது. கீழக்குயில்குடியில் தொடங்கப்பட்ட பள்ளிக்கூடம் அதன் வழி கற்பிக்கப்பட்ட கல்வி, அப்பணியோடு வேறுவகைப் பணிகளிலும் போதனைகளிலும் ஈடுபட்ட கிறித்தவச் சமயப் பாதிரிகளின் செயல்கள் பற்றியும் அத்தகவல்கள் நமக்குச் சில செய்திகளைத் தருகின்றன. ஆங்கில அரசாங்கம் கொடுமையான குற்றப் பரம்பரைச் சட்டத்தின் வழி சட்டம் ஒழுங்கை ஏற்படுத்த முயன்ற அதே நேரத்தில், கல்வி அறிவு ஊட்டுவதன் மூலம் அம்மனிதர்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தவும் முற்பட்டுள்ளது. இந்தத் தகவல்களையும் அவரது கட்டுரையே நமக்குத் தருகிறது. இந்த நடைமுறை அன்றைய சூழலிலும் இன்றைய சூழலிலும் வரவேற்கத்தக்க ஒன்று.

ஆனால் நமது ஜனநாயக அரசுகளோ இவ்விரண்டையுமே கைவிட்டு விட்டன. பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டாக்கச்சியேந்தல் ஆகிய கிராமங்களில் அரசாங்கச் சட்டத்தை ஏற்காத மனிதர்களைச் சட்டத்தின் துணை கொண்டு பயமுறுத்தவும் முயலவில்லை. அவர்களின் மனங்களை மாற்றி ஜன நாயக நடைமுறைக்குத் தகவமைக்கும் கல்வி அறிவைத் தர முயற்சி செய்யவும் இல்லை. எனவே இன்றைய சூழ லில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பின்பற்றிய நடைமுறைகளை நமது அரசாங்கங்களும் பின்பற்றவேண்டிய தேவைகள் இருக்கின்றன என்று சொல்லத் தோன்றுகிறது.

(மதுரை, அம்பேத்கர் படிப்பு வட்டம் 24.9.2005
அன்று நடத்திய பூனா ஒப்பந்தம்/இரட்டை
வாக்குரிமை நினைவு நாள் கருத்தரங்கில்
பேசியதன் சுருக்கம்)

# பரிதாபம்

பொன். குமார்

சாலை நடுவில்
வாகனம் ஏறி
சதைப் பிதுங்கி
இரத்தம் வழிந்து
இறந்து கிடந்தது
யாருமே சொந்தம் கொண்டாடாத
நாய்

எதிரெதிர் வரும் வாகனங்கள்
எல்லாம்
இறந்த நாய் மீது
பரிதாபம் கொண்டு
மீண்டும் ஏற்றாமல்
ஒதுங்கியே சென்றன



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# இந்திய அரசமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் இசைந்தது ஏன்?

■ அறிஞர் அன்பு பொன்னோவியம்

இந்திய அரசமைப்புச் சட்டம் எழுதப்பட்ட வரலாற்றினை அறிந்தவர்கள் மிகக் குறைவானவர்கள் மட்டுமே இருப்பார்கள். சமூக-அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அரசமைப்பு விவாத நிகழ்வுகளை படிப்பதில் ஏற்படும் சுமையை எதிர்கொள்வதில் பலருக்கு ஆர்வம் இருப்பதில்லை. அதனாலேயே அவர்கள் மேம்போக்கான வரலாற்று குறிப்புகளையும், துணுக்குகளையும் படித்த மேதமையோடு தமது கருத்துக்களை சமூகத்திற்கு வழங்கி விடுவார்கள். தமது இந்த மேதமையையும் அவர்கள் வளர்த்துக்கொண்டது பெரும்பாலும் பார்ப்பனர் மற்றும் இந்து அரசியல் சிந்தனையாளர்களின் திரிந்த மன கருத்துக்களிலிருந்துதான். இப்படி கற்றவர்கள்தான் அரசமைப்புச் சட்டமானது பல மோசமான அரசியல் நிகழ்வுகளுக்கு துணை போகிறது என்று கூறி வருகிறார்கள். தொடர்ந்து, அம்பேத்கர் அதை எழுத ஒத்துக் கொண்டது எப்படி? என்ற கேள்வியை முன்வைத்து, அம்பேத்கர் பதவி ஆசை உள்ளவர் என்று கூறும் அளவிற்குக்கூட அவர்கள் சென்றனர்.

ஆனால், அரசமைப்புச் சட்டம் எழுதப்பட்டதில் தலித் இயக்கங்கள் மேற்கொண்ட வரலாற்றுப் பணியினை அவர்கள் அறிந்திருந்தால் பிறவி மேதைகளின் அவதூறுகள் வந்திருக்காது.

அரசமைப்புச் சட்டம் எழுதப்படுவதற்கு தகுதி யானவர்தானா அம்பேத்கர் என்பதில் இரண்டாம் கருத்து இல்லை. சட்டவியலில் ஆழ்ந்த புலமை கொண்ட அம்பேத்கர், பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்ற முதல் இந்தியராக அன்று இருந்தார். அன்றைய பொருளாதாரவியல் அரசியல் பொருளாதாரத்தை பெருமளவு சார்ந்திருந்தது. எனவே பொருளாதாரத்திலும், சட்டவியலிலும் அம்பேத்கரைவிட சிறந்த தேர்வு இருக்க முடியாது. காங்கிரஸ் பெருமளவு வழக்குரைஞர்களைக் கொண்ட பட்டாளமாக இருந்ததே தவிர, அரசியல் பொருளாதாரத்தில் யாரையும் அது கண்டு பிடிக்கவில்லை. அரசியல் பொருளாதார நிபுணத்துவம் இன்றி அரசமைப்புச் சட்டத்தை இயற்றுவது பயனற்றதாக இருக்கும். எனவே காங்கிரஸ் அம்பேத்கரை அரசமைப்புச் சட்டம் எழுத அழைத்தது.

காங்கிரசிடமிருந்து அழைப்பு வந்தவுடன், அதை ஆர்வமுடன் அம்பேத்கர் பற்றிக்கொள்ளவில்லை. மிகுந்த குழப்பத்திற்கு உள்ளானார். இந்தப் பொறுப்பை தான் ஏற்பதால் ஏற்படக்கூடிய சமூக நன்மைகள் ஒருபுறம், எதிர்ப்படும் கேள்விகள் மறுபுறம் என கேள்விகள் அவரைத் துளைத்தெடுத்தன.

எனவே பட்டியலின கூட்டமைப்புத் தலைவர் தந்தை சிவராஜ் அவர்களிடம், கூட்டமைப்பின் செயற் குழுவைக் கூட்டி, தம் நிலையை அதில் விவாதித்து முடிவெடுக்கும்படி கேட்டுக்கொண்டார். பட்டியலின கூட்டமைப்பு அவசரமாக கூடி விவாதித்து ஜனநாயக முறைப்படி முடிவெடுத்து, அம்பேத்கரை அரசமைப்பு சட்டம் எழுதும்படி பணித்தது. தம் இயக்கம் இட்ட கட்டளையை அம்பேத்கர் ஏற்று செயல்பட ஒப்புக்கொண்டார்.

இந்த வரலாற்றுப் பின்னணியை 1962-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்த "பட்டியலின வங்கி ஆளுநர்கள்" (Scheduled Caste Banks' Governors) கூட்டத்தில் தந்தை சிவராஜ் அவர்கள் கூற, அறிஞர் அன்பு பொன்னோவியம் அவர்கள் பதிவு செய்தார்கள். (1993 டிசம்பர் அறவுரை இதழில் அண்ணலும் அரசியல் சட்டமும் - தெரிந்த வரலாறும் தெரியாத செய்தியும் என பொன்னோவியம் கட்டுரையாக வெளியிட்டார்.)

1949 நவம்பர், 26ஆம் நாள் அரசமைப்பு பேரவையில் தன் இறுதி உரையை அம்பேத்கர் நிகழ்த்தினார். நீண்ட சொற்பொழிவிற்குப் பிறகு அரசமைப்புச் சட்டம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்திய அரசமைப்புச் சட்டம் அரசியல் ரீதியாக 1950 ஜனவரி 26-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தாலும், சட்டப்படியான ஏற்பு என்பது நவம்பர் 26, 1949 ஆகும். இந்த சட்ட ரீதியான ஏற்புதான் இந்தியாவில் நிலவும் அனைத்து சட்டங்களுக்கும் முதன்மையான இசைவாகும். எனவே இந்நாளை இந்தியாவின் சட்ட நாளாக கடைப்பிடிக்க வேண்டும் என சட்ட அறிஞர்கள் கருதினர். அதற்காக பல முயற்சிகள் செய்தனர். அதன் பயனாய் சட்ட நாளுக்கான முதல் நிகழ்வு 1979-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் நாள் தில்லியில் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நிகழ்வை அன்றைய உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமை வகித்து துவங்கி வைத்தார். மூத்த வழக்குரைஞர் டாக்டர் எல். எம். சிங்க்வி வரவேற்புரை நிகழ்த்தி



படிப்பகம்

www.padippakam.com

அறிமுகப்படுத்த, மத்திய சட்ட அமைச்சர் எஸ்.என். நாகேசர் சிறப்புரை நிகழ்த்தினார். அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் சட்ட நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இம்மாதம் நவம் பர் 26 சட்ட நாள். அம்பேத்கரை அறிவுபூர்வமாக நினை வேந்த விரும்புகிறவர்கள் இந்நாளை பயன்படுத்திக் கொள்வதோடு அம்பேத்கர் அரசமைப்பு அவையில் பங்கேற்ற தலித் வரலாற்று அரசியல் பின்புலத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அரசியல் சட்டத்தின் இயக்கத்தை புரிந்து கொள்ளாதவர்கள்தான் தலித் அரசியல் இயக்கத்தின் வரலாற்றையும் அறியாதவர்களாக, புறந்தள்ளியவர்களாக இருக்கின்றனர். இங்கு வெளியிடப்பட்டுள்ள அறிஞர் அன்பு பொன்னோவியம்அவர்களின் பதிவு, மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில் கூறும். எனினும், மீளும் அவதூறுகளுக்கு அவர்களின் சாதி உணர்வே காரணமாக இருக்கும்.

■ கௌதம சன்னா

"நமக்கென்று ஓர் அரசியல் சட்டம் தேவை. அப்போதுதான் நமக்கு சுய ஆட்சி தகுதி ஏற்படும். அல்லது மக்களின் பெயரால் மக்களுக்கு என்று மக்களால் நடத்தப்படும் அரசாங்கம் கிடைக்கும்... இந்திய அரசியலமைப்பில் செட்யூல்டு மக்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்குமான தக்க பாதுகாப்புக்கு இந்திய சமூகங்கள் யாவும் இணங்க வேண்டும்... சிறுபான்மை யோரிடம் உள்ள எல்லா பயங்களையும் போக்க முற்பட வேண்டும். இல்லாவிட்டால் சுய ஆட்சி கோரிக்கைக்கே கேடு விளையலாம்... இந்தியாவுக்கே உரிய சிறப்பான சில செயல்களை மத்திய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்... இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை யாகும். மலைவாழ் மக்களின் தொகை தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மக்கட்தொகைக்கு ஏறக்குறைய நிகரான தாகும். இம்மக்களை எல்லாம் நாகரீக அணிக்குள் கொண்டு வரும் புனிதமான பொறுப்பை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். பின்தங்கிய வகுப்பினர் நிலையை மேம்படுத்தும் பொறுப்பை மத்திய அரசு உணர வேண்டும்" என்று அண்ணல் அம்பேத்கர் 1930--ல் லண்டன் வட்டமேஜை மாநாட்டில் வலியுறுத்தினார். எதிர்கால சுதந்திர இந்தியாவின் அரசியல் எப்படி இருக்க வேண்டும், அரசியல் சட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அவர் துல்லியமாக தொலைநோக்காக பல அரிய கருத்துக்களால் பேசியும் எழுதியும் சாடினார். 'நாடுகள், சிறுபான்மையினரும் அவர்களது உரிமைகளும் என்ன?' என்ற நூலை எழுதினார். அது கிட்டத்தட்ட அரசியல் சட்ட முன்வடிவு மாதிரி இருக்க வேண்டும் என்பதிலே அவர் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். இதன் காரணமாகவே அவரை முற்போக்காளர் என்றும் தேசியவாதி என்றும் அரசியல் அறிஞர் என்றும் இந்திய மக்களும் அறிஞர்களும் பாராட்டினர்.

இந்தியா சுதந்திரமடைந்தபோது அதற்கான அரசியல் சட்டத்தை இயற்ற ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அதில் அரசியலையும் அரசியல் சட்டங்களையும் , இந்திய சமூகங்களையும் தெளிவாகத் தெரிந்த சிலரை குழுவில் சேர்த்தார்கள். அக்குழுவில் அண்ணல் அம்பேத்கரையும் சேர்த்துக் கொள்ள விரும்பினார்கள். அக்குழுவில் அண்ணல் சேர்ந்தது ஒரு சுவையான வரலாறு. காந்தியடிகள் நேருவிடம் அண்ணலை குழுவில் சேர்த்துக்கொள்ளுமாறு சொன்னதாக ஒரு கதை உண்டு. இது உண்மையானால் இது ஒரு பக்கத்தின் கதையேயாகும். அதன் மறு பக்கத்தையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

அண்ணல் அம்பேத்கர் சட்டக் குழுவில் சேருவதை காங்கிரசாரில் பலர் விரும்பவில்லையாம். இப்படி ஒரு வதந்தி. சேர்க்காமலிருந்தால் பின் விளைவுகளை



சந்திக்க நேரிடலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் எண்ணினார்களாம். இப்படி ஒரு செய்தி. சாதியின் பெயரால் அழைக்கப்பட்டால் அவர் விரும்பமாட்டார் - மறுக்கக்கூடும் என்று அச்சப்பட்டார்களாம். அவரை ஒதுக்கி வைத்தால் அரசியல் சட்டம் இயற்றிய பிறகு அதை அவர் கடுமையாக விமர்சனம் செய்ய நேரிடும் என்றும் பயந்தார்களாம். இப்படிப் பல செய்திகள்.

எப்படியிருப்பினும் அண்ணலுக்கு மேலாக அறிவும் தெளிவும் நிறைந்தவர்கள் யாரும் அக்குழுவில் இல்லை என்பது இந்திய சமுதாய அரசியல் மேதைகளின் எண்ணமாகும். அண்ணல் உலகப் புகழ்பெற்ற அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டங்கள் பெற்றவர். அரசியல், பொருளாதாரம், சட்டம் ஆகியவற்றில் தேர்ந்தவர். இந்திய சமூக சமுதாயங்களை மிகத்தெளிவாக அறிந்தவர். பெரும் சிந்தனையாளர், சீர்திருத்தவாதி, புரட்சியாளர் நல்ல எழுத்தாளர், சிறந்த பேச்சாளர். கல்வித் துறையில் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றியவர். ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட பல குழுக்களில் செயலாற்றி அரிய கருத்துக்களை அறிக்கையாக தந்தவர். சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் திறம்பட செயல்பட்டவர். எவரிடமும் எதைப்பற்றியும் வாதிடும் வல்லமை படைத்



படிப்பகம்

**மனுதர்ம சாஸ்திரப்படியோ – சனாதன அடிப்படையிலோகூட அவர்கள் சட்டத்தை படைக்கக்கூடும். அவ்வாறு செய்வதில் தங்கள் பழைய கலாச்சாரத்தை பின்பற்றுகிறோம் என்றும் அவர்கள் பெருமைப்படலாம். வாய்ப்புக் கேடாக அத்தகைய சட்டம் எழுதப்பட்டு விட்டால், அதற்குப் பிறகு அதை தக்க வைத்துக் கொள்வது தவிர்க்க முடியாததாகி விடும். நாட்டிற்கு சட்டமியற்ற அழைத்தபோது நாம் [illegible] செய்யாமல் பிறகு குற்றம் கூறுவதும் நேர்மையாக இருக்காது.**

தவர். பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய தொழில் அமைச்சராக பணியாற்றியவர் - உலகின் ஆறு அறிவாளிகளில் ஒருவர் என்று பாராட்டப் பெற்றவர் - இத்தகைய பெருமைகளைப் படைத்தவர் எவரும் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அண்ணல் எல்லா தகுதிகளையும் பெற்றிருந்ததால்தான் அவரை சட்டக் குழுவில் சேர்த்தார்கள். பிறகு அந்தக் குழுவின் தலைவராகவும் ஆக்கினார்கள். மேலும் 1946 டிசம்பர் 9-ல் நாடாளுமன்றத்தில் அண்ணல் இந்தியாவின் ஒற்றுமையைப் பற்றி பேசிய பேச்சே காங்கிரஸ் தலைவர்களையும் அந்த இயக்கத்தினரையும் கவர்ந்தது. அதுதான் அவருக்கு ஒரு சிறப்பான வாய்ப்பை பெற்றுத் தந்தது என்றும் கருதுவார்கள் - ஆயினும் அவர் அரசியல் சட்டம் இயற்றும் குழுவில் சேர்ந்தது ஒரு சுவையான வரலாறாகும்.

அண்ணலுக்கு சட்டக் குழுவில் சேருமாறு அழைப்பு வந்தது. அதை பலர் பலவிதமாக கணித்தார்கள். அறிஞர் அம்பேத்கரை வைத்தே மேட்டுக் குடியினர் தங்களுக்குச் சாதகமாக சட்டத்தை எழுதிக்கொள்ளக் கூடும் - செட்யூல்டு இன தலைவர்களை காங்கிரசுக்குள் இழுக்கலாம் - அதன் மூலம் செட்யூல்டு வகுப்பு சம்மேளனத்தை உடையச் செய்யலாம் - செட்யூல்டு இன மக்களுக்கு தனியாக சமூக அரசியல் அமைப்புகளை இல்லாமல் ஆக்கலாம் - செட்யூல்டு இன மக்களை சாதி இந்துக்களின் பிடியில் நிரந்தரமாக வைக்கலாம் என்று கருதினார்கள். இது ஒரு நல்ல கற்பனைதான் என்றாலும் இது உண்மையாகவும் இருக்கக்கூடும். ஏனெனில் ஏற்கனவே சிலரை காங்கிரஸ் இயக்கம் கவர்ந்து கொண்டது. பூனா ஒப்பந்தத்தின்போது நடந்த மோசடிகளையும், சுதந்திரத்திற்குப் பிறகு "அதிகார மாற்றங்கள்" என்ற பெரு நூல்களில் வெளியாகியிருக்கும் கருத்துரைகளையும் இன்று ஒப்பிட்டுப் பார்க்கும்போது பார்த்தால் அந்த நாளில் இப்படியொரு கருத்து வெளிவருவதும் அதனால் செட்யூல்டு இன தலைவர்கள் அச்சப்பட்டதும் சரியானதே என்று எண்ணத் தோன்றியது.

அண்ணலுக்கு அழைப்பு வந்ததும் அவர் எந்த முடிவும் எடுக்காமல் தந்தை சிவராஜ் அவர்களுக்கு தகவல் தந்தார். செட்யூல்டு இன சம்மேளனத்தின் தலைவரான தந்தை உடனடியாக அகில இந்திய செயற்குழுவைக் கூட்டினார். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் நல்ல வாய்ப்பு என்றளவில் பாராட்டி விட்டு அண்ணல் அம்பேத்கரின் விருப்பத்திற்கே விட்டு விட்டார்கள். அண்ணல் தன் கருத்தைக் கூறினார்:

"எனக்கு அழைப்பு கிடைத்தபோது நான் எந்தவித உணர்வும் கொள்ளவில்லை. நமது சம்மேளனத்தின் செயற்குழு என்ன முடிவெடுக்கப் போகிறது என்றே எண்ணினேன். என்னைப் பொறுத்தவரை எனக்கு இது ஒரு சங்கடமான சூழ்நிலையை உருவாக்கிவிட்டது என்றே கருதுகிறேன். இந்தக் குழுவில் சேர்ந்து செயல்படலாம். ஆனால் நமக்கு எத்தகையப் பயனிருக்கும் என்று தோன்றவில்லை. காங்கிரசு அரசுக்கு சாதகமாக இருக்க நான் வற்புறுத்தப்படலாம். அது என்னால் முடியாது. காங்கிரசில் சேரச் சொல்லலாம். நான் அதை விரும்பவில்லை. என்னுடைய ஆலோசனைகளை சாதியாலும் மதத்தாலும் வேறுபட்டவர்களும் உயர்த்தப்பட்டவர்களுமான மற்ற உறுப்பினர்கள் ஏற்காமல் போகலாம். அது எனக்கு வருத்தத்தை தரக் கூடியதாக இருக்கும். என்னுடைய போக்கு இந்து "தர்ம" சாஸ்திரங்களுக்கு நேர்மாறாக அமையலாம். அதை மற்றவர்கள் ஏற்க மறுக்கும்போது எனக்கு வெறுப்பும் வேதனையுமே மிஞ்சும். சிறப்பாக செட்யூல்டு இனத்தவருக்கும், மலைவாழ் மக்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் நான் வகுக்கும் முறைகளை பிற வகுப்பு உறுப்பினர்கள் எந்தளவுக்கு ஆதரிப்பார்கள் என்ற அச்சத்தோடு நான் செயல்பட விரும்பவில்லை. எனவே, இந்த குழப்பத்திலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு சுருக்கமாகவும் தெளிவாகவும் தன் கருத்தைக் கூறி முடித்தார். உறுப்பினர்கள் திட்டவட்டமாக கூறாத நிலையிலும், பாபா சாகேப்பின் நியாயமான எண்ணத்தையும் - வாய்ப்பையும் - எடைபோட்டு, மக்களுக்கும் தேசத்திற்கும் உதவ வேண்டுமா வேண்டாமா என்ற கருத்தை வரையறுத்துக்கூறக்கூடிய சூழ்நிலையில் தந்தை சிவராஜ் தனது கருத்தைக் கூற வேண்டும்.

கூறினார்: "இன்று நமது பங்கினை நாட்டுக்கு நல்கிடும் தவிர்க்க முடியாத சூழ்நிலை நமக்கு அமைந்து விட்டது. இந்திய தேசத்தின் தலைசிறந்த குடிமகனாகவும், சமுதாய அரசியல் துறைகளில் தனிப் பெரும் அறிவாளியாகவுமாக இருக்கின்ற டாக்டர் அம்பேத்கர் அவர்களிடமிருந்து ஐம்பத்தைந்து கோடி மக்களின் பிரதிநிதிகள் உதவி கேட்கிறார்கள். எவ்வளவு மகிழ்ச்சியான பெருமையான வாய்ப்பு இது! டாக்டருடைய சிந்தனையையும், செயலையும், விருப்பத்தையும் நான் நன்கு அறிவேன். உடல்நலம் குன்றி இருக்கும் இந்த வேளையில், மிகப் பெரிய சுமையை இந்திய மக்கள்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

அவர் மீது ஏற்றிப் பார்க்க நினைக்கிறார்கள் இதை நாம் எதிர்பார்த்ததுதான் - ஏற்பதற் கும் நாம் தயங்கவில்லை. அதே சமயத்தில் செயற்குழு உறுப்பினர்களின் உள்ளக் கிடைக்கையும் டாக்டருடைய எண்ணத் தையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது நாம் நமது பொறுப்பை உணர வேண்டியவர் களாக இருக்கிறோம் - நேரு, பட்டேல், ராஜேந்திர பிரசாத் போன்றோர் மேல் நாட்டுக் கல்வியைக் கற்றவர்கள் என்றா லும், இந்தியர் என்ற மனப்பான்மையு டனும், "இந்து" என்ற மனப்பாங்குடனும் செயல் படுவோர்கள். ஒருவேளை அவர்கள் மனுதர்ம சாஸ்திரப்படியோ - சனாதன அடிப்படையிலோகூட சட்டத்தை படைக் கக்கூடும். அவ்வாறு செய்வதில் அவர்கள் தங்கள் பழைய கலாச்சாரத்தை பின்பற்று கிறோம் என்றும் பெருமைப்படலாம். வாய்ப்புக் கேடாக அத்தகைய சட்டம் எழுதப்பட்டு விட்டால், அதற்குப் பிறகு அதை தக்க வைத்துக் கொள்வது தவிர்க்க முடியாததாகி விடும். நாட்டிற்கு சட்ட மியற்ற அழைத்தபோது நாம் உதவி செய் யாமல் பிறகு குற்றம் கூறுவதும் நேர்மை யாக இருக்காது. மேலும் நமது செட்யூல்டு இன மக்களுக்கும், மலைவாழ் மக்கள் பிற்பட்ட மக்கள் போன்றோர்களுக்கும் சட்டத்தில் முடிந்தளவு நன்மை செய்யும் அரிய வாய்ப்பை நழுவவிடுவதும் அறிவு டைமையாகாது. இந்தியாவிற்கு இந்தியர் களாலேயே படைக்கப்பட்ட சட்டம் என்ற சிறப்புக்கும், அதிலும் ஒரு பழங்குடி செட் யூல்டு இன் தலைவரின் பங்கும் இருக்கிறது என்ற பெருமையும் தேசத்திற்குக் கிடைக் கட்டும். எனவே, செட்யூல்டு காஸ்ட்ஸ் பெடரேஷன் சார்பாகவும், இதன் அகில இந்திய தலைவர் என்ற முறையிலும் டாக்டர் அவர்களை இந்த அழைப்பை ஏற்று சட்டக்குழுவில் சேர்ந்து பணியாற்ற ஆணையிடுகிறேன்"

என்று தந்தை சிவராஜ் தனது முடிவைக் கூற எல் லோரும் கை தட்டி சிரித்து மகிழ்ந்தார்கள். அண்ணல் அம்பேத்கர் மனம்விட்டு உரத்து சிரித்த ஒருசிலவற்றில் இது முக்கியமானது என்று தந்தை சிவராஜ் கூறுகிறார்.

அண்ணல் ஆதாயத்தைத் தேடி அலையாத பெருமகன். புகழுக்காக ஏங்காத தலைமகன். வாய்ப்புக்கு வளைந்து கொடுக்காத கொள்கை வீரர். அவர் பின் னாளில் கூறினார் "இராமாயணத்தை எழுத ஒரு வால் மீகி என்ற தீண்டாதவர் தேவைப்பட்டார். மகாபார தத்தை எழுத வியாசர் என்ற தாழ்த்தப்பட்டவர் அழைக் கப்பட்டார். சுதந்திர இந்தியாவிற்கு சட்டம் படைக்க நான் தேவைப்பட்டேன்." இது அழியாத அழிக்க முடி யாத உண்மை. நேற்றல்ல, இன்றல்ல, நாளையும் இந்த தேசம் செட்யூல்டு இன மக்களின் உதவியை எதிர் பார்க்கும். "எனது கடைசி துளி இரத்தம் இருக்கும் வரை இந்த தேசத்தைக் காப்பேன்" என்று அண்ணல் கூறியதை மனங்கொள்வோம். தேசம் வாழ பிறரையும் வாழ வைத்து நாம் வாழ்வோம்!

## மத்திய ரயில்வே அமைச்சருக்கு ஆதித்தமிழர் பேரவையின் கடிதம்

கடந்த 2004 டிசம்பர் 26-ஆம் நாள் கோவையில் ஆதித்தமிழர் பேரவையால் நடத்தப்பட்ட துாய்மைத் தொழிலாளர் மறுவாழ்வு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 21 தீர்மானங்களில் தீர்மானம் எண் 5-இல் இந்திய துணைக் கண்டம் முழுவதும் தொடர்வண்டி நிலையங்களில் உள்ள இருப்புப் பாதைகளில் மனித கழிவுகளை இன்றைக்கும் கையால் அள்ளும் அவலம் நீடிப்பதை தடுக்கும் வகையில் நவீன கருவிகளை பயன்படுத்தக் கோரி மனிதர் கழிவை மனிதர் அகற்றும் அவல நிலையை தடுத்து நிறுத்திட வேண்டுமென இந்திய ரயில்வே அமைச்சகத்தை கேட்டுக் கொண்டது தங்கள் நினைவில் இருக்கும் என நம்புகிறேன்.

பத்து மாதங்கள் முடிந்த பின்னரும் தொடர்வண்டி நிலையங்களில் மனிதர் கழிவை மனிதர் அகற்றும் நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. எனவே மேற்சொன்ன கோரிக்கைக்காக போராட்டம் நடத்தும் நிலைக்கு ஆதித்தமிழர் பேரவை தள்ளிவிடப்பட்டுள்ளது.

இக்கடிதம் கிடைத்த 30 நாட்களுக்குள் இம்மாபெரும் இழிவை ஒழிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும், நடவடிக்கை எடுக்காத நிலையில் எதிர்வரும் நவம்பர் 28, 2005 அன்று ரயில் மறியல் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் ஆதித்தமிழர் பேரவை கருதுகிறது.

எனவே இந்த இழிவை ஒழித்து தேவையற்ற இடையூறுகளை தவிர்க்க இந்திய ரயில்வே துறையினரை ஆதித்தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

*இரா. அதியமான்*

*5.10.2005*



படிப்பகம்

www.padippakam.com


தங்கம் மற்றும் வெள்ளி ஆகிய இரு உலோகங்களின் பயன்பாடுகள் அவைகளின் மதிப்பை நிர்ணயிக்கும் காரணியாகக் கொள்ளப்படுகிறது. நிலை இவ்வாறு இருப்பினும் தங்கம் மிக அரிதாக கிடைக்கிறது. வெள்ளி உலோகம் தங்கம் கிடைக்கும் அளவைவிட கூடுதலாக ஒப்பீட்டளவில் கிடைக்கிறது. இந்த சூழல் தங்கத்தின் விலையை கூட்டி நிர்ணயிக்கிறது. மேலும் பயன்பாடு என்ற அளவில் தங்கத்தின் பயன்பாடு வெள்ளியின் பயன்பாட்டைவிட சர்வதேசிய அளவில் கூடுதலாக இருப்பதால் தங்கத்தின் மதிப்பு வெகுவாக உயர்த்தியே காணப்படுகிறது. இந்த உண்மையை கணக்கில் கொள்ளும்போது இரு உலோக நாணயங்கள் அல்லது இரு உலோகங்களின் விகிதத்தில் பயன்பாடு என்பது நிலையற்ற தன்மையை பெற்றுவிடுகிறது. அம்பேத்கர் தந்த அட்டவணை ஒப்பீடு:

| காலம் | தங்கம் (லட்சம் பிரான்க் | வெள்ளி (லட்சம் பிரான்க் | விகிதம் |
|---|---|---|---|
| 1803-1820 | 8680 | 10910 | 1:15.58 |
| 1821-1847 | 3010 | 27780 | 1:15.58 |
| 1848-1852 | 4480 | 5430 | 1:15.67 |
| 1853-1856 | 17950 | 1020 | 1:15.35 |
| 1857-1866 | 35160 | 550 | 1:15.33 |
| 1867-1873 | 8760 | 5870 | 1:15.63 |

இந்த அட்டவணை 1881 பாரிசில் நடைபெற்ற சர்வதேசிய நாணய மாநாட்டில் எம். பியர்சன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது.

புள்ளி விவரங்களின் பார்வையில் மிகச் சிறு அளவிலான பேதம் மாப்பெரிய எண்ணிக்கை வித்தியாசத்தை நிறுத்தியுள்ளது. தங்கத்தின் அளவை ஓர் அலகாகக் கொண்டு, வெள்ளியின் நிலையை கணக்கிடும் வகையில் இந்த அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது. தங்கம் ஓர் அலகைப் பெற வேண்டி அட்டவணை அமைக்கப்பட்டிருப்பதால், வெள்ளியின் அலகு தசம புள்ளியுடன் தரப்பட்டுள்ளது.

அதாவது ஒரு கிலோ தங்கமானது 15 கிலோ வெள்ளிக்கு ஒப்பாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த விகிதம் 6 நிலைகளில் அதாவது கால அளவுகளில் அணுகப்பட்டுள்ளது. புறப்பார்வைக்கு 1803-ஆம் ஆண்டு முதல் 1873-ஆம் ஆண்டு வரை இந்த ஒரு கிலோ தங்கத்தின் மதிப்பு 15 கிலோ வெள்ளியோடு பொருந்தி வருவதாகத் தோன்றினாலும் இங்கு விலக்க வர்க்க சராசரியானது மிகக் கூடுதலான விலகலைப் பெற்றுள்ளதை புள்ளியின் பின்புலம் அறிந்தவர்கள் அறிவர்.

இதை எளிய ஓர் உதாரணத்தின் மூலம் அணுகலாமே. ஆண்டிற்கு 10 லட்சம் மாணவர்கள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுகின்றனர். இதில் 0.001 சதவீதம் பிழையான தேர்வு முடிவு வெளியிடப்படுகிறது எனில், ஆயிரம் மாணவர்களின் தேர்வு முடிவு தவறாக வெளியிடப்படும். அதாவது தசமத்தில் மூன்றாம் இலக்கத்தின் ஓர் எண்ணின் மாறுதல் 10 லட்சம் அல்லது மில்லியன் தொகையில் ஆயிரத்தின் மடங்கில் பிழைகளை உருவாக்கும்.

கூடுதலாக நமக்கு தரப்பட்ட அட்டவணையில் தசம இயக்கத்தின் இரண்டாவது இலக்கத்தில் மாறுதல்கள் தெரிகின்றன. இது பத்தாயிரம் மடங்கில் மில்லியனுக்கு பிழைகளை அல்லது நிலையற்ற தன்மையை உருவாக்கி விடும்.

மதிப்பு மில்லியனைத் தாண்டி மில்லியனில் உயரும்போது பத்து லட்சத்தில் பிழைகள் அல்லது நிலையற்ற தன்மை பெருகும். உதாரணமாக 1:15.58 மற்றும் 1:1.80 ஆகிய இரண்டு தொடர் மாற்றங்களில் (காண்க அட்டவணை) இரண்டு லட்சத்து இருபதினாயிரம் எண்ணிக்கைகள் பேதப்படுகிறது. இத்துணை பேதம் மிகுந்த நிலைத்த தன்மையற்ற உலோக ஒப்பீட்டையே தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்களின் ஒப்பீடு தரவியலும்.

இன்று உலகம் வர்த்தகத்தில் பரந்துள்ளது. எண்ணிக்கையின் ஒரு சிறு கூடுதல் அல்லது குறைதல் கூட நாட்டின் உறுதித் தன்மையை கேள்விக்குட்படுத்து கிறது. ஆழமாக வெளிப்படுத்துவதென்றால் நாட்டின் அசைவையே பள்ளிப் பிடித்து செயல்பட வைப்பது பொருளாதார அமைப்பாகவே மேலோங்கியுள்ளது.

இந்த உண்மையில், மாறுபாடு கொண்ட ஓர் உலோக ஒப்பீட்டின்படி நாணயங்களை அமைத்துக் கொள்வது பலவீனமான அடித்தளமாகவே அமைந்து விடுகிறது.

இன்றைய (அக்டோபர் 2005) நிலவரப்படி (இந்தியா), ஒரு கிலோ சுத்த தங்கம் (24 காரட்) ரூ.6,85,500. ஒரு கிலோ சுத்த வெள்ளி ரூ.11,556. இவைகளின் விகிதம் 1:59.32 என்று அமைந்துள்ளது. ஒரு வாதத்திற்காக நமது நாடு இரு உலோக ஒப்பீட்டு நாணயத்தை பெற்றிருந்தால் வெள்ளியானது 15 என்ற உருப்படியில் இருந்து 60 என்ற உருப்படிக்கு சென்றிருக்கும். இந்நாட்டின் பொருளாதாரம் வெகுவாக தடுமாறியிருக்கும்.

இது விந்தையாகத் தெரியலாம். ஆனால் விகிதம் என்பதை நாம் உணர, எளிமையான உதாரணத்தைப் பார்ப்போம். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 1000 ஆண்களுக்கு 1000 பெண்கள் என்ற விகிதம் இருந்ததாகக் கொள்வோம். இன்றைக்கு 1000 ஆண்களுக்கு 990 பெண்கள் உள்ளதாக புள்ளி விவரங்கள் காணப்படுகின்றன. இன்னும் பல நூறு ஆண்டுகளில் இதே விகிதம் மீச்சிறிய இறக்கத்தோடு தொடரும் என்பது உண்மை. மாறாக ஒரு கிலோ தங்கம் தன்னுடைய ஒப்பாக 15 கிலோ வெள்ளியைக் கொண்டிருந்த 1873-இல், இன்றைய நாளைக்கு 2005-இல் ஒரு கிலோ தங்கம் 60 கிலோ ஒப்பாகக் கொண்டுள்ளது, தங்கத்தின் மதிப்பு, பயன்பாடு, கிடைக்கும் வாய்ப்பு ஆகியவற்றை கொண்டு வெள்ளி ஒப்பிடப்படுவதை அறிய இயலுகிறது. கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட இந்த மாற்றம் இன்னும் நூறு ஆண்டுகளில் கூடுதலாக உயரும்.

இது அம்பேத்கரின் தொலைநோக்கு திறனை நான் புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது. அம்பேத்கருக்கு நாணயத்தின் மீது இவ்வாறான கருத்து இருந்ததை - அவரின் பொருளாதார கணிப்பை வெகுமக்கள் உணர வேண்டியிருந்தது. ■


படிப்பகம்

www.padippakam.com

# ஜான் தாமஸ் - ஏழுமலைக்கு வீர வணக்கம்

■ தலித் இராமதாஸ்

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும், தலித் மக்கள் உரிமைகளுக்காகவும் பாடுபட்ட தலைவர்கள் போன்று தலித் மக்களின் வாழ்வுரிமைக்கான நிலங்கள் மீட்கும் பணியில் ஈடுபட்டு தங்களின் உயிரை தியாகம் செய்த ஜான் தாமஸ் மற்றும் ஏழுமலை ஆகிய இரு தியாகிகளுக்கும் முதலில் நம் வீர வணக்கத்தை சமர்ப்பணமாக்குவோம்.

**தீபன் சக்கரவர்த்தியின் விழிப்புணர்வு**

செங்கல்பட்டு மாவட்டம் காரணை கிராமத்தைச் சேர்ந்த தீபன் சக்கரவர்த்தி தனக்கு சொந்தமான டிசி. நிலத்தை வேற்று இனத்தவரிடமிருந்து மீட்கும் முயற்சியில் நீதி மன்றத்தில் 1992-இல் வழக்குத் தொடுத்தார். பிறகு சாம் தன்னார்வத்தொண்டு நிறுவனத்தின் உதவிகொண்டு, அதை கிராம மக்கள் போராட்டமாக மாற்றி, காரணை கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 633 ஏக்கர் டி.சி. நிலத்தையும் மீட்கப் போராடினார்.

1992-இல் தனது நிலம் தனக்குத் தரப்பட வேண்டும் என்று நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். நிதி இல்லாததால் வழக்கைத் தொடர முடியாமல் கைவிட்டார்.

**அம்பேத்கர் சிலை நிறுவுதலும், தகர்ப்பும்**

பஞ்சமி நில மீட்புக் குழுவும் மக்களும் ஒன்று சேர்ந்து பஞ்சமி நிலத்தை எடுத்துக் கொள்ளும் வழிமுறைகள் பற்றிப் பேசினார் தீபன் சக்கரவர்த்தி. ஒரு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. முதல்படியாக காரணை பஞ்சமி நிலத்தில் 5.10.1994 அன்று டாக்டர் அம்பேத்கர் சிலையை நிறுவுவதென எடுக்கப்பட்ட முடிவைச் செயல்படுத்த ஆரம்பித்தனர்.

தீபன் சக்கரவர்த்தி தனக்குரிய நிலத்தில் சிலை வைப்பதற்காக பஞ்சமி நில மீட்புக் குழுவிற்கு நிலத்தின் ஒரு சிறு பகுதியை எழுதிக் கொடுத்தார். திட்டமிட்டபடி 5.10.1994 அன்று காலை சுமார் 1000 தலித் மக்கள் ஒன்று கூடி அம்பேத்கர் சிலையை நிறுவினர். இந்தச் சிலை நிறுவும் விழா பிற்பகல் 3 மணி வரை நீடித்தது. அதன் பின் பண பலம் படைத்த நிலக் கொள்ளையர்கள் காவல்துறை மூலம் அவர்களை கைது செய்து துன்புறுத்தி சிறையில் அடைத்தனர். அன்று மாலை சுமார் 5 மணியளவில் நில ஆக்கிரமிப்பாளர்கள், அரசு அதிகாரிகள் முன்னிலையில், சுமார் 100 ஆயுதமேந்திய காவலர்கள் வந்து ஒரு மணல் லாரியின் பின்புறத்தால் அம்பேத்கரின் பீடத்தை மோதி உடைத்து சிலையை எடுத்துச் சென்று செங்கல்பட்டு காவல் நிலையத்தில் வைத்தார்கள். அன்றும் அதைத் தொடர்ந்து தலித் மக்களை வேட்டையாடிய காவலர்கள் சக்கரவர்த்தி உட்பட அனைவரையும் சிறையில் அடைத்தார்கள். 22 நாட்களுக்குப் பின்பே இவர்கள் நிபந்தனை ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

**நீதிக்குப் பதில் துப்பாக்கிச் சூடு (10.10.1994)**

தங்களது தலைவர் மாமேதை அம்பேத்கரின் சிலை தகர்ப்புச் செய்தி மாவட்டம் முழுவதும் பரவியது தலித் மக்கள் அனைவரும் கொதித்தெழுந்தார்கள். அம்பேத்கர் சிலையை மீண்டும் அதே இடத்தில் அரசே நிறுவ வேண்டும், பஞ்சமி நிலத்தை மீண்டும் தலித் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரி சுமார் 5000 தலித் பெண்களும் ஆண்களும் செங்கையிலுள்ள மாவட்ட துணை ஆட்சியாளர் அலுவலகம் முன்பாக 10.10.1994 அன்று காலை ஒன்று கூடினர்.

மக்கள் அமைதியாய் அமர்ந்திருக்க பத்து பேர் அடங்கிய தலைவர்கள் குழு துணை ஆட்சியாளரை சந்தித்து மனு கொடுக்கச் சென்றது. இந்த மனுவில் ஐந்து கோரிக்கைகள் இருந்தன.

1. காரணைப் பகுதியில் உள்ள 633 ஏக்கர் பஞ்சமி நிலங்களும் நிலத்திற்குரிய தலித் மக்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

2. அம்பேத்கரின் புதிய சிலை ஒன்றை அரசே சிலையை அப்புறப்படுத்திய இடத்தில் நிறுவ வேண்டும்.

3. தீபன் சக்கரவர்த்தி உட்பட காவலர்களால் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்படுவதோடு அவர்கள் மீது அரசு தொடுத்த வழக்கையும் விலக்க வேண்டும்.

4. நிலத்தை சட்டத்திற்கு விரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவதோடு அவர்கள் மீது வழக்கும் தொடர வேண்டும்.

5. பஞ்சமி நிலத்தைத் திரும்பப் பெறும் தலித் மக்கள் விவசாயம் செய்யும் பொருட்டு அரசு அவர்களுக்கு கடன் வழங்க வேண்டும்.

துணை ஆட்சியாளர் அவர்கள் மக்கள் தலைவர்களைச் சந்திக்கவோ, பேசவோ மறுத்து விட்டார். உதவியாளர்களை அழைத்து மக்கள் தலைவர்களை வெளியேற்றினார். உதவியாளர்கள் மக்கள் தலைவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினார்கள். துணை ஆட்சியாளரைச் சந்திக்கச் சென்ற தலைவர்கள் குழுவில் மூன்று தொழிற்சங்கத் தலைவர்கள், ஒரு முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆகியோர்களும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கள் தலைவர்களுக்கு நேர்ந்த அவமானத்தை நேரில் கண்ட மக்கள் கொதிப்படைந்தனர். கூட்டத்தின் செயலைக் கண்டித்த மக்கள் தலைவர்கள், சாத்வீகமான முறையில் தங்களது எதிர்ப்பைக் காட்டும்படி மக்களுக்குக் கூறினர். எனவே மக்கள் அருகிலுள்ள தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

நேரம் ஆகிக் கொண்டே இருந்தது. பிற்பகல் ஒரு மணியளவில் திரு. கண்ணையன் என்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாவட்ட உதவியாட்சியாளரைச் சந்தித்து ஒரு உடன்படிக்கைக்கு வர முயற்சித்தார். அவரை சந்திக்க உதவி ஆட்சியாளர் மறுத்து விட்டார். அன்றைய நாள் மக்கள் குறை கேட்கும் நாள் என்பது குறிப்பிடத் தக்கது.

பொறுமை இழந்த மக்கள் தாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று ஒருமித்த குரலெழுப்பினர். பிற்பகல் 2 மணி வரை பதிலேதும் இல்லாததால் அப்போது ஏற்பட்ட குழப்பத்தில் சமூக விரோதிகள் சிலர் காவல்துறையினர் மீது கல்லெறிந்தார்கள். ஓர் அரசுப் பேருந்துக்கு தீ வைக்கப்பட்டது. இந்த சமயத்தில் காவலர்கள் மக்கள் மீது திடீரென துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார்கள். சட்டப்படி செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகிய ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை விடுப்பது, தடியடி செய்வது, கண்ணீர்ப் புகை குண்டு வீசுவது, ஆகாயத்தில் சுடுவது, ரப்பர் குண்டுகளை வைத்துச் சுடுவது, முழங்காலுக்குக் கீழ் சுடுவது ஆகிய எதையும் செய்யாமல் மக்களது தலைக்கும் நெஞ்சுக்கும் குறி வைத்துச் சுட்டார்கள். 52 ரவுண்டுகள் சுட்டதாகத் தெரிகிறது.

இதைச் சற்றும் எதிர்பாராத மக்கள் பயத்தில் ஓட ஆரம்பித்தார்கள். ஓடியவர்களை விரட்டி விரட்டிச் சுட்டனர். போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் காவலர்களும், வாகன ஓட்டிகளாக இருக்கும் காவலர்களும் துப்பாக்கியால் சுட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கிச் சூட்டினால் கலவரமடைந்து ஓடிய மக்கள் பக்கத்திலுள்ள மலையில் ஏறி ஒளிந்தனர். சிலர் பக்கத்தில் உள்ள வீடுகளுக்குள் நுழைந்து தப்பிக்க முயன்றனர். காவலர்கள் மலையில் ஏறியும், வீடுகளுக்குள் நுழைந்தும் தடிகளால் தாக்கினர். மிகப் பெரிய கொடுமை என்னவென்றால் அருகிலுள்ள நீதிமன்றத்திற்குள் ஓடிய மக்களை நீதிமன்றத்திற்குள் புகுந்த காவலர்கள் நீதிபதிகளின் கண்களுக்கு முன்பாகவே தாக்கியிருக்கிறார்கள். பலரைக் கைது செய்திருக்கிறார்கள்.

**உயிர் இழந்த தியாகிகள் ஜான் தாமஸ் மற்றும் ஏழுமலை**

காவலர்களின் துப்பாக்கிச் சூட்டால் நெஞ்சிலும் தொண்டையிலும் காயமடைந்த பாப்பநல்லூரைச் சேர்ந்த ஜான் தாமஸ் அன்று இரவு மருத்துவமனையில் இறந்தார். இவர் சாம் நிறுவனத்தில் பணி புரியும் துடிப்புள்ள இளைஞர் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு எழுச்சி மிக்க இளைஞர் குளிப்பாந்தண்டலம் ஏழுமலை. துப்பாக்கிச் சூட்டால் நெற்றியில் காய மடைந்த இவரை கூப்பிடும் தூரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருந்தால் காப்பாற்றியிருக்கலாம். குண்டடிபட்ட ஐந்து மணி நேரங்கழித்தே இவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இந்த இரண்டு இளைஞர்கள் தவிர 15 பெண்கள் உட்பட 32 பேர் காவலர்களின் துப்பாக்கிச் சூட்டால் காயமடைந்தனர். 20 பெண்கள் உட்பட 124 பேரைக் காவலர்கள் கைது செய்தனர்.

**காவலர்களின் அத்துமீறிய வெறிச் செயல்கள்**

■ 10.10.1994 அன்று கைது செய்யப்பட்ட 20 பெண்களையும், 104 ஆண்களையும் இரவு முழுவதும் காவல் நிலையத்திலேயே வைத்திருந்தார்கள். மிகக் கீழ்த்தரமான வார்த்தைகளால் பெண்களையும், அம்பேத்கரையும் காவலர்கள் திட்டினார்கள். இவர்களுக்கு உணவோ, குடிநீரோ வழங்கப்படவில்லை. லத்திக் கம்புகள் உடையும் அளவிற்கு காட்டுமிராண்டித்தனமாக அடித்தார்கள். 65 வயதான அஞ்சலை அம்மாளையும், சுசீலா என்னும் மகளிர் மன்றத் தலைவியையும் துணிகளை விலக்கி மிருகத்தனமாக அடித்தார்கள்.

■ போராட்டத்திற்குச் சம்பந்தமில்லாத உசேன் என்ற முஸ்லிம் லாரி ஓட்டுனரையும் காவலர்கள் கைது செய்து கண்மூடித்தனமாக அடித்து அவருடைய கை, கால் எலும்புகளை உடைத்து விட்டார்கள். இன்று வரை உசேன் படுத்த படுக்கையாகவே உள்ளார். இவர் குடும்பம் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறது.

■ 11.10.1994 அன்று மாலை ஜான் தாமசின் இறுதிச் சடங்குகள் அவருடைய ஊரான பாப்பநல்லூரில் அளவுக்கு மீறிய கெடுபிடிகளுடன் காவலர்களால் நடத்தப்பட்டது. அவருடைய மனைவி மற்றும் பெற்றோர்களைத் தவிர வேறு யாரும் கல்லறை அருகில் அனுமதிக்கப்படவில்லை. பாப்பநல்லூரில் இருந்த நெருங்கிய தோழர்களும்கூட அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த முடியாமல் தடுக்கப்பட்டனர்.

■ 11.10.1994 அன்று மாலை தாமசுக்கு இறுதி அஞ்சலி செலுத்த பாப்பநல்லூருக்குச் சென்ற அருட். திரு. யேசுமரியானை வழியிலேயே காவலர்கள் கைது செய்து, அன்றிரவு முழுவதும் செங்கல்பட்டு காவல் நிலையத்திலேயே வைத்திருந்து, சித்திரவதை செய்தனர். காரணை நிலப்பிரச்சினைக்குச் சிறிதும் தொடர்பில்லாத அவரைத் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடத்தில் இருந்ததாக காவலர்களின் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்து அவரைச் சிறையில் அடைத்தனர். 20 நாட்கள் கழித்து அவரை நிபந்தனை ஜாமீனில் விடுத்தனர்.

■ 12.10.1994 அன்றே குளிப்பாந்தண்டலம் ஏழுமலை இறந்து விட்டார். மக்களின் கோபாவேசத்திற்குப் பயந்த காவலர்கள் 14.10.1994 வரை அவர் மரணத்தை அறிவிக்காமல் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக நாடகமாடினார்கள். 15.10.1994 அன்று நடந்த ஏழுமலையின் இறுதிச் சடங்குகளிலும் காவலர்களின் கெடுபிடிகள் அளவுக்குமேல் இருந்தன.

■ பலமாகக் காயப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்கள் எல்லோருக்கும் காவலர்கள் விலங்கிட்டு அதைக் கட்டிலுடன் பிணைத்துக் கட்டினார்கள். இவர்கள் எல்லோரும் சரியாக குணமடைவதற்கு முன்பே சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

**தியாகிகளின் வீரவணக்க நாள்**

மறைந்த தியாகி ஜான் தாமஸ் மற்றும் ஏழுமலை ஆகிய இருவரும் மறைந்த தினத்தை நாம் வீர வணக்க நாளாக அறிவித்து வருகின்றோம். இந்த நன்னாளில் இழந்த நம் நிலங்களை மீட்டெடுக்க அனைவரும் உறுதிமொழி ஏற்போம்.

■



படிப்பகம்

www.padippakam.com

## சைதாப்பேட்டை, சென்னை
## வீட்டுப் பணிப்பெண்கள் தொண்டு
## இல்லத்தின் 20-ஆம் ஆண்டு
## நிறைவு விழா

**அக்டோபர் 1**

வீட்டுப் பணிப்பெண்கள் தொண்டு இல்லம் துவங்கி 20 ஆண்டுகள் நிறைவு பெற்றதை ஒட்டி நிறைவு விழா எழுத்தாளர் சிவகாமி தலைமையில் நடைபெற்றது. அப்போது அவ்வில்லத்தின் உளவியல் நிபுணர் மூலம் பணிப்பெண்களுக்கு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கவும், சிறந்த பணிப்பெண்களுக்கு பாராட்டு-பரிசு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தாரா கணேஷ் (ஆலோசகர், கார்ப்பரேட் கம்யூனிகேஷன், விநாயகா மிஷன்) பணிப்பெண்கள் சிறு சிறு திருட்டுக்கள் செய்தும் தான் மன்னித்து விட்டதாகவும், தொடர்ந்து அவர்களுக்கு பயிற்சியளிப்பது அவசியம் என்றும் கூறினார். தமிழச்சி என்ற பெயரில் கவிதைகள் எழுதிவரும் ராணி மேரிக் கல்லூரியின் ஆங்கில விரிவுரையாளர் அவர்கள் பணிப்பெண்ணைத் தமது சகோதரி போல் கருதுவதாகவும், அவர்களின் மகிழ்ச்சி பொங்கும் முகங்களைப் பார்த்து பூரிப்படைவதாகவும் நயம்பட பேசினார். இவ்வியக்கத்தின் செயலாளர் ஜீவா கமலக்கண்ணன் வரவேற்புரை வழங்கினார்.

எழுத்தாளர் சிவகாமி தனது தலைமை உரையில் எத்துனைப் பெண்கள் பணிப்பெண்களாக இருப்பது குறித்து உவகை அடைகிறார்கள், கை உயர்த்துங்கள் என்றார். ஒருவர் கூட கை உயர்த்தவில்லை. முற்றிலும் அறியாத வர்களுடன், ஊர்விட்டு ஊர்வந்து, அவர்களை நம்பி அவர்களுக்கு ஏவல் வேலை செய்வது எவ்வளவு கடினம், என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அதுவும் இளம்பெண்கள் எவ்வித சட்டப் பாதுகாப்பும் இல்லாத தொழிலில் தனித்தனியாக உதிரிகளாக எசமானரின் நம்பிக்கையைப் பெற்று அவர்கள் ஆதரவில் வாழ்வது கொத்தடிமைக்கு ஒப்பானதாகும். பல நாடுகளில் தனியார் வீடுகளில் தங்கி பணிவிடை செய்யும் பணிப்பெண் வேலைகளை அரசுகள் தடைசெய்துள்ளன. அல்லது அம்மாதிரி பணிப்பெண்களை வைத்துக் கொள்வதற்கு வளர்ந்த நாடுகளில் உள்ளவர்கள் கணிசமாக சம்பளம் கொடுக்க வேண்டும். ஜப்பான் போன்ற நாடுகளில், வெளிநாட்டிலிருந்து வீட்டு வேலைகளுக்காக பணியாட்களைக்கொண்டு வர வேண்டுமெனில் சில வரையறைகள் உள்ளன. அவர் ஒரு கம்பெனியின் தலைவராகவோ அல்லது உப தலைவராகவோ இருக்க வேண்டும். திருமணமாகி குழந்தைகள் இருக்க வேண்டும். கணவன் மனைவி இரண்டு பேரும் வேலைக்குச் செல்ல வேண்டும். இந்த மூன்று நிபந்தனைகளும் நிறைவேறினால்தான் வீட்டுப் பணிக்கு ஆள்கொண்டு வர அனுமதி. அப்படி வருபவர்களுக்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள். ஆனால் இந்தியாவில் வீட்டுப் பணிப்பெண்களுக்கென எந்த சட்டப் பாதுகாப்புமில்லை. (மகாராஷ்டிர மாநிலம் மட்டும் இதற்கு சட்டம் இயற்றியுள்ளது. இருபது வருடங்களுக்கு முன்பிருந்து பணிப்பெண்கள் போராடத் துவங்கியதன் விளைவு.) கெமிக்கல் கலந்த மருந்துகளை பாத்திரம்-பாத்ரூம் கழுவியதில் பல பணிப்பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளனர். இவர்களுக்கு பயிற்சி கொடுப்பதைப் பற்றி பிறர் பேசுகிறார்கள்? வீட்டு எசமானர்களுக்கு யார் பயிற்சி கொடுப்பது? முதலில் அவர்களுக்கு வேலைக்காரர்களும் மனிதர்கள்தான் என்பதைக் கற்றுக் கொடுங்கள். வீட்டுப் பணிப்பெண்கள் திருடுகிறார்கள் என்று புகார் செய்பவர்கள் யார்? பெரிய செல்வந்தர்கள் - அவர்களின் மோசடித்தனங்கள் , கோடி கோடியாய் சுருட்டும் லஞ்ச லாவண்யங்களைத்தான் பேப்பரில் தினம் தினம் படிக்கிறோமே. ஆகையால் பணமிருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக, அவர்கள் நல்லவர்கள், மனித மாண்பைப் போற்றுபவர்கள் என்று எண்ணிவிட முடியாது. நம்பிக்கையோடு, வேறு வழியில்லாமல் வேலைக்குச் செல்லும் பணிப்பெண்களை எப்படி நடத்துவது என்று முதலில் அவர்களுக்குப் பயிற்சி கொடுங்கள் என்றும், மகாராஷ்டிர மாநிலத்தும்

அக்டோபர் மாத டைரி



படிப்பகம்

பணிப் பெண்கள் எப்படி போராடி ... பெற்றார்களோ அதுபோல் நீங்களும் ஊதியம், வேலை நேரம், மனித உரிமைகளை வலியுறுத்தி போராடுவது அவசியம் என்றார். நன்றி கூறிய சித்ரா கண்ணன் (நிர்வாக அலுவலர், வீட்டுப் பணிப்பெண்கள் தொண்டு இல்லம்) வேலைக்கு வைப்பவர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். பொதுவாக நல்ல முறையில் அவர்களை நடத்துகிறார்கள். பணிப்பெண்கள் அவர்களைப் பார்த்து பல நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார். விழா முடிந்ததும் எழுத்தாளர் சிவகாமியைச் சூழ்ந்த பணிப்பெண்கள் எங்கள் சார்பாக நீங்களாவது பேசினீர்களே என்று நன்றி தெரிவித்தார்கள்.

□□□□□□□□□□□□

**பெரம்பலூர் தலித் நிலவுரிமை**
**ஆலோசனைக் கூட்டம்**

**அக்டோபர் 5**

பெரம்பலூர் மாவட்டத்துக்கான தலித் நில உரிமை ஆலோசனைக் கூட்டம் (டிசம்பர் 12, நில உரிமை கோரிக்கை தினத்தையொட்டி) நடந்தது. கருப்பன், சன்னா, எழுத்தாளர் கனலி, லீட் ராதா ஆகியோர் கலந்துகொண்டு அறிவுரைகள் வழங்கினர்.

□□□□□□□□□□□□

**எசனை, பெரம்பலூர்**
**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

**அக்டோபர் 5**

ஆசிரியர் ராமர் தனது கிராமமான எசனையில் தலித் நில உரிமை கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தார். எசனை காலனியில் தலித் மக்கள் ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. திரளான மக்கள் கலந்து கொண்டனர். எழுத்தாளர் சிவகாமி, கருப்பன், சன்னா, கவிஞர் அகவி ஆகியோர் எழுச்சி உரைகள் ஆற்றினர். திருச்சி சண்முகசுந்தரம், மினர்வா ராஜேந்திரன், லூயிஸ் சித்தார்த் ஆகியோரும் வந்திருந்து தலித் நில உரிமை தொடர்பான கருத்துக்களை வழங்கினர்.

□□□□□□□□□□□□

**லாடபுரம், பெரம்பலூர் மாவட்டம்**
**தலித் நிலவுரிமை கருத்தரங்கு**

**அக்டோபர் 5**

மாலை 5 மணிக்கு லாடபுரத்தில் தலித் நில உரிமை கருத்தரங்கு நடைபெற்றது. அம்பேத்கர் சிலைக்கு மேளதாளத்துடன் மாலையணிவித்து கருப்பன், திருச்சி சண்முக சுந்தரம், லீட் ராதா, அகவி, ராமர், ஆசிரியர் சங்கர், கௌதம சன்னா, எழுத்தாளர் சிவகாமி ஆகியோர் உரையாற்றினர்.

□□□□□□□□□□□□

**தூய சிலுவை ஆலயம்**
**ஆவடி, திருவள்ளூர்.**
**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

**அக்டோபர் 9**

தலித் கிறித்துவர்கள் அதிகமுள்ள ஆவடிப் பகுதியிலுள்ள தேவாலயத்தில் தலித் நில உரிமை கருத்தரங்கிற்கு பங்குத் தந்தை டேனியல் ஏற்பாடு செய்திருந்தார். அவர் வரவேற்க, பங்குத் தந்தை தலித் ஞானசேகரன் பைபிள் வாசகங்களுடன் நில உரிமையை தொடர்புபடுத்தி எழுச்சியுரை ஆற்றினார். எழுத்தாளர் சிவகாமி ஏறக்குறைய மூன்று மணி நேரம் விரிவாக உரையாற்றினார்.

அக்டோபர் மாத டைரி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



தனது உரையை கலந்துரையாடலாக மாற்றியிருந்தார். இறுதியில் பேசிய பங்குத் தந்தை பிரபாகரன், டிசம்பர் 12 கோரிக்கை தினத்தை இப்பகுதி மக்கள் சார்பாக நானே தலைமேயேற்று முன் நிற்பேன் என்றார்.

□□□□□□□□□□□□

**தலித் நிலஉரிமை ஆலோசனைக் கூட்டம்**

**திருச்சி**

**அக்டோபர் 12**

ஸ்ரீரங்கம் லீட் நிறுவனத்தின் அலுவலகத்தில் தலித் நில உரிமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திருச்சி சண்முகசுந்தரம், லீட் ராதா, எழுத்தாளர் கனலி, லீட் வேலுச்சாமி, மினர்வா ராஜேந்திரன் ஆகியோருடன், கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட நில உரிமை குழுக்களும் (36 பேர்) கலந்து கொண்டன. மக்களை அணி திரட்டவும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களுக்கும் திட்டமிடப்பட்டது.

□□□□□□□□□□□□

**புதுக்கோட்டை**

**தலித் நிலவுரிமை ஆலோசனைக் கூட்டம்**

**அக்டோபர் 12**

புதுக்கோட்டை மாவட்டத்துக்கான ஆலோசனைக் கூட்டம் மாலை 3 மணிக்கு பல் மருத்துவர் ஜெயராமன் இல்லத்தில் நடந்தது. அவ்வமயம் சதாசிவம் (CPM), இளங்கோவன், தேவகோட்டை வெரோனிக்கா, ஜான்சி, புதுக் கோட்டை கலைமகள் உள்ளிட்ட 25 பேர் கலந்து கொண்டனர். புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டத்துக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

□□□□□□□□□□□□

**திண்டிவனம்**

**பழங்குடி நிலவுரிமை மாநாடு**

**அக்டோபர் 15**

திண்டிவனத்தில் பழங்குடி நில்வுரிமை மாநாடு நடந்தது. பேரா. பிரபா. கல்விமணி நடத்திய இம்மாநாடு மிகச் சிறப்பாக நடந்தேறியது. திருமாவளவன் தொடங்கி வைக்க, நூல் வெளியீட்டு அரங்கமும், நிலவுரிமை அரங்கமும், சிறப்பாக நடைபெற்றது. எழுத்தாளர் சிவகாமி உரையாற்றினார். பொது அரங்கில் ப்ரதிபா ஜெயச்சந்திரன், கௌதம ரன்னா, குடியரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். விரிவான கட்டுரையை இவ்விதழில் விழி.பா. இதயவேந்தன் எழுதியுள்ளார் காண்க.

□□□□□□□□□□□□

**மேட்டூர், சேலம் மாவட்டம்**

**தலித் நில உரிமை கருத்தரங்கம்**

**அக்டோபர் 16**

வழக்கறிஞர் முத்துசாமி தலைவராகவும், வழக்கறிஞர் பிரதாபன் செயலாளராகவும் உள்ள தலித் மக்கள் இயக்கம் நிலவுரிமை கருத்தரங்கை மேட்டூரில் நடத்தியது. தலித்துகள் 3000 பேர் கலந்து

அக்டோபர் மாத டைரி



படிப்பகம்

www.padippakam.com



கொண்டனர். எழுத்தாளர் சிவகாமி, கௌதம சன்னா, கே.ஏ. குண சேகரன், சரவணன், ஜபருல்லாகான் ஆகியோர் உரையாற்றினர். காத்தமுத்து வரவேற்றார். காலை 11 மணிக்குத் தொடங்கி மாலை 7 வரை கருத்தரங்கம் நடைபெற்றது. தலித் நிலவுரிமை, தனிப் பஞ்சாயத்து, தலித் விடுதலைக் கல்வி, தனியார் துறையில் இட ஒதுக்கீடு. இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீட்டுக்கான கணக்கெடுப்பு இவற்றை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திருவண்ணாமலை

### தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

**அக்டோபர் 18**

'சினம்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் களப்பணியாளர்களுக்கு நில உரிமை குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. இதை அதன் நிறுவனர் பெருமாள் ஒருங்கிணைத்தார். எழுத்தாளர் சன்னா, எழுத்தாளர் சோபகன், சிவகாமி ஆகியோர் பயிற்சியளித்தனர். 100 பெண்கள் கலந்து கொண்டனர்.

### புளியந்தோப்பு, சென்னை

### தலித்துகளுக்கு தனிப் பஞ்சாயத்து

**அக்டோபர் 23**

தனிப் பஞ்சாயத்து கருத்தரங்கை புளியந்தோப்பு அம்பேத்கர் மன்றத் தலைவர் ஏற்பாடு செய்திருந்தார். பாஸ்கர் ராய், ராஜு, தய். கந்தசாமி. எழுத்தாளர் சிவகாமி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். 100 பேர் கலந்து யெகாண்டனர்.

### இக்ஸா மய்யம், சென்னை

### தலித் நிலவுரிமை ஆலோசனைக் கூட்டம்

**அக்டோபர் 26**

சென்னை-எழும்பூர் இக்ஸா மய்யத்தில் சென்னை மாவட்டம், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் டிசம்பர் 12--ஐ தலித் நில உரிமை கோரிக்கை நாளாக அனுசரிப்பதையொட்டி ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 30 பேர் கலந்து கொண்டனர். கருப்பன், சன்னா, அதேகாம் லலிதா, எழுத்தாளர் கனலி, பங்குத் தந்தை டேனியல், கோல்டன் ரமேஷ், வழக்குரைஞர் முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பானாவரம், வேலூர் மாவட்டம்

### தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

**அக்டோபர் 29**

வழக்கறிஞர் மு. வீரராகவன் தலைமையில் பானாவரத்தில் தலித் நிலவுரிமை கருத்தரங்கம் நடைபெற்றது. எழுத்தாளர் கனலி, சோபகன், சன்னா, தக்கோலம் ரகு, வழக்கறிஞர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்டோபர் மாத டைரி



படிப்பகம்

www.padippakam.com

■ சந்திரன்

5

# மாறுவேசம்

எள்ளுக்கு முழிப்பு வந்தது. தன்னுடைய கதையை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்த முயற்சித்த எள்ளுக்கு சிரிப்பு வந்தது. என்னுடைய கனவு. அதில் வரும் பேர்களின் உரையாடல் என்னுடைய தனிப்பட்ட அறிவின் படைப்பு. அப்படியென்றால் முகிலிடம் எதிர்வாதம் செய்தது கனவில் டீச்சராக இருந்தாலும் நினைவில் நான்தான். எள்ளுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

"ஏண்டா பாச்சு, நீ ராத்திரி ஏதோ கனாக் கண்டாயாம். சொப்பனத்திற்கு பலன் எனக்கு முழுசாத் தெரியும். உங்க தாத்தா, அதாண்டா என்னுடைய ஆத்துக்காரர் எனக்கு இதெல்லாம் சொல்லித் தந்திருக்கிறார். சொப்பனத்தச் சொல்லுடா, நான் அதுக்கு விவரம் சொல்றேன்."

முகிலின் தாயார் நச்சரித்துக்கொண்டே இருந்தாள்.

"வந்து... இன்னிக்கு நானும் நம்ப சாரும்..."

"அதுதான் தெரியுமே. நீயும் என் புள்ளையும் யாரோ ஒரு டீச்சரைப் பார்க்கப் போறதா இருக்கீங்க. ஏதோ எம் பையன் உன்னை கேட்ட கேள்விகளுக்கு, அவகிட்ட பதில் கேட்கப்போறீங்க. சரிதான பாச்சு" என்று முகிலின் தாயார் எல்லாம் தெரிந்தவளைப்போல எள்ளைப் பார்த்தாள்.

"ஆமாம்..." எள் ஆச்சரியப்பட்டான். என் வீட்டில் என் அப்பா என்ன செய்கிறார் என்று எங்க அம்மாவுக்குத் தெரியாது. என் அம்மா எல்லா கஷ்டத்தையும் என் அப்பாவிடம் மறைத்து விடுவாள். தெரிந்தால் அடி யார் வாங்குவது! இங்கு என்னவென்றால், முகில் ஒரு பேராசிரியர். அவர் என்ன செய்கிறார் என்று அவங்க பட்டிக்காட்டு அம்மாவுக்குத் தெரிந்து இருக்கிறது. நான் என்ன படித்து விட்டேன். ஆனால் நான் எதையும் என் அம்மாவிடம் சொல்வதில்லை. படிப்புகூட உறவுகளைப் பிரித்து விடுகிறது.

பள்ளியில் எனக்கு இதுவரை புரியாததை சொல்லித் தரும் வாத்தியார், எனக்குத் தெரிந்ததை மட்டுமே தெரிந்து வைத்திருக்கிற அம்மாவை விட உயர்ந்தவர் என்ற நினைப்பு எனக்கு. இது ஏன் முகிலுக்கு மட்டும் ஏற்படவில்லை. முகிலின் குடும்பம் படிப்பையும் ஒரு வேலையாகப் பார்க்கிறது. நாங்கள் மட்டும் படிப்பை பயமாகப் பார்க்கிறோம். ஏன் இப்படி? எள் யோசித்துக் கொண்டே இருந்தான்.

"டேய் பாச்சு, சொப்பனத்தைச் சொல்லுடான்னா, நீ இன்னொரு சொப்பனம் புதுசா காண்கிறாயா?"

கனவை மேம்போக்காக முகிலின் தாயாருக்கு சொல்வதென எள் முடிவெடுத்தான்.

"என்னால் பதில் சொல்ல முடியாத கேள்வி ஒன்றை நம்ம சார் கேட்டார். ரெண்டு பேரும் எங்க டீச்சர் கிட்ட போய் கேட்க முடிவு செய்தோம். கனவில் டீச்சர் வந்து சாருக்கு, எனக்கு ஆதரவாக பதில் சொல்வது போல ஒரு கனவு"

"கனவில் நான் வந்தேனா? நம்ம கோகிலா வந்தாளா?"

எள் சலிப்புடன் "இல்லை" என்றான்.

"டேய் பாச்சு, இந்த வயசுல வரவேண்டிய கனவே வேறடா. கனவுல டீச்சர் வந்தாங்களா? டேய் பாச்சு நீ இனிமேல்பட்டு இந்த முகிலுடன் அதிகமா பழகாதே. அவனுக்கு இவ்வளவு வயசாச்சு. இன்னும் அவன் கனவில் குமரிப் பொண்ணுங்கதான் வந்து போறாங்க. உன் கனவுல உங்க டீச்சர் வந்தாங்கன்னா அது ஒரு தெய்வ சங்கல்பம். இந்த கூலிக்காரப் பசங்க மேலே அருள் வருமே, அதுபோல நம்பளவா அவ்வளவு cheap ஆக போக முடியாது. அதனாலதான் நமக்கு சொப்பனத்திலே இதுபோல தகவல் அருளா வருது. உனக்கு பகவான் support ஆக உள்ளார்னு இதுக்கு அர்த்தம். சீக்கிரம் இவன விட்டுட்டு நெத்தியிலே பகவானை பதிச்சு வைச்சுடுடா " என்று முகிலின் தாயார் உணர்ச்சிவசப்பட்டாள்.

"ஏன் பாட்டி, சாமியிலேகூட கூலிக்காரங்க, பிராமணர்கள்னு தனித்தனியா அருள் வருமா?"

"ஆமாண்டா. இந்த கூலிக்காரங்க மேலே அருள் வந்தா அவங்களாலே தாங்க முடியாதுடா. அதனால அவனுங்க அருள் வந்தா, அது போற வரைக்கும் ஆடுறானுங்க. அருள் மலையேறிய பிறகுதான் உடம்பு தளர்ந்து மூர்ச்சையாகிறார்கள் நம்பளவா அப்படி இல்லடா நம்மகிட்ட எப்போதும் பகவான் இருக்கிறார். நமக்கு தேவையானதை soft ஆக யோசனையில் வந்து சொல்வார். சில நேரம் இதுமாதிரி சொப்பனத்தில் வந்து சொல்வார்." முட்டாள் தனத்தைக்கூட அறிவியல் பூர்வமாக இந்தம்மா விளக்குவதை எள் ஆச்சரியத்துடன் கவனித்தான்."

சட்டென்று எள்ளுக்கு நினைவிற்கு வந்தது. இந்தம்மா முட்டாள்தனத்தை அறிவியல் ஆக்கப் பார்க்கிறார். இவங்க பையன் அறிவியலை முட்டாள்தனமாக்கப் பாடுபடுகிறார். எல்லா சநாதனவாதிகளும் எப்படியிருந்



படிப்பகம்

www.padippakam.com

தாலும் அவர்களின் குணம் மாறவில்லை. எள் தனிமையடைந்தான்.

பஸ்ஸில் முகில், எள் இருவரும் டீச்சரின் ஊர் நோக்கி சென்று கொண்டிருந்தனர். மூன்று பேர் கொண்ட இருக்கை அது. முதலாவதாக ஒரு காவி உடையால் தெரிந்த சாமியார் ஒருவர் சன்னலோரம் உட்கார்ந்திருந்தார். இருக்கையின் கடைசியில் முகில் காற்று வர வேண்டி உட்கார்ந்து கொண்டார். நடுவில் எள். பஸ் வேகமாக போய்க்கொண்டிருந்தது. எள்ளுக்கு முன்பெல்லாம் சாமியார்களைப் பார்த்தால் கோபம் வரும். முகிலைப் பற்றி புரிந்து கொண்டவுடன் எள்ளின் கோபம் பரவலாக்கப்பட்டு விட்டது. இப்பொழுது அந்த பழைய குவித்த கோபம் தோன்றுவதில்லை. எள்ளுக்கு முகில் மீதும் கோபம் தேவையாக இருந்ததால் இட்லி போல குவிந்திருந்த கோபம், தோசைபோல பரந்து விரிந்து விட்டது. தோசை மெல்லியதாக இருந்தாலும், இட்லி அளவிற்கு தோசையிலும் மாவு இருப்பதை யாரால் மறுக்கவியலும்? நம்ம எள்ளுக்கு இட்லி பிடிப்பதே யில்லை. தோசைக்கல் பெரியதாக இருக்கும்போது யாரால் என்ன செய்ய முடியும்? எள் கோபம் குறைவாக அமைதியாக சாமியாருக்கும் முகிலுக்கும் நடுவில் அமர்ந்து வந்தான். பஸ் வழக்கத்திற்கு மாறாக சீராக ஓடிக்கொண்டிருந்தது.

"சாமி, உங்களுக்கு இடம் போதுமானதாக உள்ளதா?" முகில் அக்கறையுடன் கேட்டார்.

"போதும் சார் ரொம்ப தேங்க்ஸ் சார்" சாமியார் முகத்தை அகலப்படுத்தி சிரித்தார். எள்ளுக்கு கோபமாக வந்தது. அதைப் புரிந்துகொண்ட முகில் "எள், இங்க பாருடா நமக்கு பல தத்துவங்களின் மீது படிமானங்கள் இருக்கலாம். அதுற்காக மற்றவர்களின் மத உணர்வுகளில் தலையிடுவது தவறுடா." எள்ளிற்கு இப்பொழுது தோசை அளவிற்கு இட்டிலி கோபம் வந்தது. ஏனோ தெரியவில்லை. அதற்கு எள் ஆடவும் இல்லை. மூர்ச்சையாகவும் இல்லை.

இருவருக்குமிடையே பேச்சு வளர்ந்துகொண்டே சென்றது. அதற்கு வசதியாக சாமியார் எள்ளுக்கு ஜன்னலோர சீட்டை தந்து விட்டார். இருவரும் பேசிக் கொண்டே முரணான விசயத்தில் கூட மனிதர்களை பரஸ்பரம் மதிக்க வேண்டும் என்பதற்காக சண்டை போடாமல் ஒத்துப் போய் சிரித்தனர். எள்ளுக்கு அவர்கள் தன்னைப் பார்த்துதான் சிரிக்கிறார்கள் என்பது தெரிந்தே இருந்தது. ஆம். தெரியாமலா சொன்னார்கள், மதவாதிகளும், கம்யூனிஸ்டுகளும் இந்தியாவில் உள்ள மதப்பிரச்சினைகளை மேஜையின் இருபக்கமும் அமர்ந்து பேசி மகிழ்ந்து வித்தை காட்டுகிறார்கள் என்று. இதை அப்பாவிகள் ரசிக்கிறார்கள். விவரம் தெரிந்தவர்கள் ...?

விவரம் தெரிந்தவர்கள் சேரி சேரியாய்ச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார்கள். தோசை மெல்லியதாக இருப்பதால் சீக்கிரமே வெந்துவிடுகிறது.

பஸ் மிகவும் நிதானமாகச் சென்றுகொண்டிருந்தது. எள் மிகவும் ஆச்சரியமடைந்தான். அவன் ஆச்சரியம் பொய்படும் அளவிற்கு ஓங்கிய சத்தம். பஸ் நிறுத்தப்பட்டது. கண்டக்டர் எல்லோரையும் இறங்கும்படி சொன்னார். மாற்று பஸ் வரலாம், அல்லது போகும் வேறு பஸ்ஸில் உங்களை ஏற்றிவிடுகிறேன் என்று கூறினார்.

"என்னப்பா, கிளம்பும்போதே பஸ்ஸை பார்த்து சரியா எடுத்து வரக்கூடாதா? நம்ம வர்ரப்பதான் இது போல ஏதேனும் நடக்கும்.." இப்படி பல சலிப்பு நிறைந்த வார்த்தைகள்.

"எள், நாம் ஏதாவது வாடகைக் கார் பிடித்து உன் டீச்சர் வீட்டிற்குச் செல்லலாமா?"

"வேண்டாம் சார். பஸ் ரெடியானதுக்கப்புறம் போகலாம்."

"எள், நாம சீக்கிரமா போனால் நிறையப் பேசலாம். நிதானமா திரும்பி வரலாம். நான் வாடகைக் காருக்கு ஏற்பாடு செய்றேன்"

"சார். நீங்க எங்கே போணும்?" எள் கேட்டான்.

"தம்பி, நான் சார் இல்லை. சாமி"

"நான் யாரையும் சாமின்னு கூப்பிட மாட்டேன் சார்"

"அப்படியா தம்பி நீ உங்க டீச்சரை எனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். நான் அவங்கள எப்படி கூப்பிடுவேன்?"

"டீச்சர்னுதான் கூப்பிடணும்"

"எனக்கு அவங்க பாடம் நடத்தாட்டிகூட, அவுங்க உங்க டீச்சர் என்பதால் எல்லோரும் அவர்களை டீச்சர்னுதான் கூப்பிடுவார்கள். இல்லையா?"

"ஆமாம்"

"சிலருக்கு டீச்சராக உள்ளவங்களை நான் டீச்சர்ன்னு கூப்பிட தயாராக உள்ளபோது, பல பேருக்கு சாமியாக உள்ள என்னை நீ ஏன் சாமின்னு கூப்பிடக் கூடாது?"

"உங்க வாதமே தப்பு" என்றான் எள்.

"தம்பி, உங்க டீச்சர் பிறக்கும்போதே டீச்சராகத் தான் பிறந்தாங்களா?"

"இல்லை. ஆனா டீச்சருக்கு படிச்சிருக்காங்கல்ல."

"டியூசன் டீச்சரை அப்ப டீச்சர்னு கூப்பிட மாட்டாயா?"

"கூப்பிடுவேன்"

"அது மட்டும் எப்படி? சரி. அவங்க படிப்புச் சொல்லித் தராங்க. அதனால் அவர் டீச்சர். நானும் கடவுளைப் பற்றி சொல்றேன். பலபேர் கூப்பிடறதாலே அவர் டீச்சர்னா, பல பல பேர் நம்புற, கூப்பிடற நான் சாமியாக இருக்கக் கூடாதா? நான் உன் டீச்சரை, டீச்சர்ன்னு கூப்பிடாட்டி தப்புன்னு சொல்ற நீ, என்னை



படிப்பகம்

www.padippakam.com

மட்டும் சாமின்னு கூப்பிடலனா அது பலருடைய நம்பிக்கையை அவமதிப்பதாகாதா?"

"நீங்க சாமி இல்லை. ஆனா அவுங்க ஒரு டீச்சர்."

"சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருக்காதே. சரியா பதிலைச் சொல் தம்பி"

"ஆமா. இப்ப உங்கள சாமின்னு கூப்பிடச் சொல்லுவீங்க. அப்புறம் கல்லை எல்லோரும் சாமின்னு சொல்றாங்க. அதனால நீயும் சாமின்னு கல்லை எல்லாம் கும்புடுடான்னு சொல்வீங்க. பின்னாடி எல்லோரும் என் கால்ல விழறாங்க. அதனால நீயும் என் காலில் விழுடான்னு சொல்வீங்க. எனக்கு இதெல்லாம் புரியும்."

"தம்பி, உங்க டீச்சரை காய்கறிக்காரர், பால்காரர், லான்டிரிகாரர், அரிசிக்காரர், மளிகை கடைக்காரர் எல்லோரும் டீச்சர்னு கூப்பிட அவுங்க எப்பிடி அனுமதிக்கலாம். உங்க டீச்சர் என்ன அவுங்களுக்கெல்லாம் பாடம் நடத்துறாங்களா?"

"இல்லை. மரியாதைக்காக பொதுவா எல்லோரும் அப்படி கூப்பிடறாங்க."

"ம்... அப்படி வா தம்பி. நானும் அதையேதான் சொல்றேன் நீயும் என் என்னை அதேபோல மரியாதைக்காக சாமின்னு கூப்பிடக் கூடாது?"

"என்னடா எள், மீண்டும் ஒரு புது வழக்கா? உங்க டீச்சர் இன்னும் ஒரு வழக்கில் தீர்ப்பு சொல்லணுமா?"

"சார் வாங்க. இந்த தம்பி என்னை சாமின்னு கூப்பிட மாட்டாராம். நான் மட்டும் அவங்க டீச்சரை, சாரையெல்லாம் மரியாதையா கூப்பிடணுமாம்? எப்படி இருக்குது சார் பாருங்க கதை."

முகில் நெளிந்தார். "இந்த சந்தேகத்தையும் நம்ம எள்ளின் டீச்சரே தீர்த்து வைப்பார். என்ன எள், சரிதானா?"

"சார், எனக்கு பதில் தெரியுது. அதை எப்படி உங்களுக்கு புரிய வைக்கிறதுன்னுதான் யோசிக்கிறேன்."

"அப்ப எங்களை புரியாத மாமண்டைகள் என்று நீ நினைக்கிறாயா? எங்களுக்கு ஒன்றும் நீ புரிய வைக்க வேண்டிய அவசியம் இல்லை. நீ சிறுபிள்ளைத்தனமாக பிடிவாதம் செய்கிறாய். நாங்கள் அதை பெரிய மனது வைத்து பெரிதுபடுத்துவதில்லை. எள், நீ மத்தவங்க உணர்வுகளையும் புரிந்து கொள்ள முயற்சி செய். நீ திருந்துவதற்குள் நாங்கள் நொந்துபோய் விடுவோம் போல இருக்கு."

"சார், நீங்கதான் விசயம் என்னன்னு முழுமையா தெரிந்து கொள்ளாமல் அந்த சாமியாருக்கு சாதகமா பேசுறீங்க."

"ஆ... தம்பி... இதைத்தான் நான் கேட்டேன். நீ என்னை சாமின்னு கூப்பிட்டிருந்தா இவ்வளவு பிரச்சினை வந்திருக்காது. உன் சாரும் மனது இவ்வளவு தூரம் வருந்தி பேசியிருக்க மாட்டார்."

முகிலுக்கு சாமியின் மீது எகத்திற்கு கோபம் வந்தது. அதை அவர் அப்படியே எள் மீது காட்டினார்.

"கயிறை எங்க இழுத்தாலும், நைஞ்சு போன இடத்துலேதான அந்து போகும். இழுக்கிற இடத்தில் அறுந்து போக இது என்ன ரத்த உறவா?"

நட்பு பலம், பலவீனம் பார்த்து அறும் ரத்த உறவு சொன்ன சொல்லை நினைவில் வைத்து மிகச் சரியாக அத்துப் போகிறது.

"என்னடா எள், போற இடத்தில் எல்லோரிடமும் மரியாதை இல்லாம பழகுற. காரணம் இல்லாம வாதம் செய்யுற. உனக்கு சில விசயம் புரியலன்னா கூட வயதிற்கு மரியாதை தாடா. எல்லாம் ஓரளவிற்காவது பிரச்சினை இல்லாமல் நடக்கும்."

"என் சந்தேகத்தைக் கேட்டா, என்னை மத்தவங்க வயதிற்கு மரியாதை தராதவன்னு சொல்றீங்க. எங்க அப்பாவை, தாத்தாவை அந்த சாதிப் பொட்டு பொடிசுங்ககூட பேர் சொல்லி மரியாதை இல்லாம ஒருமையில கூப்பிடுறானுங்க. அந்த அயோக்கியப் பசங்ககிட்ட போய், வயதை காரணம் காட்டி மரியாதை தரச் சொல்லுங்க சார். உங்களுக்கு சாதி இருக்கு, நிலம் இருக்கு. அதனால் அதிகாரமா எல்லோரையும் மரியாதை இல்லாம பேசுற உரிமையும் எடுத்துக்கிறீங்க. நாங்க முனவுனாக்கூட அது அவமரியாதையின்னு கத்துறீங்க..."

எள்ளின் சலிப்பை முகில் புரிந்து கொண்டார். "சரிங்க சார். நீங்க அமைதியா இருங்க. நாங்க திருத்திக் கொள்கிறோம். எங்களை மன்னிச்சு ஏத்துக்குங்க சார்" என்று முகில் எள்ளைப் பார்த்து குத்தலாகச் சொன்னார்.

"சார், நீங்க எங்களை, ஒன்னு காலனிப் பையன்னு (தாழ்த்தப்பட்டவன்) சொல்றீங்க. இல்லாட்டி கடவுளின் பையன்னு (ஹரிஜன்) சொல்றீங்க. ஏன் சார் உங்களபோல சரிசமமான மனிதனின் பையன்னு பார்த்துப் பழகவே முடியாதா?"

முகில் அதிர்ச்சியானார். முகில் காந்தியை மிகவும் மதிப்பவர். கம்யூனிசமும் காந்தியிசமும் ஒன்று என்று நம்புபவர். காந்தி பாசம் மட்டுமே இந்த நாட்டின் தேவையான கம்யூனிசம் என்று செயல்படுபவர். ஹரிஜன் என்ற வார்த்தையை விவதப் பொருளாக்கி காந்தியை விமர்சிப்பதை அவரால் தாங்க முடியவில்லை.

வாடகைக் காரில் நுழைந்தபடி முகில் எள்ளிடம் "தம்பி, வண்டியில் ஏறுகிறாயா? இல்லையா?" என்று கேட்டார்.

"இந்த கட்டையையும் போகிற வழியில கொஞ்சம் இறக்கி விட்டுவிட முடியுமான்னு பாருங்க சார்" சாமியார் தாழ்ந்த குரலில் கெஞ்சினார்.

கார் முகில், சாமியார் மற்றும் எள்ளுடன் நகர்ந்தது.

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# தாழ்த்தப்பட்டோரின் துணிவெளுக்கும் வண்ணார்கள்

இ. ரகுபதி

மாநிலத் தலைவர், தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோரின் சலவைத் தொழிலாளர் சம்மேளனம், கோண்டூர், கடலூர்.

விலங்குகளைப்போன்று வாழ்ந்து வந்த மனிதன் நாளடைவில் உணர்வுபூர்வமாக ஆண் பெண் என்றும், தன்மான உடலுறுப்புகளை மறைத்து வாழ வேண்டுமென்றும் கருதி இலைகளையும், சருகுகளையும், மிருகத் தோல்களையும் ஆடையாக அணிய ஆரம்பித்தான். பிற்பாடு பருத்தி பஞ்சு மூலம் நூல் இழைகளை கண்டு பிடித்து துணிகளை ஆடையாக அணிய ஆரம்பித்தான்.

இந்நிலையில் அந்த துணிகள் இயற்கை பாதிப்பாலும், உபயோகப்படுத்திய முறையாலும் அசுத்தமாகி அழுக்குப் பிடித்து அருவறுப்பாகக் காணப்பட்ட போது, அதைச் சுத்தம் செய்ய வேண்டும், சுத்தம் செய்வதற்கு ஒரு பணியாள் வேண்டுமென்று தோன்றியதால் பிராம்மண, ஷத்திரிய, வைசியர் ஆகிய மூன்று உயர்சாதியினரில் எளியவர்களாக உள்ளவர்களை சோறு போடுகிறோம், தானியம் தருகிறோம் என்று ஆசை வார்த்தைகள் கூறி துணி வெளுத்துக் கொடுக்கும் வேலைக்காரனாக வைத்துக்கொண்டார்கள். பிற்பாடு அவர்களை சலவைத் தொழிலாளி என்று அழைக்க ஆரம்பித்தார்கள். அது சமயம் நான்காம் வருணத்தவரான சூத்திரர்கள் தங்களுக்கும் இவர்கள் துணி வெளுத்துக் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியபோது அதற்கு அவர்கள் மறுத்து விட்டதார்கள்.

வேறுவழியில்லாத சூத்திரர்கள் தங்களில் மிகவும் எளியவரை அச்சுறுத்தி அவர்களை தங்களுக்கு துணி வெளுக்க பணித்தார்கள். மேலும் அவர்களை ஊருக்கு வெளியே சேரிகளில் குடியமர்த்தி விட்டார்கள். அவர்களை மேலும் நசுக்கும்விதமாக அக்காலத்தைய குறுநில மன்னர்களும், ஜமீன்தார்களும் அரண்மனை பணிபாளர்கள் அனைவருக்கும் துணி துவைத்தல், முடிவெட்டுதல் போன்ற பணிகளை, கட்டாயமாக்கிவிட்டனர். `நீ துரும் புக்குச் சமமானவன்` என்று கேவலப்படுத்தி அவர்களை துரும்பர்களாக்கி விட்டனர்.

### துரும்பர்களுக்கு பணிக்கப்பட்ட வேலைகள்

துரும்பர்களுக்கு துணி வெளுத்தல், சவரம் செய்தல், செத்த மாடு அறுத்த கறிகளை பங்கிட்டுக் கொடுத்தல், தோல்களை அருந்ததியர்களிடம் விற்பனை செய்து பணத்தை தோட்டியிடம் ஒப்படைத்தல், யாராவது இறந்து விட்டால் அவர்களின் உறவினர்களுக்கு எழவு செய்தி தெரிவித்தல், இறந்தவர்களின் வீட்டு வாசலை சாணம் தெளித்து சுத்தம் செய்து பெருக்குதல், பாடை கட்டுதல், பிரேதத்தின் உறவினர்கள் வாய்க்கரிசி கொண்டு வரும்போது அவர்களை எதிர்கொண்டு காலில் விழுந்து கும்பிட்டு வரவேற்றல், சவம் இடுகாட்டிற்கு ஊர்வலமாக போகும்போது சவம் சுமந்து செல்பவர்களும், உறவினர் களும் நடந்து செல்ல ஒரு குறிப்பிட்ட தூரம் வழி நெடுக்க நடைப் பாவாடையாக துணிகளை போடுதல், பிணம் கழுவிய இடத்தில் அவிழ்த்துவிட்ட துணிகளை சுத்தம் செய்து மறுநாள் காலை படைப்பதற்கு கொடுத்தல், இறந்தோர்களுக்கு கொள்ளி வைத்தல் ஆகிய வேலைகள் பணிக்கப்பட்டிருந்தன.

### ஒரு பெண் ருதுவானால்

1. ருதுவான பெண்ணின் உதிர துணிகளை வண்ணான் சுத்தம் செய்து கொடுக்க வேண்டும். 2. அந்தப் பெண்ணுக்கு தீட்டு கழிக்கும் வரை மூன்று நாளுக்கு ஒரு முறை மாற்று உடைகள் வண்ணான் தன் சொந்த பொறுப்பில் கொண்டுவந்த கொடுக்க வேண்டும். மாற்று உடைகளை சுத்தம் செய்ய வேண்டும். 3. அந்தப் பெண்ணின் உறவினர்களுக்கு பெண் ருதுவான செய்தியைப் போய் கும்பிட்டு சொல்ல வேண்டும். அதற்கு மாராயம் சொல்லுதல் என்று பெயர்.

### பெண்களுக்கு குழந்தை பிறந்தால்

1. பிரசவமான பெண்ணின் உதிரப்பெருக்கான சேலைகள், உடனிருந்தவர்களின் உடைகள் முதலானவைகளை சுத்தம் செய்து தர வேண்டும். 2. முதல் குழந்தை பிறந்தால் அவர்களின் உறவினர்களுக்கு குழந்தை பிறந்த செய்தியை சொல்ல வேண்டும்.

### ஊதியம்

1. அவர்கள் உண்டு மீந்த பாத்திரங்களில் உள்ள எச்சில் சோறு. 2. ஒரு மாதம் குறுனி. அதாவது ஓராண்டிற்கு 12 மரக்கால் என்று வாய் வழக்கில் சொல்வார்கள். மொத்தத்தில் ஒரு குறுனிகூட ஒரு ஆண்டிற்கு கண்டது கிடையாது. இதுதான் சம்பளம்.

### வாழ்க்கைத் தரம்

1. சொந்தமாக குடியிருக்க குடிசை கிடையாது. அரசு மனைப்பட்டா கொடுத்தாலும் ஊர் நடுவே இருக்கக்கூடாது. உயர்சாதியினர் வீட்டைச் சேர்ந்து இருக்கக் கூடாது என்று சொல்லி அந்த இடத்தில் குடியிருக்க விட மாட்டார்கள். அரசு கொடுத்த பட்டா பயனற்றுப் போகும்.

2. இரவு பகல் இரண்டு வேளையும் பிச்சைக்காரர்கள் போல் வீடுவீடாகச் சென்று யாசித்து, அவர்கள் போடும் எச்சில் சோற்றை வாங்கி உண்டுதான் உயிர் வாழ வேண்டும்.

3. பெண்கள் கற்பிற்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை. பொதுப் பாதுகாப்பும் கிடையாது.

4. ஜனநாயக உரிமைகள் அனைத்தும் மறுக்கப் படுகிறது.

## கோரிக்கைகள்

1. தமிழகம் முழுவதும் உள்ள ஆதிதிராவிட வண்ணார், துரும்ப வண்ணார், அரிஜன வண்ணார், பொலைய வண்ணார், இருள வண்ணார், அருந்ததி வண்ணார், புதிரை வண்ணார், மாடுவெட்டி வண்ணார், உடுக்கை கொட்டி வண்ணார், தோட்டி வண்ணார், கிறித்துவ பா



படிப்பகம்

www.padippakam.com

வண்ணார், பர வண்ணார், பர ஏகாளி, இரவாளி, மதம் மாறிய முஸ்லீம் பர வண்ணார் ஆகிய சாதிகளை புலைய வண்ணார் அல்லது துரும்பர் வண்ணார் என்று அரசு வெளியிடும் சாதிப்பட்டியலில் சேர்த்து பழங்குடியினர் பிரிவில் இணைக்க வேண்டும். மதம் மாறிய கிறித்துவ சேரி வண்ணார்களும், முஸ்லீம் சேரி வண்ணார்களும் இந்த 15 பிரிவுகளில் அங்கம் வகித்தவர்கள் என்பதை வலியுறுத்தி அனைவரையும் பழங்குடிகள் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

2. புதிரை வண்ணார் என்ற சாதி, அரசின் சாதிப் பட்டியலில் இருந்து அறவே நீக்கப்பட வேண்டும். காரணம், இவர்கள் மேட்டுக்குடி வண்ணார்களே.

3. தாழ்த்தப்பட்டோரின் சலவைத் தொழிலாளர் நல வாரியம் என்று தனியாக ஒன்றை நிறுவி அதில் வாரியப் பொறுப்புகள் கொடுக்கப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு நகரத்தைச் சுற்றியும் குறைந்த பட்சம் நூறு குடும்பங்களாக சேர்ந்து வாழும் வகையில் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுக்க வேண்டும்.

5. நடமாடும் இஸ்திரி வண்டிகளும், இஸ்திரிப் பெட்டிகளும் இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும். வங்கிகளில் மானியத்துடன் கூடிய கடன் வசதிகள் செய்துதரப்பட வேண்டும்.

6. கல்விக்கூடங்களிலும், வேலை வாய்ப்பிலும் தாழ்த்தப்பட்டோரின் துணி வெளுக்கும் வண்ணார்களுக்கு 5% இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும்.

# தலித் நிலவுரிமையை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்



5.10.2005 அன்று சென்னை நினைவரங்கத்தின் எதிரில் ஆதித்தமிழர் விடுதலை இயக்கம் மற்றும் தலித் உரிமைக் கூட்டமைப்பு சார்பில் மத்திய, மாநில அரசுகளை கண்டித்தும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோரிக்கைகள் பின்வருமாறு:

- இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தாத சுயநிதி கல்லூரிகளை அரசுடமையாக்கு.
- சமூக நீதிக்கு வேட்டு வைக்கும் உச்ச நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்.
- தனியார் துறை நிறுவனங்கள், பள்ளி, கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த சட்டமியற்று.
- தண்ணீரை வியாபார பண்டமாக்கி, பன்னாட்டு நிறுவனங்கள் உறிஞ்சி கொழுப்பதை தடை செய்.
- மண்ணின் மைந்தர்களான ஆதித்தமிழர் குடும்பங்களுக்கு தலா 5 ஏக்கர் விவசாய நிலம் வழங்கு.
- பஞ்சமி நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு, ஆதித்தமிழர்களிடம் ஒப்படை செய்.
- அனைத்துப் பொது வளங்களிலும் ஆதித்தமிழர்களுக்கு சம பங்கு வழங்கு.
- சமூகத்தின் சரி பாதியான பெண்கள் சமூகத்திற்கு 50ரு இட ஒதுக்கீடு வழங்கு.
- SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்து.

ஆர்ப்பாட்டத்தில் அ. வினோத், கா. ஆனந்தன், அருள்தாசு, இளஞ்செழியன், சுந்தரராசன், இளம்பரிதி, ஜெயா. ரமேசுபாபு ஆகியோர் கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.



படிப்பகம்

www.padippakam.com

# 'ஹைகூ' கவிதைகளில் மனிதம்

■ விழி.பா. இதயவேந்தன்

''புரட்சி எதற்கு?
எங்கள் நிலத்தில்
எங்கள் பலத்தில்
எங்கள் கால்களில்
தங்கி நில்லுங்கள்.

வெல்வோமாயினும் வாழ்வோம்
வீழ்வோமாயினும் வாழ்வோம்
நமது பரம்பரை
போர் புரியட்டும்''

(சேரன் கவிதைகள்)

மனிதன் கற்கால வாழ்முறையிலிருந்து விடுபட்டு கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பேராற்றல் மிக்கவனாக வளர்ந்து வருகிறான். மனித குல வாழ்வில் நாகரீக சூழலுக்கேற்ப அவ்வந்த சமுதாய மக்களின் வாழ்வும் பண்பாடும் பெருமளவில் வளர்ச்சி அடைந்து வந்து கொண்டிருக்கிறது.

நமது தமிழ் கலாச்சார இயக்கத்திலும் மனித வாழ்வு என்பதும், வாழ்வின் ஒழுக்கங்களும் அறநெறிகளும் சங்க கால கவிதைகள் தொட்டு வரையறை செய்யப்பட்டுள்ளன. தமிழின் பல புலவர்களும், கவிஞர்களும் 'மனிதம்' என்பதை உயர்வாயும், அதன் அவசியத்தை வலியுறுத்தியும் ஆங்காங்கே பாடல்களில் பதித்துள்ளனர்.

நவீன கவிதை முயற்சிகளில் சப்பானிய வடிவில் வரவான ஹைகூ பாணிக் கவிதைகளும் பல தெறிப்புக்களோடும் வீச்சுக்களோடும் மனிதம் பற்றிய சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. மனிதம் பேசுவது வெறும் சடங்கல்ல நம் வாழ்நிலையோடு இயைந்த மரபு. இத்தகைய மரபின் தொடர்ச்சியாய்த்தான் மனிதம் எனும் மாண்பினை நாம் உள்வாங்கிக் கொள்ள முடிகிறது.

ஹைகூவைப் பொறுத்தவரையில் கவிஞர்களின் கற்பனை மட்டுமல்ல, சொல்கின்ற விதமும் அணுகுகிற முறையும் வித்தியாசமாகவே உள்ளன.

''ஆடையில்லா சிறுவர்கள்
ஈசல் பிடிக்கிறார்கள்
மேலெல்லாம் சிறகுகள்''

என்னும் மு. முருகேஷின் கவிதை ஆடையின்றி கிடக்கும் எண்ணற்ற சிறார்களின் அவலத்தை நமக்குக் காட்டுகிறது.

கவிஞர் மித்ராவின் கவிதையில்,

''அடிக்க அடிக்க
அதிரும் பறை
தலைமுறைக் கோபம்''

என்னும் கவிதையில் கேட்பாரற்ற ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைக் கண்டு கொள்ளாத இந்த நிர்வாக சீர்கேடுகளை மனித நேயப் பார்வையோடு முன் வைக்கிறது. மேலும்,

''அடம் பிடிக்கும் மழை
விவசாயி அழுத கண்ணீரில்
நனையும் புழுதிக்காடு''

எனும்போது மனித நேய வெளிப்பாடு கவிஞருக்குள் மிகுவதைக் காணலாம்.

கவிஞர் பொன். குமாரின் பல்வேறு தொகுப்புகளில் மனித நேயமிக்கக் கவிதைகளை எழுச்சியோடு படைத்திருப்பதை நாம் படிக்கலாம்.

''வாழ்வளிக்கிறது
பொறுக்கும் சிறுவனுக்கு
உதவாத குப்பை''

எனும் கவிதையில் குப்பை பொறுக்குகிற அளவிற்கு இச்சமூகம் அவனை குப்பைக்கு தள்ளிவிட்டுள்ள நிலைமையை நமக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

கவிஞர் அன்பாதவனின் கவிதை கலவாமான இச்சமூக அமைப்பை இப்படித்தான் விமர்சிக்க வைக்கிறது.

''அமைதியாய் மக்கள்
வெடித்தது கலவரம்
சிலைக்கு செருப்பு மாலை''

முதன்முதலாக கல்லூரிப் பேராசிரியர்கள் மத்தியில் அறிமுகமான ஹைகூ கவிதைகளுக்கென்றே 1973-இல் சென்னையில் மாநாடு நடத்தப்பட்டிருக்கிறது. எழுத்தாளர்கள் சுஜாதா, அமுதபாரதி, அறிவுமதி, மித்ரா, மு. முருகேஷ் என இன்று கல்லூரி மாணவர்கள் மட்டுமல்லாது பள்ளி மாணவர்கள், இளைஞர்கள், உழைப்பாளிகள் வரை இக்கவிதை பாணி பரவத் தொடங்கியிருக்கிறது.

கவிஞர் ஆரிசனின் கவிதையொன்று இப்படி நம்மை நெகிழ வைப்பதை உணரலாம்.

''நெசவாளிகள் வாழ்க்கை
பஞ்சு பஞ்சாய்
பற்றி எரியும் நெருப்பு''

எனும்போது உழைக்கிற எல்லோர் வாழ்க்கையிலும் தொழில் நெருப்பாய் இருப்பதை அறியலாம்.

''தொலைந்துபோன வாழ்க்கை
வயலில் தேடுகிறார்கள்
களை பிடுங்கும் பெண்கள்''

எனும் ஜனநேசன் கவிதையில் பெண்களின் அவலம் நிறைந்த வாழ்வு சுட்டிக்காட்டப்படுகிறது. மணமாகியும் ஆகாமலும் உள்ள பெண்ணியப் பிரச்சினைகளோடு தொடரும் வயலும் வாழ்வும்தான் இன்றைய கிராமப்புற பெண்களின் நிலையாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

''கந்தலைக் கசக்கிக் கட்ட
காசில்லை
வேண்டாம் போர்''

என்கிறது திண்டுக்கல் தமிழ்ப்பித்தன் கவிதை. ஏழ்மையும் வறுமையும் திண்டாடும் நாட்டில் கோடிக்கணக் கில் போருக்கு அழிப்பதையும் ஏழ்மை நிலை இன்னும் மோசமாகிப் போவதையும் நாம் கவனிக்க வேண்டியிருக் கிறது.

கவிஞர் தயா. கவிச்சிற்பியின் ஹைகூ

''தீக்குச்சி உருட்டவில்லை சிறார்கள்
இருண்டு கிடக்கிறது
அவர்கள் வீடு?''

கவிதையில் தொழில் நசிவடைந்தாலும் சரி, தொழிலுக்குப் போக முடியாவிட்டாலும சரி, பாதிக்கும் குடும்பங் களை நினைவூட்டுகிறது. அதிலும் சிறாரின் நிலைமை கள் மனிதத் தன்மையோடு நம்மை அணுகத் தூண்டுகிறது.

மேத்தாசன் எழுதிய கவிதை நம் சமூகத்தில் மண மாகாத எத்தனையோ பெண்களின் நிலையை உணர்த்து கிறது.

''கனம் குறையும் காலண்டர்
கதவோரம்
கல்யாணமாகாத பெண்.''

பெரும்பாலான ஹைகூ கவிதைகள் இயற்கை களைப் பாட ஆரம்பித்து, பின்னர் அதுவே பிரச்சினை களோடு வலம் வரத் தொடங்கியிருக்கின்றன. இவற்றில் சமூகக் கூறுகளும் மனிதநேயக் கூறுகளும் கொண்டு தற்கால படைப்பாளிகள் பலர் எழுதி வருகிறார்கள்.

விழி. பா. இதயவேந்தனின் கவிதைகள் பல இப்படி எழுத்தாக்கம் பெறுவதை கவிஞர்கள் முருகேஷ், அன் பாதவன், பொன். குமார், சீனு. தமிழ்மணி, திருவைக் குமரன்... உள்ளிட்ட பலர் சுட்டிக் காட்டுவது இங்கே நினைவுகூறத் தக்கதாகும்.

''கிராமத்தில் இல்லை வேலை
பட்டிணத்தில் கல் சுமக்கிறான்
படித்த இளைஞன்''

லட்சக் கணக்கானோர் படித்து பட்டமும் பெற்று வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்தும் வேலையற்ற நிலை. கிராமங்கள் பெரும்பாலும் கிராமங்களாக இல்லை. கிராமங்கள் பல நகரங்கள் ஆகிக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு உழைத்தும் வருமானம் இல்லை. வருமானங் கள் வருகிற அளவிற்கு இப்போது விவசாயமும் குறைந்து விட்டது. இத்தகு சூழலில் இவரின் ஹைகூ, சமூகத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

வருணாசிரமத்தின் கடைநிலைப்படியில் உள்ளவர் கள் தீண்டாமைக் கொடுமையால் அவதியுறும் சூழலில் பாவலர் சீனு. தமிழ்மணி போர்க்குணத்தோடு தமது மனித நேயத்தை வெளிப்படுத்துகிறார்.

''தொட்டால் பார்த்தால் அண்டினால்
தீட்டு தீட்டு தீட்டு
தீட்டு கத்தியை''

இதேபோன்று பாவலர் புதுவைத் தமிழ்நெஞ்சன்,

''மலிவுப் பதிப்பாய் அச்சாகும்
குழந்தை இலக்கியங்கள்
சிவகாசியில்''

எனவும், எ.மு. இராசன்,

''சாத்தை விற்றுச் சோத்தேன்
மாடே போகிறது
தானமாக''

எனவும், சோலை. இசைக்குயிலின்

''செய்தித்தாள் படித்தான்
தொடரும் பட்டினிச் சாவை
எண்ணித் துடித்தான்''

என்ற கவிதையும், ஆரிசனின்,

''பொங்கல் இனிக்கவில்லை
கசந்தது
கரும்பின் விலை''

கவிதையும், ம. திலகபாமாவின்

''சுழற்சியில்
உருப்பெற்றது பானை
குயவன் குலைந்தபடி''

கவிதையிலும், நா. கவி. குமாரின்

''விதைத்ததும்
வளர்ந்ததும் பயிர்
விதையாகவே விவசாயி''

கவிதையிலும், நிலா. கிருஷ்ணமூர்த்தியின்,

''மணல் நதியும்
மயானமானது
களவுபோகும் கரையோர மரங்கள்...!''

எனும் கவிதையிலும், பல்லவி குமாரின்

''கஞ்சி பிரியாணி சண்டை
காலடியில் உருண்டு தேடினான்
பசியில் நெசவாளி''

கவிதையிலும் கூட தொடர்ந்து மனிதம் அளவற்று வெளிப்படுவதை அறியலாம்.

கவிஞர் அரிமதி தென்னகனின் கவிதைகள் முழுவதும் சமூக விடுதலை குறித்தான பாய்ச்சலாய் உள்ளது.

''வானத்து மாமழை
பூமிப்பந்தின் விளைச்சல்
எது... எவருடையது...''

என்கிறார். கவிஞர் செந்தமிழினியன், வேறோர் நிலையில் சென்று,

'நீரில் மட்டுமல்ல
நிலத்திலும் தீவுகள்
சேரிகள்'



படிப்பகம்

என முழங்குகிறார். கவிஞர் ஆலாவின்

www.padippakam.com

"சூளைக்குச்

சேறு தூக்கும் சிறார்கள்

பள்ளி மணியோசை"

என்ற கவிதையும், கவிமுகிலின்

"மனிதம் பூப்பதற்கு

சாதிகளையே உரமாக்குவோம்

சமத்துவபுரம்"

என் [illegible]ர், இரா. [illegible] தென்றல் நிலவனின்

"தாய்ப்பால் [illegible]காமல்

தாயைக் கேட்டது

குப்பைத் தொட்டிக் குழந்தை"

எனும் கவிதையும், வலம்புரி லேனா எழுதிய

"தறியெங்கும் நெசவு

சிலந்தி வலை

துடைக்கவும் தெம்பில்லாமல் நெசவாளி"

எனும் கவிதையும், பாரதி வசந்தனின்

"சாதி நெருப்பு எரித்தது

எழுந்த நந்தன்களின் கையில்

புதிய நெருப்பு"

போன்ற கவிதைகளும் கூட நம் மனதை மனிதத்தின்பால் உலுக்கத்தான் செய்கின்றன.

ஹைகூ இலக்கணப்படி பலருக்கு நேரடி அனுபவங்களாகவே கவிதைகள் உள்ளது. பலருக்கு இவ்வித் அனுபவங்கள் கிட்டாமலும் எட்டாமலும் போயிருக்கிறது. இதற்கான கவிஞர்களின் வாழ்நிலையும், வாழ்நிலையின்பால் உள்ள அரசியலும், அரசியல் சார்ந்த சமூக அக்கறையுமே ஹைகூ கவிஞன் உள்ளிட்ட அனைத்து கவிஞர்களின் நிலையாக உள்ளது.

"ஜென் அனுபவம்தான் ஹைகூவின் மையம்" என்கிறார் தஞ்சாவூர்க் கவிராயர். என்றாலும் மனித நேயத்தை தாண்டி, அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டிய நாம் குறைந்த பட்சம் "மனித நேய வெளிப்பாடே ஹைகூவின் உயிர்நாடி" எனும் பேரா. முனைவர் தி. லீலாவதி அவர்களின் கருத்தினை உள்வாங்கிக் கொள்வது கவிதைக்கு மட்டுமல்ல கவிஞனுக்கும் தேர்ந்த கலைஞனுக்கும் அழகு.

காலமெல்லாம் சிறைபட்டுக் கிடக்கிறது
எழும்ப இயலாமல்
கண்ணீரில் மனிதம்.

# பதில்

■ அன்பாதவன்

"எல்லாவற்றையும் மறந்து விடலாம்"

வர்ண வார்த்தைகளால்
இலகுவானப் பதத்தில்
உத்தரவுகளைத் திணிக்கிறீர்கள்...

தழும்புகளைத் தடவும்போது
மறக்க முடியாத படிக்கு
இன்னமும் வலிக்கிறது
காயத்தின் ஆழம்

தன்னிலவின் குளிர்விலும்
உணர்கிறோம்
எமை எரித்த தீயனல்.

இப்போது நினைத்தாலும்
நாசித் திணறும் புகை நெடி.

நதிமணலின் ஊற்றுக்கண் வரை
ஊடுருவிக் கலந்திருக்கும்
குருதியின் ஈரம்

வறண்ட கன்னங்களின் மீது
திடக் கோடுகளாகவே நிலைத்த
கண்ணீர்

இழப்பதற்கு இன்னொரு உயிர்
இன்மையில் மறப்பதெப்படி சாத்தியம்

வலியக் குரலில் பதிவு செய்கிறோம்:

"மறந்து விடாதீர்கள்!
எல்லாக் கேள்விகளுக்கும்
கட்டாயமுண்டு பதில்கள்"

■



படிப்பகம்

www.padippakam.com

■ முனிமா

# கேள்வி பதில்

பொதுவாக வணிகப் பத்திரிக்கைகளில் எழுது பவர்களும், சிறு பத்திரிக்கைகளில் எழுதிக்கொண்டு வணிகப் பத்திரிக்கைகளில் பேட்டி கொடுக்கும் எழுத்தாளர்கள் என்பவர்கள் தலித் எழுத்தாளர்கள் பற்றி என்ன கருத்துக்களைக் கொண்டிருக் கிறார்கள்?

**- ரவீந்திரன், சென்னை.**

தனி வாழ்க்கையில் நேர்மையுடனும் கடமை யுணர்வுடனும் செயல்படுபவர்கள்கூட, சாதி என்று வரும்போது தங்கள் கொடூர முகங்களைக் காட்டுகிறார் கள். தலித் போராளிகளை சாதியவாதிகள் என்று சித்தரிக் கிறார்கள். இவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். ஏழ்மை யில் இருக்கும் தலித்துக்கு படிப்புக்கு உதவி செய்கிறேன் என்று பணம் கொடுத்துவிட்டு, சாதி இந்துக்கள் நல்லவர் கள் என்ற மாயையை ஏற்படுத்துவது போல, தனிப்பட்ட முறையில் சில தலித் எழுத்தாளர்களுடன் நட்புடன் பழகிதான் பொதுவானவன் என்ற பிம்பத்தை ஏற்படுத்திக் கொண்டு தலித் இதழ்களை சாதிய இதழ்கள் என்று பேட்டி கொடுக்கிறார்கள். இவர்களின் மோசடியை அம் பலப்படுத்தும் எழுத்தாளர்களை சாதி சார்ந்து எழுது கிறார்கள் என்று கூறுகிறார்கள். இவர்கள் சாதியவாதி களிலும் மோசமானவர்கள். தலித்துகள் இவர்களைக் குறித்து மிகமிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஆனந்த விகடன் எனும் 'பேசும்படம்' உண்மை யிலேயே சினிமா நடிகைகளை த்ரீ டி-யில் காட்டுகிறது. இத்த னைக் களேபரங்களுக்கு நடுவில் சர்வ அலங்காரங்கள்/செட் அப்பில் கருவாச்சி காவியம் எனும் தொடரை வைரமுத்து எழுதுகிறார்! கருவாச்சி (+ கூட்டல்) காவியமா, அல்லது கருவாச்சி (- கழித்தல்) காவியமா? கருவாச்சியின் காவியமா அல்லது கருவாச்சிக்குக் காவியமா (ஜொள்ளா)? தான் எழுதுவது தமிழின் காப்பிய வரிசையில் வைத்துப் பார்க்கப்பட வேண்டும் என்பதால் அதற்கு கருவாச்சி காவியம் என்று பெயர் சூட்டியிருக்கிறாரா? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் ஒரு தமிழ் மாணவன். விளக்குங்கள்!

**- ஜேம்ஸ், மதுரை.**

ஐயா மாணவரே, இப்போதுதான் கருவாச்சியின் பொடனியில் ஈருவல்லியைக் கொடுத்து ஈர்களை உருவி சொடக்குப் போட்டிருக்கிறார். மேற்கொண்டு என்ன செய்கிறார் என்று பொறுத்திருந்துதான் பாருங்களேன். எப்படியாவது அது காவியமானால் சரி!

குஷ்பு-தங்கர் பச்சான் விவகாரத்தில் விடுதலை சிறுத்தைகள் நுழைந்தது சரிதானா?

**- மாடசாமி, பாபநாசம்.**

பாவம் பூனைகள், தங்களுக்கான அப்பங்களை சரிக்குச் சரி எனப் பங்கிட்டுக்கொள்ள முயற்சிக்கின்றன. இதில் கற்பு-சிவப்பு என்று தராசுகளைத் தூக்கிக் கொண்டு குரங்குகள் நுழைந்தது பழைய கதை. ஆனால் தலித் பெண்கள் என்ன பாவம் செய்தார்கள் - விடுதலைச் சிறுத்தைகளுக்கு? ஆணாதிக்கம் எப்படியெல்லாம் பெண்களைப் பயன்படுத்துகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. குஷ்பு-தங்கர்பச்சான் கிளப்பி விட்ட தூசு அடங்கட்டும். பெண் விடுதலையைப் பற்றி தனியாக விவாதிப்போம். இவ்விதழில் வந்துள்ள ரூத் மனோரமா பேட்டியைப் படியுங்கள். நமது பிரச்சினை எவ்வளவு ஆழமானது, எவ்வாறெல்லாம் அவற்றை அணுக வேண்டியுள்ளது என்பது தெரியும்.

'விஜயகாந்த் மாநாடு' என்ற படம் நூறு நாள்கூட ஓடாது என்கிறார்களே. நிசம்தானா?

**- மோகன், அரக்கோணம்.**

இவையெல்லாம் 'சில்லறை' விவகாரம். சில்ல றையை இறைத்து எவ்வளவு நாளுக்கு படம் ஓட்டுவார் கள்? 'தேர்தல்' எனும் 70 mm திரைப்படம் மே மாதம் ரிலீசாகும். அதுவரை பொறுத்திருங்கள்.

இரவு பத்து மணிக்கு மேல் பட்டாசு வெடிக்கக் கூடாது என்றுகோர்ட் உத்தரவிட்டதைத் தொடர்ந்து மாநகரில் போலீஸ் பட்டாளம் கண்காணிக்கப் போகிறதாம். இது தேவையா?

**- கலைவாணன், சென்னை.**

தலித்துகள் வன்கொடுமைக்கு ஆளாவதையும் இப்படிப் பட்டாளம்போட்டு கவனித்தால் பரவாயில்லை.

தமிழ் செம்மொழி என்று அறிவித்ததினால் தமிழர் களுக்கு பயனேதும் உண்டா?

**- பிரபாகரன், திருத்தணி.**



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் செம்மொழி என அரங்கேறிய இவ்வேளை யில் ஆதித்தமிழர்கள் ரயில்வே தண்டவாளங்களில் கையால் மலம் அள்ளுகிறார்கள். (ஆதித்தமிழரின் போராட்ட அறிவிப்பைக் கவனியுங்கள்.)

சென்ற இதழில் பொன்னார்டு பாத்திமாவின் பேட்டி படித் தேன். மிகச் சிறப்பாக வந்துள்ளது. ஆண்கள் அவரது போராட் டங்களுக்கு எவ்வகையில் உறு துணையாக இருக்க முடியும் என்று கூறியிருந்தால் சிறப்பாக இருந்திருக்குமே?

**- மாசானம், திருத்தணி.**

தனிக் கட்டுரை எழுதப்படும் அளவுக்கு ஆழ மான சிந்தனைக்குரியது உங்கள் கேள்வி. அவரது பேட்டி யில் ஆண்கள் புறக்கணிக்கப்பட்டதாக உணர்த்தி யிருப்பது அதன் சிறப்பு. சிந்திப்போம். விவாதிப்போம்.

ஏழைகளுக்கு நிலம் பகிர்ந்தளிப்பதின் மூலம் இந்தியாவின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா?

**- யோகவள்ளி, செந்துரைப்பாக்கம்.**

தற்போது ரேஷன் மூலம் அரிசி வழங்க மத்திய அரசினால் ரூ.11,000 கோடி செலவு செய்யப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து நெல் வாங்கி, ஆலைகளில் அரைத்து, மாதக் கணக்கில் சேமிப்புக் கிடங்கில் சேமித்து வைத்து, மருந்தடித்து பாதுகாத்து, ரேஷன் கடைகள் மூலமாக அட்டைதாரருக்குப் பகிர்ந்தளிப்பதற்கு இத்தொகை செலவிடப்படுகிறது. இதில் ரூபாய்க்கு 13 பைசா மட்டும்தான் தானியத்தின் விலை. மீதி கிடங்கு கள், அரைவை ஆலைகள், போக்குவரத்து, அரசு ஊழியர் கள் சம்பளம் எனச் செலவிடப்படுகிறது. இத் தொகையை நிலத்தை பகிர்ந்தளிக்கவும், விவசாய அபிவிருத்திக்கும் செலவிட்டால் தற்போது விளைவிப்பதை விட அதிக அளவில் நெல் மட்டுமன்றி பலவகை தானிய உற்பத்தி செய்யலாம் என்பதில் என்ன கருத்து வேறுபாடு இருக்க முடியும்? பெரும்பாலான விவசாயக் கூலிகளை நிலத்தி லிருந்து பிரிப்பதற்காகத்தான் இத்தொகை தற்போது செலவிடப்படுகிறது.

இந்தியாவில் நில உச்சவரம்பு சட்டத்தில் அதிக பட்சமாக 5 பேர் கொண்ட குடும்பம் 45 ஏக்கர் (15 தர ஏக்கர்) வைத்துக் கொள்ளலாம் என்று உள்ளது. நாற்பது வருடங்களுக்கு மேலாகி விட்டது இச்சட்டம் அமலுக்கு வந்து. இதற்குள் இந்த நிலம் குடும் பத்தினர் எண்ணிக்கை பெருகியதன் காரணமாக பலருக்குப் பிரித்தளிக்கப்பட்டிருக்கலாம். தற்போது தலித்துகளுக்கு நிலம் வழங்க உச்சவரம்பைக் குறைத்தாலும், போதிய நிலம் கிடைக் குமா என்பது சந்தேகமே. உங்கள் கருத்தென்ன?

**- ஆரோக்கியமேரி, பெண்ணாடம்.**

குடும்பத்தினர் எண்ணிக்கை மூன்று நான்கு தலை முறையில் விரிவடைந்திருக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் எல்லோரும் விவசாயத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள் என்றோ அல்லது விவசாயத்தை நம்பித்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றோ சொல்லிவிட முடியாது. ஆகையால் நில உச்சவரம்பு என் பதை விவசாயத்தை மட்டும் நம்பியிருப்பவர்களைக் கொண்டே தீர்மானிக்க வேண்டியுள்ளது. விவசாயத்தை மட்டும் நம்பியிருப்பவர்களே நிலத்தை சிறப்பாக பயன்படுத்த முடியும். தொடர்ந்து விவசாயம் செய்யாமல் தரிசாக போட்டு வைத்திருந்தால் தேசத்தின் வருவாய் குறையும். இதனடிப்படையிலும் இதைப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. மேலும் நில உச்சவரம்பு சட்டம் அறக் கட்டளை/கோவில் நிலங்களுக்கு தற்போது பொருந் தாது. இவற்றிற்கும் உச்சவரம்பை அமல்படுத்துவதன் மூலம் போதிய நிலங்கள் பெற முடியும். தலித்துகளில் எழுபது சதம் பேர் விவசாயத்தை - நிலத்தை நம்பி வாழ்க்கை நடத்தும்போது, நிலம் பற்றிய மறுபரி சீலனையைத் தவிர்க்கவே முடியாது.

## 'விஜயகாந்த் மாநாடு' என்ற படம் நூறு நாள்கூட ஓடாது என்கிறார்களே!

அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளில் விவ சாயிகள் வேறு தொழில்களுக்கு ஈடாக வருமானம் பெறு வது பெரிய பெரிய பண்ணைகள் மூலமாகத்தானே. அப்படியிருக்கும்போது நிலத்தை இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் எனத் துண்டு போட்டால் எப்படி கட்டுபடி யாகும்?

**- ரகமத்துல்லா, திருவண்ணாமலை.**

அமெரிக்க நிலப்பரப்பு அதை அனுமதிக்கிறது. அமெரிக்கா மற்றும் ஜெர்மனியில் விவசாயப் பொருட் களின் அதிக உற்பத்தியும், அதன் விளைவான தானியங் களின் தேக்கமும் அவ்வரசுகளுக்கு வேறு விதமான பிரச்சினைகளைக் கிளப்புகின்றன. நிலத்தை விவசாயம் செய்யாமல் சும்மா போட்டு வைத்திருக்கும் விவசாயிக்கு 'நீல விவசாயம்' என்ற பெயரில் சும்மாவே வைத்திருக்கச் சொல்லி மான்யம் வழங்குகிறார்கள். ஜப்பான் போன்ற நாடுகளில் நிலம் குறைவு. தனிநபர் நிலத்தின் அளவு வேறு நாடுகளைக் காட்டிலும் மிகமிகக் குறைவு. ஆனால் அந்நாடு உணவுத் தன்னிறைவு பெற்றுள்ளது. அங்குள்ள விவசாயிகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரிசி இறக்கு மதியைத் தடை செய்திருக்கிறார்கள். ஆகவே நாட்டின் கொள்கையே நிலத்தையும் விவசாயத்தையும் தீர்மானிக் கிறது. நமது அரசுகளின் நிலக் கொள்கை என்பது தலித் விரோதக் கொள்கை. உற்பத்தி, பங்கீடு இவற்றின் அடிப் படையில் நிலக்கொள்கை தீர்மானிக்கப்படவில்லை என்பதே உண்மை. ■



படிப்பகம்

www.padippakam.com

# முத்தள் பகுதி

நான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். என்னுடைய குடிசை எரிந்து விட்டது. இது குறித்து வாழப்பாடி தாசில்தார் அவரிடம் சர்டிபிகேட் கேட்டுச் சென்றேன். இதுவரை சர்டிபிகேட் வாங்க முடிய வில்லை.

**- முருகன், வாழப்பாடி காலனி, மேட்டூர், சேலம் மாவட்டம்.**

*ஆசிரியர் குறிப்பு:*

*வாழப்பாடி வட்டாட்சியர் மெகபூப் அலிக்குத் தொடர்புகொண்டு ஆவண செய்யுமாறு வேண்டுகோள் வைக்கப்பட்டது.*

•••

நான் ஒரு தலித். கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவன். அரசின் கவின்கலைக் கல்லூரியில் மாணவன். திரு. கிருத்துதாசு காந்திதான் என் கல்லூரிக் கட்டணத்தைச் செலுத்தியவர். ஏனெனில் அந்தளவுக்கு எனக்கு வசதியில்லை. இந்நிலையில் எங்களுக்கு இரண்டரை சென்ட் நிலம் உள்ளது. அதை அளந்து பட்டா கொடுக்கவும், வருமானச் சான்றிதழ் கொடுக்கவும் கால தாமதம் செய்கிறார்கள். நீங்கள் தலையிட்டு எனக்கு உதவி செய்ய வேண்டும்.

**- அருண் குமார், அரசு கவின்கலைக் கல்லூரி, சென்னை.**

*ஆசிரியர் குறிப்பு:*

*கடலூர் மாவட்ட வருவாய் அலுவலரைத் தொடர்புகொண்டு அவரது நிலம் அளக்க ஏற்பாடு செய்யப்பட்டது.*

•••

27 ஆண்டுகளாக பணிபுரியும் அரக்கோணம் ராம்கோ தொழிலாளர்களுக்கு (70 பேர்) பணி நிரந்தரம் செய்ய 10 ஆண்டுகளாக வலியுறுத்தியும் எவ்வித பயனும் இல்லை. (இதில் நீங்கள் அக்கறை கொண்டு தொழிலாளர் ஆணையரை ராம்கோ நிறுவனத்தினருக்கு தகுந்த அறிவுரை வழங்கும்படி உதவி செய்ய வேண்டும்.) மேலும் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள், மருத்துவ வசதி, கேண்டீன் வசதி, ஊக்கத் தொகை, போனஸ், பஞ்சப்படி, விபத்துக் காப்பீடு, இரவு பணிப்படி ஆகிய எதுவும் தருவதில்லை.

**D. அரி, தலைவர், ராம்கோ தொழிலாளர் நலச் சங்கம், பதிவு எண் 63/03, அரக்கோணம்.**

*ஆசிரியர் குறிப்பு:*

*இவர்களது விண்ணப்பம் தொழிலாளர் ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, ஆணையர் தொழிலாளர் தலைவரைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் மு. வீரராகவன் தொழிற்சங்கத்தினருடன் ஆணையரைச் சந்தித்துள்ளார்.*

•••

நாங்கள் கடந்த ஐந்து ஆண்டு காலமாக மகளிர் சுய உதவிக் குழு நடத்திக்கொண்டு வருகிறோம். 52 பழையனூர் புல எண் 156-7இல் 2 ஏக்கர் நிலம் உள்ளது. இது தரிசாக இருக்கிறது. இதை எங்கள் மகளிர் குழுவுக்கு அளிக்க ஆவண செய்ய வேண்டுகிறோம்.

**- முனியம்மா, தலைவி, தாமரை மகளிர் சுய உதவிக் குழு, பழையனூர், திருத்தணி.**

*ஆசிரியர் குறிப்பு:*

*இவ்விண்ணப்பம் மாவட்ட ஆட்சியருக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.*

•••

எங்கள் ஊரான கோட்டப்பாளையத்தில் சுமார் 3000 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் உள்ளன. நாங்கள் அனைவரும் தினக்கூலிகள். சாதாரண குடிசை வீடுகளில் வசித்து வருகிறோம். எங்களுக்கு என்று பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு எந்தவித வசதி வாய்ப்புகள் இன்றி துயரப்பட்டு வருகிறோம். எங்கள் கிராமத்தில் சர்வே எண் 154/4 ஏக்கர் 2.15 இடம் சொந்தமாக உள்ளது. மேற்கண்ட இடத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையால் கட்டிக் கொடுக்கப்படும் சமுதாய நலக்கூடம் அமைத்திட ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**- கு. மாணிக்கவாசகம், தலைவர், அண்ணல் அம்பேத்கர் இளைஞர் முன்னணி, கோட்டப்பாளையம் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம்.**

*ஆசிரியர் குறிப்பு:*

இவ்விண்ணப்பம் ஆதிதிராவிடர் நலத்துறை செயலருக்கு உரிய பரிந்துரைகளுடன் அனுப்பப் பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

•••

சிறுவள்ளூர் காலனிவாசிகளான சதானந்தம் மற்றும் தியாகராஜன் என்ற தலித் இளைஞர்கள் 17-9-2005 அன்று மண்ணெண்ணெய் வாங்குவதற்காக நியாயவிலைக் கடையில் வரிசையில் நின்று கொண்டிருந்த போது, சாதி இந்துக்களான பாபு, குப்பன், அண்ணாமலை, ஜெய்சங்கர், பாஸ்கரன் ஆகியோர் வரிசையில் நிற்காமல் நேரடியாகச் சென்று மண்ணெண்ணெய் வாங்க முயன்றனர். எதிர்த்துக் கேட்டதற்கு உயர்சாதி இந்துக்கள் அனைவரும் ஒன்றுகூடி `பறநாய்களான உங்களுடன் வரிசையில் நின்று உங்களைத் தொட்டுக் கொண்டு நிற்பதா' என்று கூறி சரமாரியாக அடித்த தோடு, மண்ணெண்ணெய் பேரல் மூடியை திறக்கும் கம்பியால் அடித்து பலத்த காயத்துக்குள்ளாக்கினர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இந்த இளைஞர்களை அடித்துக் காயப்படுத்திய உயர்சாதி இந்துக்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் மோகன் என்ற வழக்கறிஞர் உதவியுடன் காவல்துறை கண்காணிப்பாளரிடம் முறையிட்டனர். ஆனால் காவல் துறையோ அடிபட்ட இளைஞர்கள்மீதே கடுமையான தண்டனைக்குரிய வழக்குகளை பதிவு செய்து கொடுமை செய்கின்றனர். எனவே சாதிப்பெயரால் திட்டி, ரத்த காயத்துக்குள்ளாக்கிய சாதி இந்துக்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்வதோடு, தாக்கப்பட்ட தலித் இளைஞர்கள் மேல் போடப்பட்ட வழக்குகளையும் வாபஸ் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**– கிராம பொதுமக்கள், சிறுவள்ளூர் காலனி, போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.**

*ஆசிரியர் குறிப்பு:*

***மேற்படிவிண்ணப்பம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கும், காவல்துறை கண்காணிப்பாளருக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளதோடு தொடர்பு கொள்ளப்பட்டும் உள்ளனர்.***

•••

திருச்சி விமான நிலையம் அருகில் உள்ள செம்பட்டு கிராமத்தில் தலித் மக்கள் குடியிருப்புக்காக, 42 கொட்டப்பட்டு கிராம புல எண் 227/4-0.64, 229/1-1.64, 228-1.23, 279/1-0.57, 279/2-0.47 ஆக கூடுதல் ஏக்கர் நிலங்களை கடந்த 22-3-1991ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினரால் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 4-ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கையின் மூலம் மனுவில் கண்டுள்ள நிலங்களை கையகப்படுத்தியுள்ளது. ஆனால் 150 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் சுமார் 300 தலித் குடும்பங்கள் குடியிருப்பு வீட்டு மனைப்பட்டா வழங்கக் கோரியும், மின்சாரம் மற்றும் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்ந்து வரும் தலித்துகளுக்கு அடிப்படை வசதிகள் செய்துதரக் கோருகிறோம்.

**– ஆ. குருராஜ் மற்றும் பொது மக்கள், செம்பட்டு, விமானநிலையம் அஞ்சல், திருச்சி.**

*ஆசிரியர் குறிப்பு:*

**மேற்கண்ட விண்ணப்பம் மாவட்ட ஆட்சியருக்கும், இதர தொடர்புடைய அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.**

•••

2004-05 ஆண்டு நுழைவுத் தேர்வின் மூலமாக அரசு இட ஒதுக்கீட்டு அடிப்படையில் சேலம் மத்திய சட்டக் கல்லூரியில் சேர்ந்துள்ளேன். எங்களுக்கு உயர் நீதிமன்றம் நிர்ணயித்துள்ள கல்விக் கட்டணம் ரூ.4,500/- மட்டுமே. ஆனால் நிர்வாகமோ இதர மாணவர்களைப் போலவே ரூ.22,000/- கட்டச் சொல்கின்றனர். மேலும் எங்களுக்கு வழங்கப்படக்கூடிய ரூ.6500 சிறப்புக் கடனும் தரப்படுவதில்லை. எனவே நீங்கள் இதில் தலையிட்டு ஆவன செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– க. ஆனந்தன், மத்திய சட்டக் கல்லூரி, சேலம்.**

*ஆசிரியர் குறிப்பு:*

***இது சம்பந்தமாக கல்வித் துறை செயலர் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஆகியோருக்கு விவரங்கள் மேல் நடவடிக்கைக்காக தெரிவிக்கப்பட்டுள்ளது.***

•••

நான் திட்டக்குடி பெருமாள் ரோடு பொன்னுசாமி நகரில் குடியிருந்து வருகின்றேன். சுமார் 60 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறேன். திட்டக்குடி பேரூராட்சிக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை வீட்டு வரி செலுத்தி வருகிறேன். இந்த இடத்தை காலி செய்யும்படி அரசு அதிகாரிகள் தொந்தரவு செய்து வருகிறார்கள். எங்களுக்கு இந்த இடத்தை விட்டால் வேறு இடம் கிடையாது. ஆகையால் இந்த இடத்தை பட்டா செய்து கொடுக்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

**– அ. மணி, 58 பொன்னுசாமிநகர், பெருமாள் ரோடு, திட்டக்குடி தாலுகா.**

*ஆசிரியர் குறிப்பு:*

*தங்கள் விண்ணப்பம் கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.*



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக பழங்குடியினர் நிலவுரிமை

■ சிவகாமி

நிலம், விதம் விதமான மக்கள் தொகுதிக்கேற்ப, அந்தந்த இடத் திற்கேற்ப, வித்தியாசமான அர்த்தங்களையும் மதிப்பீடுகளையும் கொண்டுள்ளது. சென்னை போன்ற நகரத்தில் ஒரு சிறிய தோட்டத்துடன் கூடிய வீட்டைக் கட்ட முனைந்த நண்பர் ஒருவரிடம் கட்டிட ஒப்பந்தக்காரர் சொன்னார்: "நான் கணக்குப் போட்டதில் உங்கள் தோட்டத்தில் விளையும் ஒரே ஒரு கத்திரிப் பிஞ்சின் விலை ஐம்பது ரூபாயைத் தாண்டுகிறது. பேசாமல் அந்த இடத்தில் இன்னொரு வீட்டைக் கட்டி வாடகைக்கு விடுங்கள்" என்றார். ஒரு கட்டிட ஒப்பந்தக்காரருக்கு நிலம் பணம் காய்க்கும் மரமாகக் காட்சியளிப்பது தவிர்க்க முடியாதது. ஆனால் நிலத்தின் மதிப்பு கூடிக்கொண்டே செல்லும்போது, பழங்குடி மக்களின் வாழ்வும், மதிப்பும் துச்சமாகக் கருதப்படுகிறது. இல்லா விட்டால் ஒரிசா பழங்குடி நிலங்கள், அந்நிய முதலீட்டுக் கம்பெனி தயாரித்து உள்ளூர் செல்வந்தர்கள் உலா வரும் சொகுசுக்கார்களை நிரப்பும் பெட்ரோல் கிணறுகளாக மாற்றப்படும் நிலை வந்திருக்குமா? அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இயற்கையோடு ஒட்டிப் பிறந்த பழங்குடி மக்களின் வாழ்வாதாரமான சேர்வராயன் மலைகள் காப்பி, தேயிலைத் தோட்டங் களாகத்தான் மாறியிருக்குமா? நிலத்தின் மதிப்பை முடிவு செய்யும் பொருளாதார நிபுணர்களும், அவர்களின் பின்புலமாக விளங்கும் பழங்குடி அல்லாதாரின் அரசும் பழங்குடி மக்களை எந்த துலாக்கோலில் நிறுத்தி அவர்தம் மதிப்பை முடிவு செய்யும்?

## I. தமிழகத்தில் பழங்குடிகள் சில விவரங்கள்

பழங்குடிகள் உப்பையும், உடைகளையும் தவிர தங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் தாங்கள் வாழ்ந்த நிலங்களிலிருந்து பெற்று பொருளாதாரத் தன்னிறைவு கொண்டிருந்தனர். பதினாறாம் நூற்றாண்டுக்கு முந்தைய வரலாறு இது. ஆனால் இன்றோ, அவர்கள் தங்கள் தேவைகள் அனைத்திற்கும் பிறரைச் சார்ந்திருக்கும் நிலை உள்ளது. இது எதனால், எப்படி நடந்தது?

இந்த விவரங்களுக்குச் செல்லுமுன், ஓரளவு தமிழகப் பழங்குடி மக்களின் வகைப்பாடும், வாழ்க்கை முறையும் பற்றி சுருக்கமாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

தமிழ்நாட்டில் தோடர், கோத்தர், குறும்பர், பனியர், இருளர், காட்டுநாய்க்கன் போன்ற மிகப் பழமையான ஆறு வகைப் பழங் குடியினரும், மலையாளி, காடர், மலசர், மலைமலசர், கானிக்காரன், குறிச்சன், மலைவேடன், ஊராளி, குருமன் உள்ளிட்ட 36 வகையான பழங்குடிகளும் வசிக்கின்றனர். இவர்கள் தமிழகத்தின் 13 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். 1991-ஆம் ஆண்டு கணக்குப்படி, தமிழக பழங்குடி மக்களின் ஜனத்தொகை 5,74, 194. இதில் ஆண்கள் 2,93,012, பெண்கள் 2,81,182. தமிழக மொத்த ஜனத் தொகையில் பழங்குடி மக்களின் எண்ணிக்கை 1.02%. பழங்குடி இன வகைப்பாடு, மக்கள் தொகை, பாரம்பரியத் தொழில், அவர்களது முக்கியப் பிரச்சினைகள் இவற்றை கீழே உள்ள அட்டவணையில் காண்போம்.

அட்டவணை

| வ. எண் | வகைப்பாடு | மக்கள் தொகை | வசிப்பிடம் | பாரம்பரியத் தொழில் | நாடோடி/ நிலைத்த வாழ்வினர் | முக்கியப் பிரச்சினை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | அடியன் | 913 | தமிழகம் மற்றும் கேரள எல்லைப் பகுதிகள் | வன விளைபொருட்-களைச் சேகரித்தல் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 2. | அரநாடன் | 140 | சென்னை, திரு-நெல்வேலி, | மருத்து-வம் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 3. | எரவல்லன் | 1,108 | பொள்ளாச்சி, உடுமலைப்-பேட்டை மலைப்பகுதி | மலை மற்றும் வன விளை-பொருட்களை சேகரித்தல் | மலைவாழ் மக்கள் | அடையாளம் இழப்பு மற்றும் வன விளை-பொருட்களை சேகரிக்கத்தடை |



படிப்பகம்

www.padippakam.com

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 4. | இருளர் | 1,05,757 | தமிழ்நாட்டில் 17 மாவட்டங்கள் | வேட்டையாடுதல் மற்றும் உணவுப்பொருள் சேகரித்தல் | நிலைத்த வாழ்வினர் | ஆந்திராவிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் இருளர்கள் என்று சொல்வது கொத்தடிமை பிரச்னை, கடன் பிரச்னை, இனச்சான்று பெறுவதில் சிக்கல் |
| 5. | காடர் | 760 | கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா | வன விளைபொருட்களைச் சேகரித்தல் | வனப்பகுதியில் நிரந்தரமாய் வாழ்ந்தவர்கள் | அடிப்படை வசதியின்மை, வனத்துள் நுழைய தடை, |
| 6. | சம்மாரா | 524 | தமிழகம் மற்றும் கர்நாடக எல்லைப் பகுதிகள் | தச்சு வேலை | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 6. | காணிக்காரன் | 3,698 | கன்னியாகுமரி திருநெல்வேலி | மீன்பிடித்தல், வன விளைபொருட்களை சேகரித்தல் | நிலைத்த வாழ்வினர் | குறைந்த படிப்பறிவு மற்றும் மொழி அறியாமை |
| 7. | கனியன் | 1,038 | கன்னியாகுமரி திருநெல்வேலி | ஜாதகம் கணிப்பவர் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 8. | காட்டு நாயக்கன் | 26,383 | நீலகிரி மாவட்டத்தைச் சேர்த்து 13 மாவட்டங்கள் | வேட்டையாடுதல் வன விளைபொருட்கள் சேகரித்தல் | பன்றி வளர்க்கும் நிரந்தரக் குடியிருப்பினர் | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 9. | கொச்சு வேலன் | 43 | தமிழகம் மற்றும் கேரள எல்லைப் பகுதிகள் | ஜாதகம் கணிப்பவர் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 10. | கொண்ட காப்பு | 1,624 | ஈரோடு, சேலம், கோயமுத்தூர் | இடம் மாறி விவசாய வேலை | நாடோடி | நிலம் இழப்பு |
| 11. | கொண்டா ரெட்டி | 31,526 | ஈரோடு, சேலம், திருநெல்வேலி, வேலூர் | விவசாயம், வன விளைபொருட்கள் சேகரித்தல் | அரை நாடோடி | நிலம் இழப்பு வனத்துள் நுழைய்த் தடை |
| 12. | கோரகன் | 420 | தமிழக-கர்நாடக எல்லைப் பகுதிகள் | கொல்லர் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 13. | கோத்தர் | 603 | நீலகிரி | கொல்லர் | ஏழுமந்துகளில் வாழ்பவர்கள் | தோடர்களோடு தீண்டாமைப் பிரச்சினை, வேலையின்மை |



படிப்பகம்

www.padippakam.com

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 14. | குடிய மேலக்குடி | 91 | திருநெல்வேலி, கன்னியாகுமரி | குயவர் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 15. | குறிச்சன் | 7,159 | திருநெல்வேலி, தேனி, தமிழக-கேரள எல்லை | வன விளை பொருட்கள் சேகரித்தல் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல், வனத்துள் நுழைய தடை |
| 16. | குறும்பர் | 4,353 | நீலகிரி | தொழிலுக்காக இடம்பெயர்தல், வன விளைபொருள் சேகரித்தல் | நிலைத்த வாழ்வினர் | நிலம் அந்நியமாக்கப் பட்டது |
| 17. | குருமன் | 14,932 | தருமபுரி, வேலூர் | ஆடு மேய்த்தல், கம்பளி ஆடை தயாரித்தல் | நிலைத்த வாழ்வினர் | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 18. | மஹா மலசர் | 238 | கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் | பொருட்கள் சேகரித்தல் | நிலைத்த வாழ்வினர் | வன விளை வனப்பகுதியில் நுழைய நுழைய தடை விவசாயத்திற்கு நிலம் வேண்டுதல் |
| 19. | மலை அரையன் | 470 | திருநெல்வேலி தேனி | வன விளைபொருட் கள் சேகரித்தல் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 20. | மலை பண்டாரம் | 1,026 | திருநெல்வேலி, தேனி | விளைபொருட் கள் சேகரித்தல் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 21. | மலை வேடன் | 7,098 | திண்டுக்கல் தேனி, கன்னியாகுமரி | வேட்டையாடுதல் | நாடோடி | இனச்சான்று சிக்கல் பெறுதலில் |
| 22. | மலைக் குறவன் | 7,080 | தமிழக-கேரள எல்லைகள் | வேட்டையாடுதல் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 23. | மலசர் | 4,162 | பொள்ளாச்சி தாலுகா | வன விளை பொருட்கள் சேகரித்தல் | நிலைத்த வாழ்வினர் | கொத்தடிமை முறை, நிலத்திலிருந்து அந்நியமாதல் |
| 24. | மலையாளி | 2,09,040 | சேலம், நாமக்கல் விழுப்புரம், திரு-வண்ணாமலை, வேலூர், தருமபுரி திருச்சி | விவசாயிகள் | காஞ்சிபுரத்-திலிருந்து வெளியேறி மலைகளில் வாழ்பவர்கள் | நிலம் இழப்பு |
| 25. | மலையக் கண்டி | 70 | திருநெல்வேலி | வனவிளை பொருள் சேகரித்தல் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 26. | மன்னன் | 40 | திருநெல்வேலி கன்னியாகுமரி | விவசாயக் கூலிகள் | நாடோடி | இனச்சான்று பெறுதலில் சிக்கல் |
| 27. | முதுகர்/ முதுவர் | 696 | கோயமுத்தூர் மாவட்டம் | வனவிளை பொருட்கள் சேகரித்தல் | நிலைத்த வாழ்வினர் | வன பொருட்கள் இல்லாமை, நிலம் அந்நியமாதல் |
| 28. | முத்துவன் | 311 | கோயமுத்தூர் மாவட்டம் | வனவிளைபொருள் சேகரித்தல் | நிலைத்த வாழ்வினர் | வனம் பொருட்கள் இல்லாமை, நிலம் அந்நியமாதல் |



படிப்பகம்

www.padippakam.com

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 29. | பழையன் | 19 | மதுரை மாவட்டம் | மலைகளில் வாழ்வோர் | நாடோடி | நிலம் அந்நியமாதல் |
| 30. | பலியன் | 1,818 | மதுரை, திண்டுக்கல், கொடைக்கானல் | வன விளை பொருட்கள் | நிலைத்த வாழ்வினர் | கொத்தடிமை முறை, நிலத்திலிருந்து அந்நியமாதல் |
| 31 | பள்ளியர் | 1,613 | கொடைக்கானல், மதுரை, தேனி | விளைபொருட்கள் சேகரித்தல் | நிலைத்த வாழ்வினர் | கொத்தடிமை முறை நிலத்திலிருந்து அந்நியமாதல் |
| 32. | பனியன் | 6,391 | நீலகிரி மாவட்டம் | வாசனைப் பொருட்கள் சாகுபடி, வன விளைபொருட்கள் சேகரிப்பு | நிலைத்த வாழ்வினர் | கொத்தடிமை முறை நிலத்திலிருந்து அந்நியமாதல் |
| 33. | சோழகர் | 4,828 | ஈரோடு மாவட்டம், சத்திய மங்கலம் தாலுகா | வன விளை பொருட்கள் சேகரித்தல், தொழிலுக்காக இடம் பெயர்தல் | நிலைத்த வாழ்வினர். மைசூரில் இருந்து குடி பெயர்ந்தோர் | கொத்தடிமை முறை நிலத்திலிருந்து அந்நியமாதல் |
| 34. | தோடர் | 874 | நீலகிரி மாவட்டம் | மாடு வளர்ப்பு, சால்வைகளில் எம்ப்ராய்டரி செய்வோர் (புலால் உண்ணாதார்) | நிலைத்த வாழ்வினர் | கொத்தடிமை முறை நிலத்திலிருந்து அந்நியமாதல் |
| 35. | ஊராளி | 9,224 | ஈரோடு மாவட்டம், சத்திய மங்கலம் | வன விளை பொருட்களை சேகரிப்போர், மண் வேலை செய்தல் | நிலைத்த வாழ்வினர் | கொத்தடிமை முறை நிலத்திலிருந்து அந்நியமாதல் |

**அனைத்து பழங்குடி மக்களின் பொதுவான பிரச்சினைகள்**

1. நிலப்பறிப்பு - நிலத்திலிருந்து அந்நியமாதல், நிலமாற்றத்தைத் தடை செய்ய சட்டங்கள் இயற்றப்படாதது.
2. வறுமை, கடன் தொல்லை.
3. கொத்தடிமை
4. குடியிருப்பு மனைகள் இல்லாமை.
5. அடிப்படை வசதிகளின்மை (பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை, மின்வசதி, சமூகக் கூடங்கள், கழிப்பிட வசதி)
6. கல்வியறிவு இன்மை.
7. தொடர்பு சாதனங்களின்மை
8. வேலைவாய்ப்பின்மை
9. போதிய மருத்துவ சுகாதார வசதிகளின்மை
10 ஊட்டச்சத்துக் குறைவு
11 தொழிலுக்காக இடம் பெயர்தல்
12 மத மாற்றம்.
13 பழங்குடிச் சான்றின்மை
14. அரசு விதிமுறைகள்; திட்டங்கள் பற்றி தகவலின்மை
15. போதிய தலைமைத்துவம் இல்லாமை



படிப்பகம்

www.padippakam.com

## தமிழக ஆதிவாசிகளின் குடும்ப வருமான பட்டியல்

| வரிசை எண் | குடும்ப வருமானம் [ரூபாயின் மதிப்பில்] | குடும்ப எண்ணிக்கை | குடும்ப வருமானம் | |
|---|---|---|---|---|
| | | | மொத்தம் | சராசரி |
| 1 | 5000-க்குள் | 5,797 | 1,45,61,076 | 2,511.83 |
| 2. | 5000-10,0 | 12,229 | 10,39,90,832 | 8,503.83 |
| 3. | 10,000-15,000 | 14,548 | 17,85,92,968 | 12,276.07 |
| 4. | 15,000-25,000 | 16,860 | 34,72,08,564 | 20,593.63 |
| 5. | 25,000-க்கு மேல் | 12,709 | 58,64,93,772 | 46,147.91 |
| மொத்தம் | | 62,143 | 1,23,08,46,512 | 19,806.68 |

இப்படி பெரும்பான்மையோர் ஆண்டு வருமானம் ரூ.15,000-க்கும் குறைந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இம்மக்கள், ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு, மலைப்பகுதிகளிலும் அதை யொட்டிய சமவெளிப் பகுதிகளிலும் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். பழங்குடிகளில் ஒவ்வொரு தனி நபருக்கும் நிலவுடைமை இல்லா திருப்பினும், அந்தந்த பழங்குடிகள் உபயோகித்து வந்த சமூக நிலங்கள் அவர்களின் முழு ஆதிக்கத்தில் இருந்து வந்தன. சமவெளி மக்களோ அல்லது மன்னர்களோ பழங்குடி மக்கள் கொண்டிருந்த நிலவுரிமையில் எந்தத் தலையீடும் செய்யவில்லை. வேறுபட்ட பழங்குடிகள் அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் ஆதியிலிருந்தே குடி யிருந்து வந்தார்களா அல்லது இடம் பெயர்ந்தவர்களா என்பதில் வரலாற்றாளர்களுக்குக் கருத்து வேறுபாடு உண்டு. உதாரணமாக, காலனியாதிக்கக் குறிப்புகளும், மாவட்ட கெஸட்டியர்களும், 14 முதல் 16-ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சம வெளியிலிருந்து இடம் பெயர்ந்து மலைப்பகுதியில் குடியேறியவர்கள் பெரும்பாலான பழங்குடியினர் என்ற கருத்தைத் தெரிவிக்கின் றனர். ஆனால் ஆதிகாலந்தொட்டே இவர்கள் மலைப்பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு நமது சங்க இலக்கியங்களில் ஆதாரங்கள் உள்ளன என்று பலர் கூறுகின்றனர். சில பழங்குடி இனங்கள் ஆதிக்காலந்தொட்டே வாழ்ந்திருக்க, வேறு சில பழங்குடி இனங்கள் 14 முதல் 16-ஆம் நூற்றாண்டுகளில் மலைப்பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தவர்கள் என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

பழங்குடி மக்களின் பொருளாதாரம் காட்டையும் காட்டு விளைபொருட்களையும் நம்பி இருந்தது. அவர்களின் உணவு, எரி பொருள், குடியிருப்புகள் அமைப்பதற்குத் தேவையான மரங்கள், விவசாயக் கருவிகள், ஆடுமாடுகளுக்குத் தேவையான தீவனங்கள், மூலிகைகள் மற்றும் அவர்களது பண்பாட்டு அடையாளங்கள் யாவையும் நிலமும், காடுகளும் தீர்மானிப்பவையாக விளங்கின. எல்லாப் பழங்குடிகளும் விவசாயங்களில் ஈடுபட்டார்கள் என்று கூற முடியாது. உதாரணமாக மலைப்பகுதியில் வாழும் இருளர்கள் காடு, விவசாயம் இவற்றில் ஈடுபட்டிருந்தாலும், சமவெளிப்பகுதி இருளர்கள் எலிகளை அழித்து சமவெளி விவசாயிகளுக்கு விவசாயத்தில் உறுதுணையாக இருந்ததோடு பாம்பு பிடிப்பதிலும் ஈடுபட்டு வந்தனர். கனியன் எனும் பழங்குடியினர் ஆருடக்கலை கைவரப் பெற்றவர்களாக இருந்துள்ளனர். குறும்பர் இனத்தவர் சிறு வனப் பொருள்களை சேகரிப்பதோடு தேன் சேகரிப்பைப் பிரதானமாகக் கொண்டு இருந்தனர். தோடர் இனம் மேய்ச்சல் கால் நடைகள், பால் பண்ணைத் தொழிலை ஆதாரமாகக் கொண்டவர்கள். ஆகையால் பழங்குடிகளை மூன்று பிரதான வகைகளாக நாம் பகுக்கலாம். நாடோடிகளாகச் சுற்றித் திரிந்தவர்கள், கால்நடை மேய்ச்சலில் ஈடுபட்டிருந்தவர்கள் மற்றும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்கள் என மூன்று வகையாகப் பகுத்தாலும் நாடோடி வகை நீங்கலாக பெரும் பான்மையினர் விவசாயம் சார்ந்தே இருந்து வந்துள்ள னர் என்பது மேலே தரப்பட்ட அட்டவணை மூலம் விளங்குகிறது.

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு நிலங்கள் தனியாரால் உரிமை கொண்டாட முடியாத சூழல் இருந்து வந்ததை நாம் ஏற்கனவே பார்த்தோம். பழங்குடிகள் கூட்டுச் சமுதாயமாக நிலத்தில் பயிரிட்டு வந்தனர். கால்நடைகளுக்கான பால் பண்ணைகள் (தோடர்) கூட்டுறவு அடிப்படையில் இயங்கி வந்தது. பழங்குடிப் பெண்கள் வனப் பொருள்களைச் சேகரிப்பதிலும், மேய்ச்சல் தொழிலிலும், விவசாயத்திலும் சமமாகப் பங்கேற்று உழைத்தனர். பழங்குடிகள் ஆரம்ப காலங்களில் சமவெளி மன்னர்களுக்கு எவ்வித வரியையும் செலுத்தியவர்களில்லை. ஆனால் காலப்போக்கில், தரகர்கள் மூலமாகவும், பழங்குடித் தலைவர்கள் மூலமாகவும் வரி செலுத்தியுள்ளனர். வரி விதிப்பு சில சமயங்களில் மிக் கடுமையாக இருந்தாலும், பழங்குடி பொருளாதாரத்தை அது பாதிக்காத நிலையில் இருந்து வந்தது.

இவ்வகையில், நில நிர்வாகத்தில் முழுச் சுதந்திரம் பெற்றிருந் ததால், பொருளாதாரத் தன்னிறைவோடும், சமூகத்தின் தனித்த அடையாளத்தோடும் அவர்களால் வாழ்க்கை நடத்த முடிந்தது. ஆனால் காலனி ஆதிக்கம் தொடங்கியதிலிருந்து, பழங்குடிகள் தங்கள் நிலங்களை இழக்கத் துவங்கினார்கள். இப்படி நிலம் அந்நிய மாகிய வரலாற்றை காலனி ஆதிக்கக் கா லம் மற்றும் இந்தியக் குடியாசு காலம் என இரண்டாகப் பிரித்து அறியலாம்.


படிப்பகம்

www.padippakam.com

# II. காலனி ஆதிக்கத்தில்தமிழகப் பழங்குடிகளுக்கு நேர்ந்த கதி

முதற்கட்டமாக அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டன. இப்படி பறிக்கப்பட்ட நிலங்கள் வெளிநாடுகளுக்கு காப்பி, தேயிலை ஏற்றுமதி செய்வதற்காக எஸ்டேட்டுகளாக மாற்றப்பட்டன. இந்தப் பணப்பயிர்களை விளைவிக்கவும் பாதுகாக்கவும் ஆங்கிலேயரும் பிறரும் அப்பகுதிகளில் குடியேறினர். காடுகளில் உள்ள சந்தன மரங் கள் வெட்டப்பட்டு சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வனப் பகுதி காப்பி, தேயிலைத் தோட்டங்களாக மாற்றப்பட்டு வனப் பகுதியிலுள்ள வளங்கள் கொள்ளையடிக்கப்பட்ட துடன், அனைத்து வனப் பகுதிகளும் வனப் பாதுகாப்பு என்ற பெயரில் ஆங்கிலேயரின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இதனால் காடு களில் பழங்குடியினர் சுதந்திரமாக உலவத் தடை கொண்டுவரப் பட்டது. இத். பழங்குடி மக்களின் பொருளாதாரத்தையும் வாழ்க்கையையும் சீர்குலையச் செய்தது.

பழங்குடி மக்களைப் பற்றி பொதுவாகக் கருத்துத் தெரிவிப்பவர்கள் அவர்களை கல்வி அறிவு பெறாதவர்கள், பழமையான விவசாய முறையைக் கையாள்பவர்கள், நூதனமான சமூகப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருப்பவர்கள், இக்காரணங்களால்தான் ஏழ்மை நிலையில் உள்ளார்கள் என்று கூறி வருகிறார்கள். இதனடிப் படையில், அவர்கள் வாழ்நிலை உயரவேண்டுமானால், அவர்கள் பிற மக்களைப் போல் நாகரீகமாக வாழ வேண்டும், கல்வியில் முன்னேற்றம் பெற்று போட்டி அடிப்படையில் பொருளாதாரத்தில் முன் னேற வேண்டும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்காக, அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிற திட்டங்களைக் கொண்டு அவர்கள் வாழ்நிலையை உயர்த்திக்கொள்ள முன்வர வேண்டும், பழைய சமூக பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கிறார்கள். ஆனால் பழங்குடி மக்கள் பற்றி ஆய்வு செய்த பலரின் ஒருமித்த கருத்து யாதெனில், அவர்களுக்கு அவர்கள் நிலங் கள் திருப்பியளிக்கப்பட வேண்டும் என்பதே.

### அ. காப்பித் தோட்டங்கள் X பழங்குடி மக்கள்

நான் தமிழக அரசின் ஆதிதிராவிட நலத்துறை செயலாளராகப் பொறுப்பில் ஒரு வருட காலம் இருந்தபோது (2001-2002), கோத்தகிரிக்கு அருகிலுள்ள மாமரம் பகுதியிலுள்ள வெள்ளரிக் கோம்பையிலுள்ள குறும்பர் குடியிருப்பிற்குச் சென்று ஒரு நாள் தங்கியிருந்தேன். அவர்களின் குடிசைகளை ஒட்டி புது காப்பிச் செடி கள் பயிரிட்டிருப்பதை கவனித்தேன். அது அவர்களுக்குச் சொந்த மான நிலத்தில் பயிரிடப்பட்டிருந்தது. பழங்குடி மக்களும் காப்பியை விரும்பி பயிரிடுகிறார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் அவர் களோ குடிநீருக்கே இரண்டு கல் தொலைவு மலையில் ஏறியும் இறங் கியும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், எவ்வித விவசாயமும் செய்ய முடியாது என்பதாலும், பெருகிய காப்பித் தோட்டங்களின் விளைவாக அவர்கள் குடியிருப்புகள் வனப்பகுதிக்கு தள்ளப்பட்டி ருந்ததால் யானைகளும், பன்றிகளும், குரங்குகளும் அவர்களின் புன்செய் பயிர்களையும், பழ மரங்களையும் நாசம் செய்து வந்ததால் வேறு வழியில்லாமலும் காப்பி பயிரிட்டதாகத் தெரிவித்தார்கள். மிச் சிறிய காப்பித் தோட்டங்கள் எந்த வகையிலும் அவர்களின் உணவுத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில், அரு கிலுள்ள காப்பித் தோட்டங்களில் கூலி வேலை செய்து வந்தார்கள். அவர்களது இல்லங்களில் அடுத்த வேளை உணவுக்கான தானியம் கூட இருக்கவில்லை. இப்படி அவர்கள் வாழ்க்கையை நாசம் செய் திருந்தன காப்பித் தோட்டங்கள். இக்காப்பித் தோட்டங்கள் 19-ஆம் நூற்றாண்டில்தான் தமிழகத்தின் சேர்வராயன், நீலகிரி மலைப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டன. இக்காப்பித் தோட்டங்களை அமைக்க ஆங்கிலேயக் குடியேறிகளுக்கு ஊக்கமும், சலுகையும் வழங்கப்பட்டது.

ஏற்கனவே நீண்ட பாரம்பரியமிக்க பழங்குடிகள் அப்பகுதி யில் வசித்தபோது, எப்படி ஆங்கிலேயர்களை அங்கு குடியேற்ற அனு மதித்தது ஆங்கிலேய அரசு? இந்தக் கேள்வியை யாரும் கேட்க முடி யாது. ஏனெனில் அமெரிக்காவில் உள்ள பூர்வக்குடிகள் வசித்த பகுதிகளுக்கு ஆங்கிலேயர்கள் 'இங்கே நிலம் காலியாக இருக்கிறது' என அறிவுப்புச் செய்து தம்மின மக்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். ஏனெனில் அவர்களைப் பொறுத்தவரை நிலத்தில் நீண்ட காலம் வாழ்ந்து இயற்கையான குடியுரிமை பெற்றிருந்தால் மட்டும் போதாது. அந்த நிலங்களைப் போரிட்டுப் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அந்நிலப்பகுதிக்கு சிவில் உரிமை கிடைக்கும் என்று தங்களுக்கு சாதகமாக நினைத்து வந்தார்கள். அதன் காரணமாக அமெரிக்க பூர்வக்குடிகளின் நிலங்களைப் பறித்து அவர்களைக் கொன்றொழித்தார்கள். மேலும் இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் தின் கீழ் இருந்ததால், ஆங்கிலேயக் குடியேறிகள் பழங்குடி மக்களை பொருட்படுத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆங்கிலக் குடி யேறிகள்தான் பழங்குடி மக்களின் நிலங்களை அபகரித்தார்கள் என் றில்லை காலனி அரசின் நிர்வாகத்தில் பணிபுரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும், நீதிபதிகளும்கூட பெருமளவில் ஆதிவாசி நிலங் களை அபரித்துள்ளார்கள்.

1795 ஆம் ஆண்டு, சேலம் மட்டும் பாரமஹால் மாவட்ட ஆட்சியர் கர்னல் ரீட், திருப்பத்தூரில் உள்ள பாரமஹால் என்னு மிடத்தில் காப்பியினை முதன்முதலில் அறிமுகம் செய்தார். ஆனால் அவரது முயற்சி பலிக்கவில்லை. காப்பிச் செடிகள் அழிந்து போயின. பிறகு ஜவ்வாது மலைப்பகுதியில் ஒரு சில இடங்களில் காப்பி பயிரிடப்பட்டது. 1825-ஆம் ஆண்டு சேர்வராயன் மலைப் பகுதியில், ஜி.எப். ஃபிஷ்ஷர் என்பவரால்



படிப்பகம்

www.padippakam.com

எம்.டி. கர்க்பான் என் பவரின் நிர்வாகத்தில் காப்பி முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. 1885-ஆம் ஆண்டு சேர்வராயன் மலைப்பகுதியில் 10,789 ஏக்கர் நிலப் பரப்பில் 331 காப்பித் தோட்டங்கள் இருந்தன. இப்படி பெரும்பாலான காப்பித் தோட்டங்கள் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியவையே. மலையாளிகளிடமிருந்த நிலங்கள் விற்பனை என்ற பெயரில் ஏறக்குறைய இலவசமாக பெறப்பட்டுள்ளன. உதார ணமாக 1860-இல் பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகள் ஒரு ஏக்கர் நிலத்தை எட்டு அணாவுக்கு வாங்கியுள்ளனர். இந்த விவரம் 1869-ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் தலைமைச் செயலருக்கு அனுப்பிய கடிதத்தில் உள்ளது.

சேலம் மாவட்ட ஆட்சியர் காக்பான் தன்னுடைய அதிகா ரத்தை துஷ்பிரயோகம் செய்து முத்து நாட்டிலுள்ள முக்கியமான நிலங்களை தன்னுடையதாக்கிக்கொண்டு பழங்குடி மக்களை விரட்டி அடித்துள்ளார்.

இப்படி நிலங்கள் பறிக்கப்பட்டது போதாதென்று 1882 மதராஸ் வன ஆணைப்படி சுமார் 68,751 ஏக்கர் அதாவது 107 சதுர மைல்கள் கொண்ட நிலப்பரப்பு சேர்வராயன் மலைப்பகுதியில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக 1892-ஆம் ஆண்டு அறிவிக்கப் பட்டது. இதன் விளைவாக மலையாளிகள் இப்பகுதியினை உப யோகிப்பது தடை செய்யப்பட்டது.

பிறகு, 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், சேர்வராயன் மலைப்பகுதி அளக்கப்பட்டு 1904-05 ஆண்டுகளில் அதாவது மிகச் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பாக நில நிர்ணயம் செய்யப் பட்டது. வருவாய் கணக்குப்படி 9685.5 என்றளவில் இருந்த நிலத்தின் வருவாய் ரூ.9,081 மற்றும் 7 அணாக்கள் என்பது நில அளவைக்கு முன்பிருந்த நிலை. நில அளவைக்குப் பிறகு நிலம் 12,089.74 ஏக்கராக வும், நில வருவாய் மதிப்பு 11,072 மற்றும் 15 அணாக்களாகவும் உயர்ந்தது. இவ்வாறு நிலத்தின் மேம்பாட்டுக்கு எவ்வித உதவியும் செய்யாமல் வருவாய் மட்டும் உயர்த்தப்பட்டதால், பழங்குடி மக்கள் மீது வரிச்சுமை கூடியது. இவ்வாறு காப்பித் தோட்டங்களினால் பழங்குடி மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டதோடு அவர்கள் வச மிருந்த சொற்ப நிலங்கள மீது கூடுதல் வரி விதிக்கப்பட்டு, காப்பித் தோட்டங்களின் கூலிகளாக மாறும் நிலைக்கு அவர்கள் தள்ளப் பட்டனர்.

### ஆ. பழங்குடிகளும் காடுகளும்

பழங்குடி மக்கள் வசித்த மலைப்பகுதிகளில் காடுகளை பெருமளவில் அழித்து காப்பித் தோட்டங்களை உருவாக்கியதோடு, வனச்செல்வங்களை கொள்ளை அடிப்பதில் ஈடுபட்டு வந்த அரசு, வனப்பாதுகாப்பு என்ற பெயரில் வன ஆணைகளை ஏற்படுத்தி பழங்குடி மக்களை நிராதரவான நிலைக்குத் தள்ளியது.

1856-இல் மெட்ராஸ் பிரசிடென்சியில் வன இலாக்கா என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டது. 1865-இல் முதல் வன ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையின் படி, பழங்குடி மக்கள் நீர் நிலைகள், மேய்ச்சல் நிலங்கள், வனவிளைபொருள்களை உயோகிக்க உரிமை பெற்ற பின்னரே அனுமதிக்கப்பட்டனர். இந்த உரிமைகளுக்கு கால வரம்பு உண்டு. மேலும் பல நிபந்தனைகளுடனேயே இவ்வுரிமை வழங்கப்பட்டது. தடை செய்யப்பட்ட வனப்பொருள் களை பழங்குடி மக்கள் பயன்படுத்தினால் ரூ. 500 அபராதம் அல்லது ஆறு மாதம் சிறை அல்லது இவையிரண்டுமே விதிக்கப்பட்டன. காடுகளில் மேய்ச்சல் தடை செய்யப்பட்டது. மீறினால் ரூ.200 அபராதம் அல்லது ஒரு மாதம் சிறை அல்லது இவையிரண்டுமே விதிக்கப்பட்டன. இதே சமயத்தில் காப்பி பயிரிட்ட ஆதிக்கவாதி களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டதோடு குத்தகை அனுமதியும் நீட்டிக்கப்பட்டது. இவையெல்லாம் பழங்குடி மக்களை தோட்ட முதலாளிகளின் அடிமைகளாக மாற்றும் திட்டமிட்ட சதி என்பதைப் புரிந்து கொள்வது கடினமானதல்ல.

1872-இல் வனத்துறை அந்தந்த மாவட்ட ஆட்சியரின் பொறுப்பில் விடப்பட்டது. 1883 வரை காடுகளில் சிறுவனப் பொருள்களை சேகரிக்கும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டது. பிறகு இது வனத்துறைக்கு மாற்றப்பட்டது. தமிழக வன ஆணைப்படி 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பெருமளவில் காடுகள் பாதுகாக் கப்பட்ட வளங்களாக அறிவிக்கப்பட்டன. 11,72,314 ஏக்கர் அதாவது 1672 சதுர மைல் பரப் பளவுள்ள பாதுகாக்கப்பட்ட வனம் உருவாக்கப்பட்டது. மாவட்ட வாரியாக அதன் விவரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| செங்கல்பட்டு | 53,808 ஏக்கர் |
| வட ஆற்காடு | 1,73,480 ஏக்கர் |
| தென் ஆற்காடு | 1,55,821 ஏக்கர் |
| திருச்சி | 4,176 ஏக்கர் |
| மதுரை | 1,96,182 ஏக்கர் |



படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| திருநெல்வேலி | 2,01,923 ஏக்கர் |
| சேலம் | 28,188 ஏக்கர் |
| கோயம்புத்தூர் | 2,22,996 ஏக்கர் |
| நீலகிரி | 37,740 ஏக்கர் |

1882 ஆணையைப் பின்பற்றி வன இலாக்கா பழங்குடி மக்கள் மீது பலவிதமான தடைகளை ஏற்படுத்தியது. 1914-15இல் ஆரம் பிக்கப்பட்ட வனமலை கிராமத்திட்டம் இதற்கு ஒரு உதாரணம். இத்திட்டத்தின்படி பழங்குடி மக்கள் ஆடுகளை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் மேய்க்கக்கூடாது. குறிக்கப்பட்ட கிர்ாமங்கள் காட்டு விளைபொருள்களை, குறிப்பாக சந்தன மரங்களைப் பாதுகாக்க வேண்டும். எல்லைக் கோடுகளையும், ஒற்றையடிப் பாதைகளையும சீராக வைத்திருப்பது பழங்குடி மக்களின் பொறுப்பு. வன இலாக்கா அதிகாரிகளுக்கு பணிவிடை செய்வதும், அவர்களின் பொருள்களை சுமப்பதும் அவர்களின் வேலைகளில் ஒன்று இப் படிப்பட்ட வேலைகளுக்கு இவர்களுக்கு மிகக் குறைந்த அளவு ஊதியம் வழங்கப்பட்டது. பாதுகாக்கும் பணியிலிருந்து தவறும் கிராமங்கள் தங்கள் வருமானத்தை இழக்க நேர்ந்தன. வெளியாட்கள் செய்யும் தவறுகளுக்கெல்லாம் பழங்குடி மக்களே பொறுப்பாக் கப்பட்டனர். இப்பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியிலிருந்து ஆதி வாசி மக்கள் சிறிய அளவில் விறகுகள், மூங்கில்கள் மற்றும் விவ சாயத்திற்குத் தேவையான மரக்கட்டைகளை மட்டுமே பெற அனுமதி உண்டு.

இவ்வாறு வன ஆணைகளும், வன இலாக்காவின் தோற்றமும் பெருமளவில் பழங்குடிகளை அவர்களது நிலத்திலிருந்து பிரித்த தோடு அவர்களை கூலிக்காரர்களாக மாற்றின.

### இ. பழங்குடிகளின் வாழ்விடங்களில் பழங்குடி அல்லாதோரின் ஆக்கிரமிப்பும் குடியேற்றமும்

1871 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மலைப்பகுதிகளில் பழங்குடி அல்லாதோர் வாழ்ந்ததற்காக அடையாளம் இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிக்கொடுமைகளுக்குப் பயந்து மலைப் பகுதியில் குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து பிற்பட்ட வகுப்பினர், குறிப்பாக வன்னியர்கள், வெள்ளாளர்கள். நாவிதர்கள் மற்றும் சலவைத் தொழிலாளிகள் போன்றோர், மலைப்பகுதிகளில் நிலங்களின் விலை குறைவாக இருந்த காரணத்தினால் அங்கு குடியேறினர். 19-ஆம் நூற்றாண்டின் இடையில் பிரிட்டிஷ் தோட்டக் காரர்களின் குடியேற்றத்தைத் தொடர்ந்து, பிறரும் குடியேறத் தொடங்கியதால், பழங்குடி மக்களின் நிலங்கள் பழங்குடி அல்லா தோரிடம் சேர்ந்தன.

### ஈ. வரிவிதிப்பு

1904-05ஆம் ஆண்டு சேர்வராயன் மலைப்பகுதி அளக்கப் பட்டு, நிலத்தின் மதிப்பு உயர்த்தப்பட்டது விளைவாக பழங்குடி மக்கள் கூடுதலாக வரி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் ஏறக்குறைய 66% நிலங்கள் அளக்கப்பட்டு அவற்றின் மதிப்பு 16% உயர்த்தப்பட்டது. 1936-ஆம் ஆண்டு புதிய நில அளவை திட்டத்தின்படி மீண்டும் நிலவரி உயர்த்தப் பட்டது.

இவ்வாறு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்போது பழங்குடி மக்களின் நிலங்கள் காப்பி, தேயிலைத் தோட்டங்களாக மாற்றப்பட்டு வனப் பாதுகாப்பு என்ற பெயரில் வன ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பழங்குடி அல்லாதோரின் குடியேற்றம் மற்றும் கூடுதல் வரிவிதிப் பின் காரணமாக அவர்களிடமிருந்து விரைவில் அந்நியமாகியது.

## III. ஆங்கிலேயர்களுக்குப் பிறகு....

### அ. அரசியல் சாசனம்

அண்ணல் அம்பேத்கர் தலைமையேற்று இயற்றி தொகுத்த இந்திய அரசியல் சாசனம் பழங்குடி மக்களின் மேம்பாட்டைக் கருத் தில் கொண்டு பழங்குடிகளின் பாதுகாப்புக்கான திட்டத்தை வகுத் தது. அரசியல் சாசன சிற்பி அம்பேத்கர் அவர்கள் பழங்குடி மக்களின் பண்டைய உயரிய வாழக்கை முறைகளைச் சித்தரித்து, தேசம் அவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை எடுத்துரைத்து சில முக்கிய பிரிவுகளை ஏற்படுத்தினார். இவை ஐந்தாவது மற்றும் ஆறாவது அட்டவணைகள் என்று அழைக்கப்படுகின்றன. பழங்குடி நிலங் களைப் பாதுகாப்பது தொடங்கி பழங்குடி மக்களின் பண்பாட்டு சமூக, பொருளாதார



படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சியையும் கல்வி மேம்பாட்டையும் குறித்த பல உறுதிகளை இவை அளிக்கின்றன. இவ்வட்டவண்ண யிலுள்ள பிரிவுகள் பழங்குடி மக்கள் வாழுமிடங்களை இந்த ஐந் தாவது மற்றும் ஆறாவது அட்டவணையின்கீழ் கொணர்ந்து அவர்களின் நலன்களைப் பாதுகாத்தல், மாநில ஆளுநரின் கடமைகள் குறித்து தெளிவான வரையறைகளை முன்வைக்கின்றன. அதன்படி

• பழங்குடி பகுதிகளில் பழங்குடி அல்லாதாருக்கு நிலமாற்றம் செய்யப்படுவது தடை செய்யப்பட வேண்டும். • பழங்குடிகளுக்கு முறையாக நிலம் வழங்கப்படுதல் வேண்டும். • பழங்குடி மக்களுக்கு கடன் அளிப்பவர்களுக்கான விதி முறைகளைக் கொணர்தல் வேண்டும்.

• மேற்கண்டவற்றை நடைமுறைப்படுத்த தேவைப்படின் சட்டங்கள் இயற்றுதலோ அல்லது சட்டத்தில் மாற்றங்களோ செய்யப்பட வேண்டும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இவை நடைமுறைக்கு வரும். மேற்கண்ட விதிகளை அமல்படுத்த, நெறிப்படுத்த மாநில பழங்குடி ஆலோசனைக் குழுக்கள் இருக்கும் பட்சத்தில் அவை கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

• பழங்குடிகள் வாழும் பகுதிகளில் சிறப்பு நிர்வாகப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். • மத்திய அரசு பழங்குடிகள் நலனுக்கென தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். • சட்ட சபையில் இடங்களை ஒதுக்க வேண்டும். • தனிப்பட்ட நியமனங்கள் வழங்க வேண்டும். • பழங்குடி மக்கள் வளர்ச்சிக்காக சிறப்பு அதிகாரிகளை நியமிக்க வேண்டும். • தேவைப்படின் பழங்குடி மக்கள் நலனை மத்திய அரசின் நேரடி கண்காணிப்பில் கொணரலாம்.

இந்த அரசியல் சாசனப் பிரிவுகளே இன்று பழங்குடி மக்க ளின் நில உரிமைக்கும், வாழ்வுரிமைகளுக்கும், பாதுகாப்புக் கும் ஆதாரமாக விளங்குகின்றன. மேலும் இந்த 5-ஆவது மற்றும் 6-ஆவது அட்டவணைகளின் சிறப்பு யாதெனில், பழங்குடி மக்கள் தங்கள் நிலம் சார்ந்த கலாச் சாரத்தோடு தனித்தன்மையோடு வாழ இவை வழிவகுப்பதோடு, அரசாங்கத்திலும், அரசு அலுவல கங்களிலும் முக்கியப் பொறுப்புக்களை வகிக்கவும், பிறரோடு கலந்து பழகுவதற்குமான சாத்தியங் களை இவை கொண்டுள்ளன.

அரசியல் சாசன சட்ட வரைவுக்கான விவாதங்களைப் படித் தால் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் பழங்குடி மக்கள் மீது கொண் டிருந்த அக்கறையும், தொலைநோக்கும் தெளிவாக விளங்கும்.

### நடைமுறையில்

எனினும் நடைமுறையில் முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் பழங்குடிகளுக்கென எவ்விதத் தனித்திட்டமும் கொண்டுவரப் படவில்லை.

❖ 1959-இல் 43 பல்நோக்கு பழங்குடி வளர்ச்சி அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

❖ 1968-இல் மேலும் சில அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

❖ 1972-இல் பழங்குடி மக்கள் வளர்ச்சி முன்னோடி திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

❖ அதே வருடம் பழங்குடி மக்கள் பகுதி வளர்ச்சித் திட்டம் கொண்டு வரப்பட்டது.

❖ 1975-இல் மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் கொண்டுவரப் பட்டது.

மேற்கண்டவை தவிர 1950-1975 ஆகிய இருபத்தைந்து ஆண்டுகளில் குறிப்பிட்டுச் சொல் லும்படியான திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. இந்த குறைந்தபட்ச திட்டங்களுக்கு செலவிடப்பட்ட தொகையும் மிக மிகக் குறைவு.

தமிழகத்தில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முதல் ஐந் தாவது ஐந்தாண்டு திட்டங்கள் வரையில் தமிழகப் பழங்குடி மக்கள் 1.2 சதவிகிதம் இருந்தும், நிதி ஒதுக்கீடானது இரண்டாவது ஐந் தாண்டு திட்டத்தில் மொத்த ஒதுக்கீட்டில் 0.17 சதவிகிதமும், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் 0.12 சதவிகிதமும், நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் 0.14 சதவிகிதமும், ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் 0.10 சதவிகதமும் இருந்தது நமது கூற்றை உறுதிப்படுத்துகிறது.

### ஆ. பழங்குடி துணைத் திட்டம்

ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் இறுதிக் கட்டத்தில், அதாவது 1978-ஆம் ஆண்டுதான் மத்திய அரசினால் பழங்குடி துணைத் திட்டம் உருவாக்கப்பட்டது. அதற்குப் பிறகே மாநில அரசின் கடைக்கண் பாரவை தமிழகப் பழங்குடிகள் மேல் விழுந்தது.

*பழங்குடித் துணைத் திட்டத்தின் முக்கியக் கூறுகளாவன*

❖ ஐம்பது சதவிகிதம் பழங்குடி வாழும் பகுதிகள் ITDP பகுதி களாக, அதாவது ஒருங்கிணைக் கப்பட்ட பழங்குடி மக்கள் வளர்ச்சித் திட்டப் பகுதிகளாக அறிவித்தல்.

❖ பத்தாயிரம் பேர் மக்கள் தொகை உள்ள இடங்களில் 50 சத விகிதத்திற்கு மேல் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தால், அங்க திருத்தி யமைக்கப்பட்ட வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தல். (ஏறத்தாழ ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மத்திய அரசின் ஆணைப்படி. பத்தாயிரம்



படிப்பகம்

பேர் என்பது ஐந்தாயிரம் பேர் உள்ள இடங்களையும் உள்ளடக்குமாறு திருத்தம் கொண்டு வரப்பட்டது.)

www.padippakam.com

❖ மேற்கண்ட வேலைத்திட்டங்களை செயல்படுத்த ஒவ்வொரு மாநில அரசும் தங்கள் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து, பழங்குடி மக்கள் தொகைக்கேற்ப விகிதாச்சார நிதி ஒதுக்கீடு செய்தல். (இந்தக் கணக்கை முதலாவது ஐந்தாண்டு திட்டத்திலிருந்து கணக்கிட்டால், பழங்குடி மக்களுக்கு சேர வேண்டிய தொகை பல கோடிகள் ஒதுக்கப்படாமலிருந்த நிலை தெரியவரும்.)

❖ மத்திய அரசின் சமூக நல அமைச்சகம் மூலம் சிறப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்.

❖ நிறுவன நிதி(Institutional Finance)-யிலிருந்தும் நிதிகள் பெறப் பட வேண்டும்.

*தமிழகத்தின் ஐந்தாவது அட்டவணை நிறைவேற்றப்பட்டதா?*

அரசியல் சாசனத்தின் முக்கிய சரத்துக்கள் பழங்குடி மக்களின் நிலம் பற்றியதாக இருந்தாலும், பழங்குடி மக்கள் முன்னேற்றம் பற்றிய எந்தத் திட்டங்களிலும் நிலம் முக்கிய இடத்தைப் பிடிக்கவில்லை.

ITDP திட்டத்தின் கீழ் தமிழகத்தின் வடக்கு மற்றும் வட மேற்குப் பகுதிகளில் உள்ள 5 மாவட்டங்களில் 9 பழங்குடி வளர்ச்சித் திட்டப் பகுதிகள் உருவாயின. அவை மாவட்ட வாரியாக பின் வருமாறு:

*தமிழகத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினருக்கான வளர்ச்சித் திட்டம் - மாவட்டம் வாரியாக :*

| மாவட்டத்தின் பெயர் | வ.எண் | ஒருங்கிணைந்த பழங்குடியின வளர்ச்சித் திட்டம் |
|---|---|---|
| சேலம் | 1 | ஏற்காடு |
| | 2 | கல்வராயன் |
| | 3 | அரனூத்துமலை |
| | 4 | பச்சமலை |
| நாமக்கல் | 5 | கொல்லிமலை |
| வேலூர் | 6 | ஏலகிரி |
| விழுப்புரம் | 7 | கல்வராயன் |
| திருச்சி | 8 | பச்சமலை |
| தர்மபுரி | 9 | சித்தூர் |

இத்திட்டங்கள் காரணமாக ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலம் முதல் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்ந்தாலும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் பழங்குடி மக்கள் தொகைக்கு ஈடான அளவு மொத்த நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**6-ஆவது ஐந்தாண்டு திட்டம் முதல் 9-ஆவது ஐந்தாண்டு திட்டம் வரை தமிழகத்தில் ஆதிவாசிகள் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு (ரூபாய் லட்சங்களில்)**

| திட்டங்கள் | மொத்த ஒதுக்கீடு | ஆதிவாசிகளின் வளர்ச்சி | சதவீதம் 2 லிருந்து |
|---|---|---|---|
| 6-ஆவது ஐந்தாண்டு திட்டம் | 3,64,461 | 2,167.00 | 0.59 |
| 7-ஆவது ஐந்தாண்டு திட்டம் | 6,31,744 | 6,932.00 | 1.10 |
| 8-ஆவது ஐந்தாண்டு திட்டம் | 1,40,680 | 10,621.70 | 0.76 |
| 9-ஆவது ஐந்தாண்டு திட்டம் | 25,00,000 | 27,432.00 | 1.10 |

இந்நிதி புதிய பள்ளிக்கூடங்கள், உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்கவும், விடுதிகள் கட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரிய பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும் (ITDP இல்லாத பகுதிகளில்), மலைப்பகுதி பழங்குடிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வன ஊழியத் தொடர்பு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கும், பழங்குடிப் பகுதிகளில் அடிப்படை வசதிகள், தொகுப்பு வீடுகள், மருத்துவ வசதிகள் ஆகியவற்றுக்கு செலவிடப்பட்டது. பெரிய பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயக் கடனுதவிகளும் வழங்கப்பட்டன. இவ்வளவு திட்டங்கள் செயல் படுத்தப்பட்ட பிறகு பழங்குடி மக்களின் நிலை என்ன?

- தொடரும்

Published, Printed and owned by Audrey Jannet joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai - 41.
Printed at Sri Lakshmi Printers, 20 Big Street, Anakaputhur - 600 070, Editor : AUDREY JANNET JOSEPH

படிப்பகம்

www.padippakam.com

## தலித் கலை விழா

நாள் : 12.11.2005
நேரம் : மாலை 6 மணி
இடம்: திரிபுவனம் அருகிலுள்ள அகரம் காலனி (மதுரையிலிருந்து 25 கி.மீ.)

நிகழ்ச்சி ஏற்பாடு : சுப்பு
தொடர்புக்கு :
(04574-265694/98421-73861)

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

நாள் : 18.11.2005
நேரம் : காலை 10 மணி
இடம் : திருவள்ளூர்

தொடர்புக்கு :
*ஜாய்ஸ் ரோசலின்*

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

நாள் : 30.11.2005
நேரம் : காலை 10 மணி
இடம்: திருவண்ணாமலை-வேலூர் சாலையிலுள்ள சிங்காரவேலன் திருமண மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :
பெரு. வெங்கடேசன்
தொடர்புக்கு
93822-99409

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

*நாள்: 10.11.2005*
*நேரம்: காலை 10 மணி முதல் 1 மணி வரை*
*இடம்: சோழர் சரவண மஹால், கொடுமுடி மெயின் ரோடு, ஈரோடு.*

*தொடர்புக்கு* : **சக்திவேல்** *(0424-2500253)*

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

நாள் : 10.11.2005
நேரம் : மாலை 3 மணி முதல் இரவு 7 மணி வரை
இடம் : லீட் அலுவலகம், கரூர்

தொடர்புக்கு :
**ராதா, லீட்**
(98424-51234)

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

நாள்: 3.11.2005
நேரம்: காலை 10 மணி முதல்
இடம் தலித் ஆதார மய்யம், அரசரடி, மதுரை

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு:
**அய்யங்காளை**
தொடர்புக்கு : 98652-03245

www.padippakam.com


கோ-ஆப்டெக்ஸ் காலத்திற்கேற்ற புதுமையுடனும்
பாரம்பரியப் பெருமையுடனும்...
1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை
உங்களுக்காகவே வழங்குகிறது.



- ★ காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
- ★ சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
- ★ ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
- ★ கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
- ★ உறையூர் பருத்தி சேலைகள்
- ★ சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
- ★ மதுரை சுங்கடி புடவைகள்
- ★ சென்னிமலை ஏற்றுமதி தரம் வாய்ந்த படுக்கை விரிப்புகள்
- ★ கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த எரலை துண்டுகள் (டவல்கள்)
- ★ குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
- ★ தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்

NATURAL SILK

இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.
வாருங்கள். பாருங்கள். வாங்குங்கள் - முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.

கோ-ஆப்டெக்ஸ்

Visit us at: www.tn.gov.in
www.cooptex.com

ஆண்டுதோறும் 1.00.000 பட்டு புடவைகள். 3.00.000 பருத்தி புடவைகள் 10.00.000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10.00.000 டவல்கள் விற்பனை செய்யப் படுகின்றன. டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்


Postal Regn No. TN/PMG(CCR)/842/03-05 Registrar of Newspapers for India Regn. No. TNTAM/2001/4926

படிப்பகம்